REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk / ThinakaranLK
2024 மே 16 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 ANNIVERSARY தினகரன்
வரு. 92 இல. 116 | Thursday 16, May, 2024 | 16 பக்கங்கள் | 50/-




# புதிய சட்ட முறைமையுடன் புதிய அரசியல் கலாசாரமொன்று உருவாக்கப்படும்!



தெற்காசியாவில் புதிய சட்டங்களைச் செயற்படுத்தும் நாடாக இலங்கை மாறியுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 75 புதிய சட்டங்களை நிறைவேற்றி உள்ளதாகவும் தெரிவித்தார்.

தெல்தெனிய புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை நேற்று (15) திறந்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது: திருடர்களைப் பாதுகாப்பதாக சிலர் குற்றம் சுமத்தினாலும் தற்போதைய அரசாங்கம் திருடர்களைப் பிடிப்பதற்காக இரண்டு ஆண்டுகளில் 75 சட்டங்களை கொண்டுவந்துள்ளது. ஊழல் ஒழிப்பை அரசியல் கோசமாகப் பயன்படுத்தும் யுகம் முடிவுக்கு வரும். ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை சட்டத்தை அமுல்படுத்துவதில் தங்கியுள்ளது. ஒரு நாடு சர்வதேச அங்கீகாரச் சட்ட கட்டமைப்பின் செயற்பாட்டில் அடங்கியுள்ளது.



'ஊழல் எதிர்ப்பை' அரசியல் கோசமாக பயன்படுத்திய காலம் முடிந்துவிட்டது. தெல்தெனிய புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதியை திறந்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

■ திருடர்களைக் காக்க வந்ததாகக் கூறப்பட்ட அரசாங்கம் திருடர்களைப் பிடிக்கச் சட்டம் கொண்டு வந்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 75 புதிய சட்டங்கள் நிறைவேற்றபட்டுள்ளன

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கத்தால், தெல்தெனிய நகரிலிருந்த பழைய தெல்தெனிய நீதவான் நீதிமன்றம் நீரில் மூழ்கியது. அடுத்து தெல்தெனிய கரலியத்த புதிய நகர நிர்மாணத்தின் போது தெல்தெனிய நீதிமன்ற கட்டடம் உடைத்து அகற்றப்பட்டது. இந்த இடத்தில் நீதி அமைச்சினால் இப்புதிய நீதிமன்ற வளாகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மூன்று மாடிக் கட்டடம் கொண்ட தெல்தெனிய நீதிமன்ற வளாகத்தில், நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் ஏனைய வசதிகள் உள்ளன. தெல்தெனிய, ரங்கல, உடுதும்பர, பல்லேகல,

06

## ஆட்கடத்தலில் ஈடுபடுவோரை ஆழமாக அவதானிக்கிறது அரசு

### நிரூபணமானால் தகுந்த தண்டனை



ஆட்கடத்தலில் ஈடுபடும் நபர்களுக்கு தராதரம் பாராமல் அதிகபட்ச தண்டனை வழங்கப்படுமென பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

ரஷ்ய -உக்ரைன் போரில் பங்கெடுக்க நாட்டிலிருந்து ஆட்களை கடத்திச் சென்றோர் பற்றி

06

கற்பித்தலுக்கு உட்படாத வினாக்களை கருத்திற்கொண்டு தீர்மானம்

## க.பொ.த விஞ்ஞான பாட வினாத்தாள்: 09, 39 வினாக்களுக்கு 2 மேலதிக புள்ளிகள்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில் இம்முறை விஞ்ஞான பாட வினாத்தாளின் இரண்டு கேள்விகளுக்கு இரண்டு புள்ளிகளை மேலதிகமாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

விஞ்ஞான பாட வினாத்தாளில் 9 மற்றும் 39 ஆகிய வினாக்களுக்காகவே இவ்வாறு இரண்டு புள்ளிகள் மேலதிகமாக வழங்கப்பட உள்ளன. இம்முறை கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையில்

06

## அஸ்வெசும இரண்டாம் கட்டம்: 450,404 விண்ணப்பங்கள் ஏற்பு

அஸ்வெசும கொடுப்பனவின் இரண்டாம் கட்டத்துக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்காக இதுவரை, 450,404 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். கிடைத்துள்ள விண்ணப்பங்களில் 84 வீதமானவை தற்போது வரை கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 2000 கிராம அலுவலர்களும் அஸ்வெசும கொடுப்பனவு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். விநியோகச் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கில் இவர்கள்

06



## சீதா எலிய கும்பாபிஷேகத்தில் திருப்பதி சார்பாக 5000 லட்டுக்கள்



சீதா எலிய ஆலய வருடாந்த மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் (19) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு, திருப்பதி ஆலயம் சார்பாக கலந்துகொள்ளவுள்ள பக்தர்களுக்கு ஐயாயிரம் லட்டுக்கள் வழங்கப்படவுள்ளன.

கும்பாபிஷேகத்துக்கு முன்னதாக (17) வெள்ளிக்கிழமை காலை

06

## அஸ்ட்ராசெனிகா தடுப்பூசி வீண் அச்சம் அவசியமற்றது

அஸ்ட்ராசெனிகா (AstraZeneca) தடுப்பூசியை ஏற்றியவர்கள் தேவையற்ற அச்சம்கொள்ள தேவையில்லை என, தேசிய ஔடத ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையின் தலைவர் விசேட வைத்தியர் டொக்டர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

அஸ்ட்ராசெனிகா தடுப்பூசியை செலுத்தியதால், இரத்த உறைவு, பக்கவாதம், மூளை பாதிப்பு, மாரடைப்பு, நுரையீரல் அடைப்பு உள்ளிட்ட பக்கவிளைவுகள் ஏற்படுவதாக அந்நிறுவனத்தின் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

பிரித்தானியாவில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றில் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசி பக்க விளைவுகளை ஏற்படுத்தும்

06

SLFP: விஜேயதாசவின் தலைமைப்பதவி

## துமிந்தவின் தடையுத்தரவை பரிசீலிக்க நீதிமன்று தீர்மானம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளதை, சவாலுக்குட்படுத்தி கட்சியின் பதில் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தாக்கல் செய்த மனுவின் தடையுத்தரவை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

இவரின் நியமனத்துக்கு கடுவெல மாவட்ட நீதிமன்றம்

06

## அமெரிக்கத் தூதுவர் நேற்று யாழ். விஜயம்

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று (15) யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விஜயம் செய்தார். வட மாகாணத்தில் உள்ள மக்களுக்கு அமெரிக்கா தொடர்ச்சியாக வழங்கும் ஆதரவு மற்றும் ஒத்துழைப்புக்களை ஆராயும் நோக்கில் இவரது விஜயம் அமைந்துள்ளது. சிவில் சமூகம், இளைஞர்கள், உள்ளூர் அரச அதிகாரிகள் மற்றும் மதத் தலைவர்களையும் இவர்

06





## 03

## தொழுநோயாளர்கள் அதிகரிப்பு இவ்வாண்டில் 264 பேர் அடையாளம்

சிறுவர்களும் அதிகளவில் பாதிப்பு

## கல்முனையில் அஷ்ரப் நினைவு அருங்காட்சியகம்

### நிர்மாணப் பணிகளை துரிதமாக ஆரம்பிக்க ஜனாதிபதி அறிவுறுத்தல்



முஸ்லிம் மக்களுக்காக அளப்பரிய சேவைகளை யாற்றிய தலைசிறந்த அரசியல்வாதியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் ஆற்றிய சேவைகளை கௌரவிக்கும் வகையில், அஷ்ரப் நினைவு அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது. இதன் நிர்மாணப்பணிகளை துரிதமாக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை

06

## வெசாக் அலங்காரங்களில் பொலித்தீன், பிளாஸ்டிக் தடை



வெசாக் அலங்காரங்களுக்கு பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபை அறிவுறுத்தி உள்ளது. பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை பாவித்து செய்யப்படும் அலங்காரப் பொருட்கள் பல நாட்களுக்கு உக்காது கிடப்பதால் சுற்றாடல் மாசடைகிறது.

எனவே, இதை விடுத்து சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு சுற்றாடல் அதிகார சபை மக்களை கோரியுள்ளது.

06

## 11 அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைகள்

சில்லறை விலைகளின் விபரங்கள் வெளியீடு

(லோரன்ஸ் செல்வநாயகம்)


பதினொரு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு, அவற்றுக்கான சில்லறை விலைகளை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை வெளியிட்டுமுள்ளது.

கோதுமை மா, மைசூர் பருப்பு, வெள்ளைச் சீனி உள்ளிட்ட உணவுப் பொருட்கள் இவற்றில் உள்ளடங்குகின்றன. மேற்படி 11 அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் எதிர்வரும் (19) வரை மேற்படி நிர்ணய விலைகளில் விற்பனை செய்யுமாறு அதிகார சபை

06

## சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் செப்டெம்பர் மாத நடுப் பகுதியில்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள், செப்டெம்பர் மாத நடுப்பகுதியில் வெளியிடப்படும் என, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நேற்று முன்தினம் நிறைவடைந்துள்ள கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு சுமார் 4 மாதங்கள் எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். இப்பரீட்சையின் சில பாடங்கள் தொடர்பில் செயன்முறைப் பரீட்சைகள் நடத்த

06

## இலங்கை தமிழ் பெண்ணின் நாவலுக்கு USA இல், முதலிடம்

ஒன்றரை இலட்சம் டொலர் பரிசு




அமெரிக்காவில் வசிக்கும் இலங்கை தமிழ் வம்சாவளி எழுத்தாளரான வி.வி.சுகி கணேசநந்தன் எழுதிய நாவலுக்கு 2024 கரோல்ஷீல்ட்ஸ் (Carol Shields) பரிசு கிடைத்துள்ளது. இவர் எழுதிய பிரதர்லெஸ் நைட் (Brotherless Night) என்ற நாவல், புனைக் கதைக்கே இவ்விருது

06



# நகர்வலம்

# பலஸ்தீன மக்களின் உரிமைக்காக அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளிக்கும்

## வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பலஸ்தீன மக்களுக்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவாக செயற்படும் என்றும் அந்த மக்களின் உரிமைகளுக்காக அரசாங்கம் தொடர்ந்தும் முன்னிற்கும் என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பலஸ்தீனத்தின் இன்றைய நிலவரம் தொடர்பான சபை ஒத்திவைப் புவேளை விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். எவ்வாறாயினும் இந்த பிரேரணையை சபையில் சமர்ப்பித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி தனது வாக்குகளை பாதுகாப்பதற்காக அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கைகள் தொடர்பில் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்ததை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.



சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்:

இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பலஸ்தீனத்தின் தற்போதைய நிலை தொடர்பான இந்த யோசனையை முன்மொழிந்து உரையாற்றும் போது; இஸ்ரேலினால் பலஸ்தீன மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பில் விடயங்களைக் குறிப்பிட்டார்.

அத்துடன் இஸ்ரேலுக்கும் சர்வதேசத்திற்கும் யுத்தத்தை நிறுத்தி பலஸ்தீன மக்களுக்கு சுதந்திரத்தை வழங்குமாறு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது உரைகளின் போது விடயங்களை முன் வைத்தனர்.

இவ்வாறான நிலையில் ரவூப் ஹக்கீம் எம்.பி முன்வைத்த விடயங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவரது தலைமையிலான அரசாங்கத்தின் மீதும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் வகையிலேயே விடயங்களை முன் வைத்தார்.

அவர் தனது வாக்குகளை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துடனே விடயங்களை முன் வைத்ததுடன் அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கைகள் தொடர்பிலும் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இலங்கையிலிருந்து தொழிலுக்காக தொழிலாளர்களை இஸ்ரேலுக்கு அனுப்புவது நிறுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். இலங்கையிலிருந்து மட்டுமா அங்கு பணியாளர்கள் அனுப்பப்படுகின்றனர்? என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகின்றேன்.

இலங்கையில் இருந்து நாம் தொழிலாளர்களை அனுப்ப மாட்டோம் என்று கூறினால் வேறு நாடுகளிலிருந்து அவர்கள் பணியாளர்களை பெற்றுக்கொள்வர் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.எவ்வாறாயினும் பலஸ்தீனர்களுக்கு பெரும் அநீதிகள் இழைக்கப்படுகின்றன என்பதனை ஏனைய நாடுகளும் ஏற்றுக்கொள்கின்றன. எமது அரசாங்கம் அந்த மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்தும் முன்னிற்கும். அவ்வாறான வெளிநாட்டுக் கொள்கையையே எமது அரசாங்கம் பின்பற்றுகின்றது. பலஸ்தீனத்துக்கு எதிரான இன அழிப்பை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை பல நாடுகள் முன்வைத்து வருகின்ற போது இலங்கையும் அதனை ஆதரித்துள்ளது.

இருதரப்பினரும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு சமாதானத்திற்கு வழி வகுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையே நாமும் விடுக்கின்றோம். இருதரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதால் இரு தரப்பு மக்களையும் அதிலிருந்து மீட்க வேண்டும் என்பதுடன், அவர்களின் வாழ்வதற்கான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார்.

# சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் இன்று மனாகிப் ஆரம்பம்

**பேருவளை விசேட நிருபர்**



பேருவளை, சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் 133ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் ஆரம்பநிகழ்வு இன்று 16ஆம் திகதி வியாழக்கிழமை அஸர் தொழுகையின் பின்னர் கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி), எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி), அஷ் ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) ஆகியோர் தலைமையில் இடம்பெறும்.

சீனன்கோட்டைப் பள்ளிச்சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்படி மஜ்லிஸ் நடைபெறுவதோடு தொடர்ந்து 9 நாட்கள் மனாகிப் மஜ்லிஸ் இடம்பெறுவதோடு உலமாக்களினால் மார்க்க உபன்னியாசங்களும் நிகழ்த்தப்படும்.

தினமும் இடம்பெறும் மனாகிப் மஜ்லிஸில் ஆத்மீகஞானி இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஆன்மீகப் பணிகள் பற்றிய விசேட மார்க்கச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

சீனன்கோட்டைப் பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியாரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெறும் இம்மஜ்லிஸில் கலீபாக்கள், உலமாக்கள், முகத்தமீன்கள், இஹ்வான்கள் பங்குபற்றவுள்ளதாக பள்ளிச்சங்க இணைச்செயலாளர் ஷிஹாப் ஹாஜியார் தெரிவித்தார். ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகர் அல் குத்புல் அக்பர் இமாம் அபுல்ஹசன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் 850ஆவது ஜனன தினத்தை முன்னிட்டும் ஷாதுலிய்யா மஷாயிகுமார்களின் ஞாபகார்த்தமாக இம்மஜ்லிஸ் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடமேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை

## மகாநாயக்கர்களுடனான சந்திப்பில் ஆளுநர் நசீர் அஹமட் தெரிவிப்பு

**மாவத்தகம தினகரன், கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்கள்**



வடமேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய துரித நடவடிக்கை எடுப்பதாக வடமேல் மாகாண ஆளுநர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

வடமேல் மாகாண புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள நசீர் அஹ்மட், மல்வத்து பிரிவு அனுநாயக்க விக்ரமாராச்சி ஆயுர்வேத பல்கலைக்கழக வேந்தர் அதி வண. நியங்கொட விஜிதசிறி அனுநாயக்க தேரர் மற்றும் அஸ்கிரிய மஹா விகார பிரிவு மஹாநாயக்க தேரர் வரகாஹொட ஞானரத்ன தேரர் ஆகியோரை (13) மரியாதையின் நிமித்தம் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது, இரண்டு பௌத்த மதத் தலைவர்களும் புதிய ஆளுநருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதுடன், வடமேல் மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகள் உள்ளிட்டவை தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

வடமேல் மாகாணத்திற்கு புதிய ஆளுநராக நியமிக்கப்பட்ட தங்களின் சிந்தனை போக்கின்படி, தேசிய ஒருமைப்பாட்டிற்கு உங்களால் சிறந்த பங்களிப்பை ஆற்ற முடியும் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும் எனவும் அவர்கள் இதன்போது தெரிவித்துள்ளனர்.

மேலும், வடமேல் மாகாணத்தில் தற்பொழுது நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க திட்டமிட்டுள்ளதாக ஆளுநர் நசீர் அஹ்மட் இங்கு குறிப்பிட்டார். இதன்மூலம், குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளிலும் பிரிவேனாக்களிலும் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் இதற்கான பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஆளுநர் கூறினார்.



முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பணிப்பாளராக இருந்த இஸட்.ஏ.எம். பைஸல், கிழக்கு மாகாண சபைக்கு பதவியுயர்வு பெற்றுச்செல்வதால் அவரின் சேவையை கௌரவிக்கும் முகமாக திணைக்களத்தின் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரியாவிடை வைபவம் (14) திணைக்களத்தில் இடம்பெற்றது. இதன்போது பணிப்பாளரின் சேவையைப் பாராட்டி திணைக்கள அலுவலர்களால் அவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது. (படம்: கொழும்பு தினகரன் நிருபர்)

# பலஸ்தீனத்தை இல்லாதொழிக்கும் இஸ்ரேலின் வெறியாட்டம் வெற்றியளிக்காது

## பாராளுமன்றத்தில் ரிஷாட் பதியுதீன் எம்.பி



பலஸ்தீனத்தை இல்லாதொழிக்கும் இஸ்ரேலின் வெறியாட்டம் வெற்றியளிக்காது, இறுதி வெற்றி ஜனநாயகத்துக்கே என மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் (14) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற பலஸ்தீனின் தற்போதைய நிலை குறித்த விவாதத்தில் உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து உரையாற்றிய அவர்,

பலஸ்தீனர்களை விரட்டியதால் ஏற்பட்ட இஸ்ரேலிய தொழில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கையும் ஆட்களை அனுப்பியுள்ளது. இது ஏன்? இஸ்ரேலின் பொருளாதாரம் மற்றும் இராணுவத்தை பாதுகாக்கும் தேவை அரசாங்கத்துக்கு ஏன் ஏற்பட்டது? வெளிநாட்டமைச்சர் இதற்குப் பதிலளிக்க வேண்டும். இஸ்ரேலின் வெறித்தனங்களை அரசாங்கம் கண்டிப்பது அவசியம்.

சொந்த மண்ணிலிருந்து பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்ட "நக்பா" தினத்தில், நான் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். சர்வதேச நியதிக்கு உடன்பட்டு பாலஸ்தீனை அங்கீகரியுங்கள். இஸ்ரேலின் இன ஒழிப்புச் செயற்பாடுகளை ஆதரிக்கும் வகையில், இலங்கை செயற்படக்கூடாது. தர்மமின்றி, இன வெறியோடு தலைவிரிகோலமாக தாண்டவமாடும் யூத இராணுவம் முழு பலஸ்தீனையுமே அழிக்கத் துடிக்கிறது. பதிலடிப்போரென்ற போர்வையில் பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் நிரபராதிகள் அனைவரையும் சல்லடைகளால் துளைக்கிறது இஸ்ரேல். வைத்தியசாலைகள், அகதிமுகாம்கள் இன்னும் நிவாரண நிலையங்களும் விமானத்தாக்குதல்களால் தகர்க்கப்படுகின்றன.

அமெரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்திய அரசுகளின் ஒருதலைப்பட்ச போக்குகள், ஜனநாயகத்துக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது. வீட்டோ அதிகாரத்தால் இஸ்ரேலைப் பாதுகாக்கும் அமெரிக்கா, பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களையோ அல்லது மனிதாபிமானத்தையோ கண்டுகொள்ளவில்லை" எனவும் அவர் குறிப்பிட்டார்.

# வெலிகமவில் ஹஜ் வழிகாட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம்

## முக்கிய உலமாக்கள் பங்கேற்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற செல்ல நாட்டமுள்ளோர்களுக்கான விசேட ஹஜ் வழிகாட்டல் கருத்தரங்கொன்று எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை வெலிகம ஸலாஹிய்யா மகளிர் அரபுக்கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் மாத்தறை மாவட்ட கிளை ஏற்பாடு செய்துள்ள இக்கருத்தரங்கில் ஹஜ் முன் ஆயத்தங்கள், மதீனாவின் சிறப்புக்கள், மற்றும் ஹஜ் உம்ரா பற்றி விளக்கம் போன்ற தலைப்புகளில் தலைசிறந்த உலமாக்களினால் விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் அஷ்ஷேக் எம்.ஏ.எம்.இப்ளால் (பாரி), வெலிகம மத்ரஸதுல் பாரி அரபுக் கல்லூரியின் அதிபரும் அ.இ.ஜ.உ. மாத்தறை மாவட்ட கிளை தலைவருமான அல் ஹாபிழ் எம்.ஆர். அப்துர்ரஹ்மான் (மழாஹிரி) மற்றும் வெலிகம குல்லிய்யதுல் ஹிழ்ரிய்யா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷேக் முப்தி எம்.நஜ்முத்தீன் (ஹிழ்ரி) ஆகியோர் விரிவுரைகளை நடாத்தவுள்ளனர்.

தென் மாகாணத்திலிருந்து ஹஜ்ஜுக்காக செல்ல நாட்டமுள்ளவர்கள் அனைவரும் இதில் கலந்து கொள்ள முடியுமென மாத்தறை மாவட்ட கிளைச் செயலாளர் அஷ்ஷேக் எம்.எம்.எம் முன்திர் (நளீமி) தெரிவித்தார்.

# புதையல் தோண்டிய அறுவர் கைது


**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

தொல்பொருள் பெறுமதிமிக்க இடமொன்றுக்குள் சட்டவிரோதமான முறையில் உட்புகுந்து புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஆறு பேரை அநுராதபுரம் சிவலாக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய சிவலாக்குளம் பொலிஸ் பிரிவின் குட்டிகுளம பகுதியிலுள்ள வனப்பகுதியில் கடந்த 13ஆம் திகதி இரவு நடத்திய சுற்றிவளைப்பின்போது புதையல் தோண்டிக்கொண்டிருந்த ஆறு பேரை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் சிவலாக்குளம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# சீனன்கோட்டை பகுதியை ஒளியூட்டி வரும் சமூக சேவையாளர் சர்பான் முஸம்மில்

## சீனன்கோட்டை பள்ளிச் சங்கம் பாராட்டு



பேருவளை நகர சபைக்குட்பட்ட சீனன்கோட்டை பிரதேசத்தில் இருள் சூழ்ந்திருந்த சில வீதிகளை இனங்கண்டு அவ்வீதிகளுக்கு மின்சார சபையின் உதவியோடு மின்குமிழ்களை பொருத்தியும் இன்னும் பிரதேச வீதிகளின் மின் கம்பங்களில் ஒளிராது காணப்பட்ட மின் குமிழ்களை அகற்றி புதிதாக மின் குமிழ்களை பொருத்தியும் பாரிய சேவையொன்றை எமது பிரதேசத்துக்கு எவ்வித எதிர்பார்ப்புமின்றி மேற்கொண்டு வருகின்ற பிரதேச சமூக சேவையாளர் சர்பான் முஸம்மிலுக்கு சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் ஊர் மக்கள் சார்பாக நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பள்ளிச்சங்கத்தின் இணைச்செயலாளர் ஷிஹாப் ஹாஜியார் குறிப்பிடுகையில், 'தான் ஒரு மாணிக்க வியாபாரியாக இருந்தும் தனது ஊருக்காகவும் தமது பிரதேச மக்களுக்காகவும் சர்பான் முஸம்மில் மேற்கொண்டு வருகின்ற சேவையை நாம் மனமார பாராட்டுகிறோம். எமது பிரதேசத்திலுள்ள பிரதான வீதிகள், முற்சந்திகள், மக்கள் நடமாட்டம் கூடிய உள் வீதிகள் இன்று மக்கள் நடமாடும் வகையில் ஒளியூட்டப்பட்டுள்ளன. இதனால் மக்கள் பாதுகாப்பாக இரவு நேரத்திலும் வீதிகளில் பயணிக்கக் கூடியதாக உள்ளது. வீதி விபத்துகளும் தவிர்க்கப்பட்டுள்ளன. அதனால் சமூக சேவையாளர் சர்பான் முஸம்மிலின் முன்மாதிரி மிக்க சேவைகளை எமது பள்ளிச்சங்கம் பாராட்டுகிறது என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சர்பான் முஸம்மில், இப்பணியை எவருக்கும் தெரியாமல் சுமார் ஒரு வருடத்திற்கும் மேலாக நான் மேற்கொண்டு வருகிறேன். எவராவது என்னிடம் வந்து எமது வீதிக்கு மின்குமிழைப் பெற்றுத்தருமாறு கோரினால் அதனை இன்முகத்துடன் ஏற்று அவர்களது பிரச்சினையை முடியுமானவரை நிவர்த்தி செய்கிறேன்.

தனிப்பட்ட இலாப நோக்கின்றி அல்லாஹ்வுக்காக இச்சேவையை மிகவும் மகிழ்ச்சியுடன் முன்னெடுத்து வருகிறேன். எனக்கு உதவி ஒத்தாசைகளை வழங்குகின்ற நண்பர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் எனக் குறிப்பிட்டார்.

# திறப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் பயனாளிக்கு வீடு

**திறப்பனை தினகரன் நிருபர்**



சமுர்த்தி சுபீட்ச வீட்டுத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளியான திறப்பனைப் பிரதேச செயலகப் பிரிவின் கல்குளம் பகுதியைச் சேர்ந்த திருமதி சம்பிகா இந்துனில் என்பவருக்கான நலன்புரி இல்லம் கடந்த 06ஆம் திகதி திறப்பனை பிரதேச செயலாளர் கே.பி. கே.எல்.பி. மதுவந்தியினால் பயனாளியிடம் ஒப்படைக்கப்பட்டது.

விதவை பெண்ணான திருமதி சம்பிகா இந்துனில், தனது இரண்டு பிள்ளைகள் சகிதம் மற்றும் வயதான பெற்றோருடன் தனது சகோதரரின் வீட்டில் வசித்து வந்த நிலையில் அவளது தந்தைக்குச் சொந்தமான நிலத்தில் "சௌபாக்கியா சமுர்த்தி வீடமைப்பு திட்டத்தின் கீழ்" புதிய வீடு கட்டும் பணி கடந்த 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாத சுப நேரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியத்தின் பங்களிப்புடன் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் இந்த சுபீட்ச வீட்டை நிர்மாணிக்க முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 மே 16 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.34
ளுஹர் - 12.08
அஸர் - 03.30
மஃரிப் - 06.20
இஷா - 07.34

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் வைகாசி 03
சுபநேரம் : காலை : 7.23 - 8.53வரை
ராகுகாலம் : பகல் : 1.23 - 2.53வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## ஜனாதிபதி தேர்தலே முதலில் நடைபெறும்:ஜூலையில் வர்த்தமானி

*(லோரன்ஸ் செல்வநாயகம் )*



ஜனாதிபதி தேர்தலே முதலில் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாகவும், இத் தேர்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் ஜூலை மாதத்தில் வெளியிடப்படும் என்றும் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் விவசாயத்துறை சார்ந்த அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தையும் விரைவுப்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழு கூட்டத்திலேயே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர், பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்ற போதும் ஜனாதிபதி தேர்தலே முதலில் நடைபெறுவதற்கான அதிக வாய்ப்பு காணப்படுவதாக குறிப்பிட்டார்.

## கொழும்பில் அயோரா வர்த்தக மாநாடு

இந்து சமுத்திர விளிம்பு நாடுகள் சங்கத்தின் தலைமைத்துவத்தின் கீழ், முதலாவது வணிகமாநாட்டை இலங்கையின் தலைமையின் கீழ் நடத்தவுள்ளது.


இம்மாநாடு,ஷங்ரிலா ஹோட்டலில், 2024, மே 28 முதல் 29 வரை நடைபெறும்.

"நிலையான வளர்ச்சிஎல்லைகளை அடைதல்" என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறும் இந்த வணிக மாநாட்டில், திறம்படு விவசாயம், தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பம், ஏற்பாட்டியல், சுற்றுலா, புதுப்பிக்கத் தக்க வலுச்சக்தி, சிறிய, நடுத்தர மற்றும் பாரிய முயற்சியாண்மைகளின் அபிவிருத்தி, மற்றும் பெண்களுக்கான வலுவூட்டலும் அதிகாரப்பகிர்வும் ஆகிய முக்கிய துறைகளில் கவனம் செலுத்தப்படவுள்ளது. இந்த மாநாடானது அயோராவின் அங்கத்துவ நாடுகளில் தொழில் துறை தலைவர்களுக்கு வலுவான

06

# தினகரன்
THINAKARAN

92
வருடங்களுக்கு முன்
தினகரன்
இன்று 16 மே 1932



### காங்கிரஸ் சபைக் கோரிக்கை

இலங்கை அரசியலை உடனே திருத்தி அமைக்க வேண்டும்

### கவர்னர் உரிமைப் பிரச்னை

**உத்தியோகஸ்தர்கள் ஒத்துழைக்கவில்லை அவர்களை நீக்க வேண்டும்**

சென்ற சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை தேசீயக் காங்கிரஸ் சபையின் விசேஷக் கூட்டமொன்றில் இலங்கை அரசியல் திட்டத்தை உடனே சீர்திருத்தியமைக்க வேண்டுமென ஓர் தீர்மானம் ஏக மனதாய் நிறைவேறியது. கூட்டத்திற்கு அவைத்தலைமை வகித்த திரு. பண்டாரநாயக பிரசார வேலை செய்து பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கி, அரசியல் சீர்திருத்தத்திற்காக ஒருப்பட வேலை செய்யும்பொருட்டு விருப்பமுடைய சகல கட்சி வகுப்பினர் பிரதிநிதிகள் கொண்ட ஓர் தேசியக் கமிட்டியை ஏற்படுத்த வேண்டுமென்பதாக ஆலோசனை கூறினர்.

**(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)**

## இஸ்ரேல் தொழில்வாய்ப்புக்கு 40,000 பேரை அனுப்புவதில் உறுதி

### அணிசேரா கொள்கையை பின்பற்றும் இலங்கை வேறு நாடுகளின் விவகரங்களில் தலையிடாது



இஸ்ரேல் தொழில்வாய்ப்புக்களுக்காக இலங்கையர்களை அனுப்புவதை நிறுத்தப்போவதில்லை என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக நாட்டின் இளைஞர்களின் எதிர்காலத்தை சீர்குலைப்பது கவலைக்குரிய விடயம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நேற்று (15) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

இலங்கை அணிசேரா நாடு என்பதால் ஏனைய நாடுகளின் அரசியல் விவகாரங்களில் தலையீடுகளை மேற்கொள்வதில்லை. அவ்வாறு செய்யவும் முடியாது. பாராளுமன்றத்தில் குரல் எழுப்புவது, ஆர்ப்பாட்டம் செய்வதன் மூலம் இஸ்ரேல் போரை நிறுத்த முடியாது என்றும் அமைச்சர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சியிலுள்ள சில அரசியல்வாதிகள், முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்கில் இளைஞர்களின் எதிர்காலத்தை சீர்குலைக்க முயற்சிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை இஸ்ரேலில் அதிக ஊதியம் பெறும் வேலைகளுக்கு அனுப்ப நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

இதனை சீர்குலைக்கவே இவர்கள் முயற்சிக்கின்றர்.

இவ்வாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

## சொய்சாபுர அடுக்குமாடி: ஒரு பகுதியில் ஆபத்து



மொரட்டுவ சொய்சாபுர அடுக்குமாடி குடியிருப்பின் 'சி' பிரிவின் மேல் மாடியில் சுவரின் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு (14) இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இவ்விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்த அடுக்குமாடி குடியிருப்பு பழமையானதாக உள்ளதால், மேலும் சேதம் ஏற்படுவதற்கு முன் இதுகுறித்து அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## தொழுநோயாளர்கள் அதிகரிப்பு இவ்வாண்டில் 264 பேர் அடையாளம்

### *சிறுவர்களும் அதிகளவில் பாதிப்பு*



நாட்டில் தொழு நோயாளர்கள் தொகை அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில், இந்த ஆண்டில் 264 புதிய தொழுநோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு ள்ளது.இவ்வாறு இனங்காணப்பட்டவர்களில் 24 பேர் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என விசேட வைத்திய நிபுணர் டொக்டர் நிருபா பல்லேவத்த தெரிவித்துள்ளார்.

இதுபற்றித் தெரிவித்த அவர்:

2023 ஆம் ஆண்டில் 1,580 தொழுநோயாளிகள் கண்டறியப்பட்டனர். பாதிக்கப்பட்ட 1,580 பேரில் 180 குழந்தைகள் உள்ளனர். மேலும் 12 வீத குழந்தைகள் 15 வயதுக்குட்பட்டவர்கள். எனினும் நோயைப் பரப்பும் திறன் இவர்களிடம் இல்லை. அத்துடன் இந்த ஆண்டு, 8 வீத மாற்றுத்திறனாளி நோயாளிகளை சந்தித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## வலம்புரி கவிதா வட்டத்தின் 100 ஆவது கவியரங்க விழா

### "வகவக் கவிதைகள்" நூல் வெளியீடும்

வகவம் வலம்புரி கவிதா வட்டத்தின் நூறாவது கவியரங்க விழாவும் "வகவக் கவிதைகள்" நூல் வெளியீடும் எதிர்வரும் (26) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு, கொழும்பு 7 ஜே. ஆர். ஜயவர்தன நிலையத்தில் நடைபெறும். வலம்புரி கவிதா வட்டத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஈஸ்வரன் பிரதர்ஸ் அதிபர் திரு. கணேஷ் ஈஸ்வரன் கலந்து கொள்கிறார். வகவ சிரேஷ்ட ஸ்தாபகர், சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி இதற்கு முன்னிலை வகிக்கிறார்.

சிறப்பு அதிதிகளாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், வீரகேசரி மற்றும் வீரகேசரி ஞாயிறு வெளியீடு பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன்,

தமிழன் பிரதம ஆசிரியர் சிவா ராமசாமி, ஞானம் ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், முஸ்லிம் சேவைப் பொறுப்பாளர் எம். ஜே. பாத்திமா ரினூஷியா, கெப்பிட்டல் டிவி/கெப்பிட்டல் எப்.எம். பிரதானி ஷியாஉல் ஹசன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா விசேட பேச்சாளராக பங்கேற்கிறார்.

கலாபூஷணம் தமிழ்த்தென்றல் அலி அக்பர் தலைமையில் நூறாவது கவியரங்கம் இடம்பெறும். இந்நிகழ்வின் போது வகவக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான "வகவக் கவிதைகள்" நூல் வெளியீடும் இடம்பெறும். வகவப் பொருளாளர் ஈழகணேஷுக்கு வகவ விருதும் வழங்கப்படும். வலம்புரி கவிதா வட்டச் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குகிறார்.

## அபேக்ஷா வைத்தியசாலை அபிவிருத்தி:கலந்துரையாடல்



மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் 2030 வரையிலான உத்தேச அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த விசேட கலந்துரையாடல் நேற்று (15) நடைபெற்றது. சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன தலைமையில் இது நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், ருஹுணு கதிர்காம விகாரையின் நிதியில் 500 படுக்கைகளுடன் நிர்மாணிக்கப்படவுள்ள வார்ட் தொகுதி குறித்தும் மக்களுக்கு உகந்த

சிகிச்சைகளை வழங்குவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

கதிர்காமம் ருஹுணு விகாரையின் நிதியிலிருந்து 2023.09.21இல், ஆரம்பிக்கப்பட்ட நான்கு மாடிகளைக் கொண்ட சிறுவர் விடுதித் தொகுதியின் நிர்மாணப்பணிகளை இவ்வருடம் ஜூலையில் நிறைவு செய்ய முடியும் என்றும் அதிகாரிகள் இதன் போது தெரிவித்தனர். 150 மில்லியன் ரூபா செலவில் இவ் வைத்தியசாலை நிர்மாணிக்கப்படவு ள்ளது.

## முகவர் நிறுவனம் சுற்றிவளைப்பு

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் அனுமதிப்பத்திரமின்றி மாத்தறையில் இயங்கி வந்த சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனமொன்றை பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் முற்றுகையிட்டுள்ளனர்.

மாத்தறை நகரில் செயல்பட்டுவந்த இந்த முகவர் நிறுவனத்தினால் ஜப்பானில் தொழில் வாய்ப்புகளை பெற்றுத் தருவதாகக் கூறி பணம் வசூலிக்கப்பட்டு வருவதாக, பணியகப் புலனாய்வுப் பிரிவின் முகாமையாளருக்கு தகவல் கிடைத்தது. இத்தகவலின்படி, விசேட புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் சோதனை நடத்தினர்.

06

## வெளிநாடுகளிலிருந்து வந்த போதைப் பொருட்கள் சிக்கின



பல்வேறு நாடுகளிலிருந்து விமான தபால் சேவை மூலம் கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட, ஒன்பது மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் அடங்கிய 10 பொதிகள் சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த பொதிகள் கனடா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து தெஹிவளை, வெள்ளவத்தை மற்றும் வேயங்கொடை ஆகிய பிரதேசங்களுக்கு விமான தபால் சேவை மூலம் நேற்று (15) அனுப்பி வைக்கப்பட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த பொதிகளிலிருந்து 150 போதை மாத்திரைகள், 466 கிராம் "குஷ்" , கஞ்சா மற்றும் 10 கிராம் கொக்கையின் உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## எட்டு மருந்து வகைகளுக்கான பதிவு சட்டத்துக்கு முரணானது

### *மேன் முறையீட்டு நீதிமன்றம் தெரிவிப்பு*

தடுப்பூசி மயக்க மருந்துக்காகவும் மூளை தொடர்பான நோய் சிகிச்சைக்காகவும் இலங்கை நிறுவனம் தயாரித்த எட்டு வகையான மருந்து வகைகளை பதிவு செய்தமை சட்டத்துக்கு முரணானது என,

மேன்முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டி உள்ளது.இந்த மருந்து வகைகளை ஆறுமாத கால கண்காணிப்பு அவகாசத்திற்கு உட்படுத்தப்படாமல் தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபை பதிவு செய்ய எடுத்த தீர்மானமே சட்டத்திற்கு முரணானது என நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இரண்டு மனித உரிமை ஆர்வலர்கள் தாக்கல் செய்த இந்த மனு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டன. தனியார் நிறுவனம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட 08 வகையான தடுப்பூசிகளை ஆறு மாத கால அவகாசத்திற்கு உட்படுத்தாமல் பதிவு செய்ய தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபை மேற்கொண்ட தீர்மானத்தை ரத்து செய்யுமாறு கோரியே இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த விசாரணை நடைபெற்றது.

தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 03ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்கஃதா பிறை 07

### குறள் தரும் சிந்தனை



அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை

வீரச் செயல்களுக்கும் அன்பு துணையாகத் திகழ்கிறது என்பதை அறியாதவர்களே, அறச் செயல்களுக்கு மட்டுமே அன்பு துணையாக இருப்பதாகக் கூறுவார்கள்.

# தன்னிறைவு பொருளாதாரமே நாட்டுக்கு நன்மை தரும்

பொருளாதார ரீதியில் முன்னேற்றத்தையும் தன்னிறைவையும் அடைந்து கொள்வதில் ஒவ்வொரு நாடும் விரும்புகின்றன. அதனை இலக்காகக் கொண்டு பொருளாதார மேம்பாட்டு திட்டங்களையும் அவை முன்னெடுக்கின்றன.

அந்த வேலைத்திட்டங்களில் சில தோல்வியுற்று சில முழுமையான வெற்றியை அளிக்காவிட்டால் சில நாடுகள் அவ்வேலைத்திட்டங்களை இடைநடுவிலேயே கைவிட்டு விடுகின்றன. இன்னும் சில நாடுகள் அந்த வேலைத்திட்டங்களை அந்த இடத்தோடு இடைநிறுத்தி விடுகின்றன.

ஆனால் பொருளாதார முன்னேற்றத்தை இலக்காகக் கொண்ட நாடுகள் தம் வேலைத்திட்டங்கள் தோல்வியுற்றாலும் அல்லது முழுமையான வெற்றியை அளிக்காவிட்டாலும் தம் இலக்கில் உறுதியாக செயற்படுகின்றன. அதன் ஊடாக பல நாடுகள் பொருளாதார முன்னேற்றங்களை அடைந்து கொண்டுள்ளன.

அதேநேரம் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்கு தேவையான இயற்கை வளங்கள் நிரம்பப் பெற்றவையாக உலகில் சில நாடுகள் உள்ளன. ஆனால் பெரும்பாலான நாடுகள் பொருளாதார முன்னேற்றத்திற்கு தேவையான அனைத்து வளங்களையும் கொண்டவையாக இல்லை.

அதனால் நவீன உலகில் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய வழிமுறைகளில் ஒன்றாக கடன் பெறுதல் விளங்குகிறது. இதனைப் பெரும்பாலான நாடுகள் பயன்படுத்திக் கொள்கின்றன. ஆனால் ஒரு சில நாடுகள் தான் கடன் பெறுதல் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து கொள்கின்றன. பெரும்பாலான நாடுகள் கடன் சுமைக்குள் சிக்குண்டு மீள முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றன. அந்த நாடுகள் கடனிலேயே தொடர்ந்தும் தங்கி இருகின்றன.

இவ்வாறான பின்னணியில்தான் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் இலங்கை பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு கடன் மூலம் முன்னெடுக்கப்பட்ட சில உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்கள் எதிர்பார்த்த பிரதிபலன்களை அளிக்கத் தவறின. அதனால் நாட்டின் கடன் சுமை அதிகரித்ததோடு பொருளாதார வீழ்ச்சிக்கும் அது வித்திட்டது.

அந்த இக்கட்டான சூழலில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத துரதிர்ஷ்டகர நிலை ஏற்பட்டது. அச்சமயம் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைளை ஏற்றார். அத்தோடு நாட்டை பொருளாதார ரீதியில் மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களையும் அவர் ஆரம்பித்தார். அதன் பிரதிபலன்களை மக்கள் குறுகிய காலம் முதல் அனுபவிக்கத் தொடங்கினர். அதன் ஊடாக பொருளாதார நெருக்கடி காலகட்டத்தில் நாடு அனுபவித்த அசௌகரியங்கள் பெரும்பாலும் நீங்கலாயின.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று நம்பிக்கை தரும் வகையில் மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்துள்ள நாடு, பங்களாதேசத்திடம் இருந்து பெற்ற கடனையும் திருப்பி செலுத்தியுள்ளது.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காக இணக்கம் காணப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய இலங்கைக்கு கடன் வழங்கியுள்ள நாடுகளும் ஏனைய தனியார் நிறுவனங்களும் கடனைத் திருப்பி செலுத்துவதற்கு சலுகைக் காலத்தை அளித்துள்ளன. அக்கடன்கள் மீளச்செலுத்தப்பட வேண்டும். அதில் இருந்து விடுபட முடியாது. அந்தவகையில் இலங்கைக்கு கடன் வழங்கியுள்ள நாடுகளுடனும் நிறுவனங்களுடனும் இலங்கை பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளன. அப்பேச்சுவார்த்தைகளில் முதலாம் கட்டம் நிறைவடைந்துள்ளன.

இவ்வாறான சூழலில் அத்துருகிரிய தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் நிர்வாகக் கட்டிடத் தொகுதியைத் திறந்து வைக்கும் வைபவத்தில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'எந்நாளும் கடன்பெற்று வாழ முடியாது என்பதால் நாட்டின் பொருளாதாரத்தை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. அதற்கு தேவையான சட்ட வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது' என்றுள்ளார்.

உண்மையில் எந்த நாளும் கடன் பெற்று வாழ முடியாது. அதனால் கடன் இன்றி வாழ்வதற்கு ஏற்ப பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்கு முயற்சிகளும் அதற்கான வேலைத்திட்டங்களும் இன்றியமையாதது.

அந்த வகையில் ஜனாதிபதி ரணில் நாட்டை பொறுபேற்ற சமயம், நாட்டில் விவசாய உற்பத்திகள் இடம் பெறவில்லை. இரசாயனப் பசளைப் பாவனை தடை செய்யப்பட்டு இயற்கை பசளை ஊக்குவிப்பு முன்னெடுக்கப்பட்டதால் விவசாயிகள் விவசாய உற்பத்திகளைக் கைவிட்டிருந்தனர். இந்நிலையில் 2022, 2023 வருடங்களில் விவசாய உற்பத்திகளின் வெற்றியை இலக்காகக் கொண்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பிரதிபலனாக அவ்வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் உருவாகின. அதன் ஊடாக விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தில் உறுதியான நிலையை நாடு பெற்றுக் கொண்டமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

ஆகவே கடனின்றி தன்னிறைவுப் பொருளதாரத்தை அடைவதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அதுவே நாட்டின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு பக்கபலமாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

# அயோத்தி இராமர் கோயிலில் இருந்து நுவரெலியா சீதையம்மனுக்கு சீர்வரிசை

நுவரேலியா சீதாஎலிய சீதையம்மன் ஆலய மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவுக்கு, இந்தியாவில் இருந்து தூதுக்குழுவினர் நேற்று புதன்கிழமை சீர்வரிசைப் பொருட்களுடன் வருகை தந்தனர். இத்தகவலை சுவாமி விக்யானானந்த் (பொதுச்செயலாளர், விஸ்வ இந்து பரிஷத்) அவர்கள் வி. இராதாகிருஷ்ணனுக்கு (தலைவர், நுவரெலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலய பரிபாலன சபை) தெரிவித்திருந்தார்.





இந்தியாவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள சீர்வரிசைப் பொருட்கள் வருமாறு:

1. அயோத்தியில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள இராமபிரானின் சிலையை செதுக்கப் பயன்படுத்தப்பட்ட கறுப்புநிற கிரானைட் கல்லில் இருந்து, வெட்டி எடுக்கப்பட்ட சிறிய பூஜிக்கப்பட்ட புனித கல். இது அயோத்தி இராமர் கோயிலில் இருந்து அனுப்பப்பட்டுள்ளது.
2. பூஜிக்கப்பட்ட புனித கறுப்பு நிற கிரானைட் கல்லை தாங்குவதற்கான சிறிய வெள்ளிபீடம்.



3. இராமாயணக் கதையை சித்திரிக்கும் வகையில் பகவான் ஸ்ரீ ராமர், சீதா பிராட்டி, இலட்சுமணன் மற்றும் ஹனுமான் ஆகிய தெய்வ உருவங்கள் பொறிக்கப்பட்டு, சிறப்பாக வடிவமைக்கப்பட்டு, நுணுக்கமாக கைகளால் நெய்யப்பட்ட சிறப்புப் பட்டுப் புடவை. இப்புடவை சீதாபிராட்டிக்காக நெய்யப்பட்ட, தனித்துவமான பட்டுப்புடவை ஆகும்.
4. மேலதிகமாக மூன்று அழகான பட்டுப் புடவைகள்.
5. அயோத்தி இராமர் கோயிலில் இருந்து கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு விநியோகப்பதற்காக அனுப்பப்பட்டுள்ள ஆயிரம் சிறிய பிரசாத பக்கட்டுகள்.
6. அயோத்தி இராமர் கோயிலில் இருந்து கொண்டுவரப்படும் குறித்த பிரசாதங்களை உள்ளடக்கிய 40 இரும்புப் பெட்டிகள்.
7. புனித கங்கை தீர்த்தம் மற்றும் சரயு தீர்த்தம் கொண்ட இரண்டு பித்தளை கும்ப கலசங்கள்.
8. சீதா பிராட்டியை அலங்கரிப்பதற்காக அழகிய இரண்டு வெள்ளிக் கொலுசுகள்.
9. சீதா பிராட்டியை அலங்கரிப்பதற்காக அழகிய வெள்ளியிலான பதினாறு மெட்டிகள்.
10. சீதா பிராட்டிக்காக ஒரு சிருங்கார (அலங்கார) பெட்டி.

**உமாச்சந்திரா பிரகாஷ்...**

# ஆசியாவின் பில்லியனர் தலைநகராக சீனாவின் பெய்ஜிங்கை முந்திய மும்பை

இந்தியாவின் வர்த்தக நகரமான மும்பை, முதன்முறையாக ஆசியாவின் பில்லியனர் தலைநகராக அறிவிக்கப்பட்டுள்ளது. *Hurun Global Rich List 2024* இத்தகவலை வழங்கியுள்ளது. இந்தியாவின் பொருளாதாரம் சாதனை அளவில் வளரும் என்ற நம்பிக்கையின் பின்னணியில் இந்த ஆண்டு இந்தியாவின் பில்லியனர் பட்டியலில் 100 பேர் இணைந்துள்ளதாக ஹுருன் குளோபல் ரிச் லிஸ்ட் 2024 தெரிவித்துள்ளது.








இந்த அறிக்கையின்படி, ஆசியாவின் பில்லியனர் தலைநகராக மும்பை பெய்ஜிங்கை முந்தியுள்ளது. உலக அளவில் பில்லியனர் நகரங்களின் பட்டியலில் 3 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. மும்பையில் தற்போது பில்லியனர்களின் எண்ணிக்கை 92. பெய்ஜிங்கில் 91 பில்லியனர்கள் உள்ளனர். உலகிலேயே வேகமாக வளர்ந்து வரும் கோடீஸ்வரர்களின் தலைநகரம் மும்பை என்று அறிக்கை கூறுகிறது.

இந்த ஆண்டு 26 பேர் கோடீஸ்வரர் ஆவதற்கு முன்னர் உலகின் மூன்றாவது இடத்தை அடைந்துள்ளனர். இது ஆசியாவின் பில்லியனர் தலைநகரம் என்று அழைக்கப்படுகிறது. பில்லியனர் நகரங்களின் முதல் 10 பட்டியலில் முதன்முறையாக புதுடெல்லி இடம்பெற்றுள்ளது.

*Hurun's Global Rich List 2024* இன்படி *Hurun's* முதல் 30 நகரங்களில் *Palm Beach, Istanbul, Mexico City* மற்றும் *Melbourne* ஆகியவை அடங்கும். கடந்த ஆண்டை விட மும்பையின் சொத்து மதிப்பு 47 சதவீதம் அதிகரித்துள்ளது. மறுபுறம், பெய்ஜிங் 28 சதவீதம் குறைந்துள்ளது. இதன் மூலம், மும்பை செல்வச் செழிப்புத் தலமாக வளர்ந்து, தனது இடத்தையும் உறுதி செய்து வருகிறது. மொத்தத்தில் சீனாவை விட இந்தியாவில் உள்ள கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை அதிகம். இந்த ஆண்டு 94 புதிய கோடீஸ்வரர்கள் இந்தியாவில் இணைந்துள்ளனர். அதே சீனாவில், இந்த ஆண்டு 55 பில்லியனர்கள் மட்டுமே இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று *Hurun* அறிக்கை கூறுகிறது.

ரிலையன்ஸ் குழுமத்தின் தலைவர் முகேஷ் அம்பானி மட்டுமே ஹுருன் உலகளாவிய பணக்காரர்கள் பட்டியலில் முதல் 10 இடங்களுக்குள் இடம்பிடித்த ஒரே இந்தியர் ஆவார். இந்த ஆண்டு அம்பானி 33 பில்லியன் டொலர் சொத்து சேர்த்துள்ளார். இதன் மூலம் ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரர் என்ற பட்டத்தை முகேஷ் அம்பானி தக்கவைத்துள்ளார். அதானி குழுமத்தின் தலைவரான கௌதம் அதானி, 86 பில்லியன் டொலர் சொத்துகளுடன் உலக பணக்காரர்கள் பட்டியலில் 15 ஆவது இடத்தில் உள்ளார்.

அதானியின் சொத்து மதிப்பு 62 சதவீதம் அதிகரித்துள்ளது. பங்குச்சந்தையில் சிறப்பாக செயற்பட்டதன் காரணமாக உலகில் உள்ள கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 5% அதிகரித்துள்ளது. அவர்களின் எண்ணிக்கை 3,300. ஹுருன் பணக்காரர் பட்டியல் உலகப் பொருளாதாரத்தின் கதையைச் சொல்கிறது. இது உலகின் பணக்காரர்களின் கதையைச் சொல்கிறது. யார் மேலே இருக்கிறார்கள், யார் கீழே இருக்கிறார்கள், நாடுகள் மற்றும் துறைகளில் என்ன போக்கு உள்ளது என்பதை அறிக்கை காட்டுகிறது.

மைக்ரோ சொப்ட், கூகுள், அமேசான், ஆரக்கிள் மற்றும் மெட்டா போன்ற நிறுவனங்களில் உள்ள பில்லியனர்கள் தங்கள் செல்வத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கண்டுள்ளனர்.

# வடமாகாண கல்வியமைச்சின் மண்டபத்தில் நூல் வெளியீட்டுவிழா

ஊடகவியலாளர் ந.பரமேஸ்வரன் எழுதிய யாழ் கச்சேரியின் வரலாறு, கணேச ஐயர் சௌந்தராஜனின் யாழ்ப் பாணத் தமிழியல் ஆய்வடங்கல் தேர்ந்த நூல் விபரப்பட்டியல் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழா வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் அண்மையில் யாழ் செம்மணியில் அமைந்துள்ள மாகாண கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கணேச ஐயர் சௌந்தராஜனின் 'யாழ்ப் பாணத் தமிழியல் ஆய்வடங்கல்; தேர்ந்த நூல் விபரபட்டியல்', ஊடகவியலாளர் ந.பரமேஸ்வரன் எழுதி உதயனில் தொடராக வெளிவந்த 'யாழ்ப்பாண கச்சேரியின் வரலாறு' என்னும் இரு நூல்களின் வெளியீட்டு நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளர் பற்றிக் டிறஞ்சன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



நூல் மதிப்புரைகளை இந்து கற்கைகள்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோர் வழங்கினார்கள். நூல் வெளியீட்டின் போது மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் நூலாசிரியர்கள் இருவரும் பென்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்நிகழ்வில் யாழ் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர்கள் சிவலிங்கராஜா, ரகுராம், மாகாண கல்வி அமைச்சின் திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள், நூலகர்கள் கலந்து கொண்டார்கள்.



**எஸ்.தில்லைநாதன்...**
(கரவெட்டி தினகரன் நிருபர்)

# திடீர் மரண விசாரணை அதிகாரியாக மருதமுனை பஹூட்ஸமான் நியமனம்

கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களுக்கான திடீர் மரணவிசாரணை அதிகாரியாக மருதமுனை பதுறுஸ்மான் பஹத்ஸமான் நியமிக்கப்பட்டுள்ளார்.

2024.05.15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1979இன் 15ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை சட்டத்தின் 108ஆம் பிரிவின் மூலம் நீதி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வின் போதே மேற்படி நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய பயிலுனர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை உள்ளிட்ட துறைசார் பயிற்சிகளின் வருகைதரு விரிவுரையாளராகக் கடமையாற்றிய பஹத் ஸமான் கைத்தொழில் நிறுவனமொன்றின் உரிமையாளராவார்.

கிழக்கு மாகாண கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் தேசிய தொழில் முயற்சி அதிகார சபையினால் கிழக்கு மாகாண தொழில் முயற்சியாளருக்கான 2022 ஆம் ஆண்டு துறைசார் விருதினையும் இவர் பெற்றுள்ளார்.

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான பஹட் ஸமான் சமூக சேவை மற்றும் தொழில் சார் சமூக நல்லுறவு செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டவர்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பெரியநீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, மணல்சேனை, கல்முனை அடங்கலான பிரதேசங்களுக்கான திடீர் மரண விசாரணை அதிகாரியாக இவர் கடமையாற்றுவார்.



**ஜெஸ்மி எம்.மூஸா...**
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# நுவரெலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலய மஹாகும்பாபிஷேக பெருவிழா




## மயூரபதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகும் தீர்த்த ஊர்வலம்

வரலாற்றுச் சிறப்புமிக்க நுவரெலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. எதிர்வரும் 18.04.2024 சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு இடம்பெறவுள்ளது.

சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவில் சீதை அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. சீதை அம்மன் சிலைக்கு மயூரபதி ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு பூஜை வழிபடுகளைத் தொடர்ந்து, சீதை அம்மன் சிலை மற்றும் இந்தியாவின் கோயம்புத்தூரில் இருந்து கொண்டு கொண்டுவரப்பட்ட எட்டு கலசங்கள் ஆகியன சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சீதையம்மன் ஆலயத்தில் குடமுழுக்கு காணவுள்ள கலசங்கள் அனைத்தும் கோயம்புத்தூர் நகரில் உள்ள பக்தர்களால், கோயம்புத்தூரில் திருப்பணி செய்யப்பட்டு, இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் சீதையம்மன் ஆலயத்தில் எழுந்தருளவுள்ள உற்சவ மூர்த்தி சிலையை இந்தியாவின் கோயம்புத்தூர் நகரில் அமைந்துள்ள 'லலிதாம்பிகை நிறுவனம்' திருப்பணி செய்து வழங்கியுள்ளது.

லலிதாம்பிகை நிறுவனத்தின் பொறுப்பாளர்களில் ஒருவரான சுவாமி ஜெகதாத்மானந்தா சரஸ்வதி அவர்களும் கும்பாபிஷேகப் பெருவிழாவில் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் சீதையம்மனின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவிற்காக அயோத்தி இராமர் கோயில் மற்றும் சீதை பிறந்த இடமான நேபாளம் ஆகிய இடங்களில் இருந்து கொண்டு வரப்படும் சீதை அம்மனுக்கான சீர்வரிசை பொருட்கள் மற்றும் இந்திய புண்ணிய நதிகளின் தீர்த்தம் ஆகியன மயூரபதி ஆலயத்தில் இருந்து நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படவுள்ளன. தீர்த்த ஊர்வல வாகனம் மயூரபதி ஆலயத்தால், சுமார் 2.5 மில்லியன் ரூபா செலவில் வடிவமைக்கப்பட்டு, திருப்பணி செய்யப்பட்டுள்ளதாக மயூரபதி ஆலய அறங்காவர் சபைத் தலைவர் பெரியசாமி சுந்தரலிங்கம் தெரிவித்தார்.



மயூரபதி ஆலயத்தில் காலை 7 மணிக்கு இடம்பெறும் சிறப்புப் பூஜை வழிபாடுகளில், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஷா, இந்து பௌத்த மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் உட்பட பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளார்கள். மயூரபதி ஆலயத்தில் இடம்பெறும் பூஜைகளைத் தொடர்ந்து முதலாவது நாள் தீர்த்த ஊர்வலம் ஆரம்பமாகி, கொள்ளுப்பிட்டி இந்திய தூதரகம், காலிமுகத்திடல் ஊடாக பிரதான வீதி, செட்டியார் தெரு, ஆமர் வீதி, அதிவேக நெடுஞ்சாலை ஊடாக கடுவல, அவிசாவளை, யட்டியாந்தோட்டை, கினிகத்தேனை, ஹட்டன், கொட்டக்கலை, தலவாக்கலை, பூண்டுலோயா, தவலந்தனை சந்தி ஊடாக இறம்பொடை ஸ்ரீ ஹனுமான் ஆலயத்தைச் சென்றடையும்.

சனிக்கிழமை (18.05.2024) இறம்பொடை ஸ்ரீ ஹனுமான் ஆலயத்தில் காலை 7 மணிக்கு இடம்பெறும் பூஜைகளை வழிபாடுகளைத் தொடர்ந்து இரண்டாவது நாள் தீர்த்த ஊர்வலம் ஆரம்பமாகி, லபுக்கலை, நுவரேலியா ஊடாக, நுவரேலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தை சென்றடையும்.



நுவரேலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவிற்காக இந்தியாவின் உத்தராகண்டம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஊடாகப் பாயும் சரயு ஆற்றில் இருந்து புனிதநீர் 25 லீற்றர் கொண்டு வரப்பட்டுள்ளது. இராமர் கோயில் அமைந்துள்ள அயோத்தி நகரம் சரயு ஆற்றுக் கரையில் அமைந்துள்ளமை சிறப்பம்சம் ஆகும்.

நுவரெலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவில் 19ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்த்தன கலந்து சிறப்பிக்கவுள்ளார். வாழும் கலை பயிற்சியின் நிறுவுனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களும் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 18 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார். குருஜியுடன் சுமார் நூற்றுக்கும் அதிகமான பக்தர்களும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

பேராசிரியர் கலாநிதி இராமசீனிவாசன், ஸ்ரீ முகேஷ்குமார் மேஸ்வரன் (செயலாளர், சுற்றுலாத்துறை அமைச்சு, உத்தரப்பிரதேசம்), ஸ்ரீ சந்தோஷ் குமார் சர்மா (ஆணையாளர்,அயோத்தி நகர சபை) உட்பட வெளிநாட்டு பிரதிநிதிகள் பலர் வருகை தரவுள்ளனர்.

திருப்பதியில் இருந்து, நுவரெலியா சீதாஎலிய சீதை அம்மன் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்குவதற்காக 5000 லட்டுகள் இந்திய கலாசார மையம் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேபாளத்தின் ஜனக்பூர் நகரத்தில் புகழ் பெற்ற ஜானகி கோயில் (சீதை கோயில்) அமைந்துள்ளது. நேபாளத்தின் ஆன்மீகம் மற்றும் பண்பாட்டுச் சுற்றுலாத் தலமாகவும், சீதையின் பிறப்பிடமாகவும் உள்ள ஜனக்பூர் நகரத்தில் இருந்து கும்பாபிஷேகப் பெருவிழா காணும் நுவரெலியா சீதையம்மனுக்கு சீர்வரிசை வருவது இலங்கை இந்திய_ நேபாள நாடுகளின் கலாசார பெருமையை பறைசாற்றுகிறது.

**உமாச்சந்திரா பிரகாஷ்...**

# புதிய மகாவலி அபிவிருத்தி பிரிவு ஆரம்பம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)



இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிபிட்டிய மற்றும் கொலன்ன விவசாய பிரதேசங்களில் 47 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய புதிய மகாவலி அபிவிருத்தி பிரிவொன்றை அமைத்துள்ளதாக வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில்,

இப்பிரதேச மக்களின் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தி அவர்களை பொருளாதார சமூக ரீதியாக வளப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கொலன்ன பிரதேசத்தை மகாவலித் திட்டத்தின் கீழ் கொண்டு வருமாறு பிரதேச விவசாய அமைப்புகள், பொது மக்கள் நீண்ட காலமாக வேண்டுகோள் விடுத்து வந்துள்ளனர். அதற்கமைய இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


மகாவலித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகளின் பின்னர் உடவளவ நீர்த்தேக்க நீர் வளத்தால் இவ்வாறான ஒரு அபிவிருத்தி முயற்சி மேற்கொள்ளப்பட்டமை இதுவே முதல் தடவை எனவும் அவர் தெரிவித்தார்.

# இடியுடன் கூடிய மழை மக்கள் அவதானம்

நாட்டின் பெரும்பாலான மாகாணங்களில் பல இடங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக் கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.






'தூய்மையான அரசியல் கலாசாரத்தை உருவாக்குதல்' என்ற தொனிப்பொருளில் மக்கள் சந்திப்பு மேடையொன்று நேற்றுமுன்தினம் மாத்தளை கிரிஸ்டல் ஹில் ஹோட்டல் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாத்தளை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், பாராளுமன்ற மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் உட்பட புத்திஜீவிகள் பலரும் கலந்து கொண்டனர். (படம்:மாத்தளை சுழற்சி நிருபர்)



நுவரெலியா சீதையம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்திற்கான புனித நீர் நேற்று இந்தியாவின் சரயு நதியிலிருந்து எடுத்துவரப்பட்டது. இந்தியாவின் உலக இராமாயண அமைப்பின் அழைப்பாளர் பாலா வெங்கடேஸ்வர ராவ் தலைமையிலான குழுவினர் இந்த புனித தீர்த்தத்தை இலங்கைக்கு எடுத்து வந்துள்ளனர். புனித தீர்த்தத்துடன் சர்வதேச பண்டாரநாயக்க விமான நிலையத்தில் அவர்கள் வரவேற்கப்படுவதை படங்களில் காணலாம். இந்நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஆலயத்தின் அறங்காவலர் சபை தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட குழுவினர் அவர்களை வரவேற்றனர்.

# விசேட சுற்றிவளைப்பு 12 பேர் கைது

(மாத்தளை சுழற்சி நிருபர்)

மாத்தளை பொலிஸார் மேற்கொண்ட யுக்திய விசேட சுற்றிவளைப்பின் போது 3 பெண்கள் உட்பட 12 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் கிவுலப் பகுதியில் 3100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவரும் ஒவிலி கந்த பகுதியில் 2600 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபரொருவரும் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீதி விபத்தில் இருவர் படுகாயம்



இரத்தினபுரி பதுளை பிரதான வீதியில் நேற்று மாலை 3.00 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளதாக பெல்மதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி சென்ற தனியார் பஸ்ஸும் இறக்குவானையிலிருந்து இரத்தினபுரி நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்றுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியது.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி சென்ற பஸ் அதிவேகமாக வந்த காரணத்தினாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பஸ் சாரதிகள் இருவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# முன்னாள் எம்.பி திலகரின் தாயார் காலமானார்

(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)



நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையகத் தமிழ்க் கவிஞருமான மயில்வாகனம் திலகராஜின் தாயார் சாமிநாதன் பாக்கியம் நேற்றுமுன்தினம் (14) காலமானார். வட்டகொடை மடகொம்பரைத் தோட்டம் புதுக்காடு பிரிவைச் சேர்ந்த இவர், பாக்யா பதிப்பக உரிமையாளருமாவார்.

அன்னாரின் பூதவுடல் மடகொம்பரை தோட்ட இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் இன்று மாலை 2.30 மணியளவில் புதுக்காடு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

# நுவரெலியாவில் சடலம் மீட்பு



நுவரெலியா லவர்சீலிப் வனப்பகுதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கமைய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலம் இதுவரை அடையாளப்படுத்தப்படவில்லை. அடையாளம் காண முடியாத அளவிற்கு சிதைவடைந்துள்ளதாகவும், உயிரிழந்தவரின் அங்க அடையாளங்களைக் கொண்டு 50 தொடக்கம் 60 வயதாக இருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அட்டாளைச்சேனை பிரதேச அபிவிருத்திக்கு ஹரீஸ் எம்.பி நிதி

ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் நிதியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் பல செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக சுமார் 14 மில்லியன் ரூபாவை அவர் ஒதுக்கியுள்ளார். ஒலுவில், பாலமுனை பிரதேசங்கள் உட்பட பல்வேறு பகுதிகளில் இந்த அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவுள்ளன.இந்த அபிவிருத்தி திட்டங்களை விரைவாக செய்து முடிப்பது குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர் கவனம் செலுத்தியுள்ளார்.அம்பாறை மாவட்டத்திற்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு அனுமதி வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இதற்காக அர்ப்பணிப்புகளுடன் செயற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் உட்பட சம்பந்தப்பட்டோருக்கு பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

## கொழும்பில் அயோரா...

(03ஆம் பக்க தொடர்ச்சி)

பொருளாதார கூட்டாண்மையை வளர்ப்பதற்கான வாய்ப்பை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாநாட்டில், அயோராவின் 23 அங்கத்துவநாடுகள் மற்றும் 12 உரையாடல் பங்காளர் நாடுகளைச் சேர்ந்த வர்த்தகப் பிரதிநிதிகள் பங்கபற்றுவர்.

இவர்கள் தங்கள் சகாக்களுடன் கூட்டாற்றலை கட்டியெழுப்புவதற்காக பலதரப்பட்ட வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து அதிக அனுபவத்தைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## முகவர் நிறுவனம்...

(03ஆம் பக்க தொடர்ச்சி)

ஜப்பானில் இலங்கை மாணவர்களுக்கு விசாக்களை பெற்றுத்தரும் போர்வையில் அனுமதிப்பத்திரமின்றி இந்த நிறுவனம் செயல்பட்டுவந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. அதன் பணிப்பாளராக பணியாற்றிய மாத்தறை பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட இடத்தில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான கடவுச்சீட்டுக்கள், வேலைக்கான விண்ணப்பங்கள் மற்றும் பல கோப்புகளை அதிகாரிகள் கைப்பற்றினர்.

இதேவேளை, எந்தவொரு நிறுவனத்திற்கும் வெளிநாட்டு வேலையைப் பெறுவதற்கு பணம் அல்லது கடவுச்சிட்டை வழங்குவதற்கு முன், வெளிநாட்டு வேலைகளுக்கு பணியமர்த்துவதற்ககான சரியான உரிமம் உள்ளதா என்பதையும் அது தொடர்பான வேலைக்கான சரியான வேலை உத்தரவை ஏஜென்சி பெற்றுள்ளதா என்பதையும் கண்டறிய வேண்டும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியம் பொது மக்களுக்கு அறிவித்துள்ளது. இது தொடர்பான விடங்களை அறிந்துகொள்வதற்கு பணியகத்தின் இணையத்தளமான www.slbfe.lk ஐ, பார்வையிட முடியும், அல்லது 1989 என்ற துரித தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பணியகம் வெளிநாட்டு வேலை தேடுபவர்களை கேட்டுக்கொண்டுள்ளது.

## புதிய சட்ட முறைமையுடன்...

மெனிக்ஹின்ன, வத்தேகம மற்றும் பன்வில ஆகிய பொலிஸ் பிரிவுகளின் வழக்குகள் இங்கு விசாரிக்கப்படும்.தெல்தெனிய கூட்டுறவு காணியில் உள்ள கட்டிடத் தொகுதியில் தெல்தெனிய நீதிமன்றம் தற்காலிகமாக இயங்கி வந்தது. இந்நிலையில், அவ்விடத்தில் வசதிகள் இல்லாதிருந்ததால் வழக்கு விசாரணைக்கு வந்த பொதுமக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கினர். இந்நிலையில், இப்புதிய கட்டிடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

"ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, சட்டத் துறையில் பல புதிய சீர்திருத்தங்களைச் செய்துள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் 75 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சில பாராளுமன்றங்கள் 04 அல்லது 05 வருடங்கள் செயற்பட்ட போதிலும் இந்த அளவு சட்டங்களை நிறைவேற்றியதில்லை.

அரசாங்கம் அதன் பணிகளை செய்ய வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்கள் சட்டங்களை உருவாக்க பாராளுமன்றத்திற்கு வர வேண்டும். அதன்படி புதிய சட்டங்களை நிறைவேற்றி புதிய சட்டக் கட்டமைப்பை அறிமுகப்படுத்த நாம் எதிர்பார்த்திருக்கிறோம்.

சட்டத்தின் தாமதம் குறித்தும் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். நீதி நிலை நாட்டப்பட வேண்டும். உரிய நேரத்தில் சட்டம் செயற்படுத்தப்படுத்துவதே எம் முன்பிருக்கும் சவாலாகும். வழக்கு விசாரணைகள் திறம்பட நடத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் பெருமளவில் வழக்குகள் புதிதாக தாக்கல் செய்யப்படும்.நாட்டில் சட்டத்தின் ஆட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். சட்டத்தை கையிலெடுத்துக் கொண்டு சொத்துக்களை அழித்தால், அங்கே சட்டமே இருக்காது. ஒரு நாட்டின் ஸ்திரத்தன்மை சட்டத்தின் ஆட்சியிலேயே தங்கியிருக்கிறது. நீதி நிலைநாட்டப்படும் போது மாத்திரமே நாடு என்ற வகையில் அங்கீகாரம் கிடைக்கும். இல்லாவிட்டால் நாட்டில் அபிவிருத்தி இருக்காது.

நாட்டில் தற்போது புதிய பொருளாதார மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம்.

இதற்காக பல சட்டங்களை கொண்டுவர சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக மத்திய வங்கிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, மத்திய வங்கி சுயாதீனப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது மின்சார சபை மறுசீரமைப்புச் சட்டத்தை சமர்ப்பித்துள்ளோம். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு மின்சார சபையின் நஷ்டமும் ஒரு காரணமாகும்.

வலுவான மின்சார சபையை செயற்படுத்த வேண்டும். அதனால் அந்த சபையின் மீது அரசாங்கம் கொண்டிருக்கும் உரிமைக்கு எந்த வித பாதிப்பும் ஏற்படாது.

மூன்று சட்ட மூலங்களை அரசாங்கம் அமைச்சரவையில் சமர்பித்துள்ளது.

திங்கட்கிழமை அமைச்சரவையில் அதற்கான அங்கீகாரம் பெறப்படும். அதன் கீழ் கடன் முகாமைத்துவத்தையும் நாம் முன்னெடுத்திருக்கிறோம்.

இதுவரை தேசிய கடன் கட்டுப்பாடு இருக்கவில்லை. கடனைக் குறைக்க நாம் கடனைக் மட்டுப்படுத்த வேண்டும் என்றார்.

## வெசாக் அலங்கார...

2017இல், அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானியின் பிரகாரம் பொலித்தீன் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 11 அத்தியாவசிய உணவு...

வர்த்தகர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. கோதுமை மா ஒரு கிலோவை 179 ரூபாவிலிருந்து 189 ரூபா வரை விற்பனை செய்வதற்கும் வெள்ளைச் சீனி ஒரு கிலோவை 258 ரூபா முதல் 275 ரூபா வரை விற்பனை செய்வதற்கும் மைசூர் பருப்பு ஒரு கிலோவை 288 ரூபா விலிருந்து 302 ரூபா வரை விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அதிகார சபை வர்த்தகர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

அதே வேளை, முட்டைகளின் விலைகளை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெள்ளை முட்டையொன்று 41 ரூபாவிலிருந்து 43 ரூபா வரை விற்பனை செய்வதற்கும் சிவப்பு முட்டை ஒன்றை 45 ரூபா முதல் 47 ரூபா வரை விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அந்த அதிகார சபை கேட்டுக் கொண்டுள்ளது.

## இலங்கை தமிழ் பெண்ணின்...

கிடைத்துள்ளது. இதற்காக அவருக்கு 150,000 அமெரிக்க டொலர்கள் பரிசு வழங்கப்பட்டது.

இலங்கை வம்சாவளி எழுத்தாளர் கனடாவின் நியூஃபவுண்ட்லாந்தில் உள்ள ஃபோகோ தீவில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பட்டியலிடப்பட்ட ஏனைய நான்கு நூல் ஆசிரியர்களுக்கு 12,500 டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன.

"இலங்கை உள்நாட்டுப் போரின் வன்முறையில் சிக்கித் தவிக்கும் தனது சகோதரர்கள் மற்றும் நண்பர்களுக்கு உதவும் கருப்பொருளில் இந்நூலின் கதை உள்ளது.

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், தமக்கு கிடைத்துள்ள இவ்வங்கீகாரம், அடக்குமுறையை எதிர்கொள்ளப் போராடும் மக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளதாக சுகி கணேசநந்தன் தனது நாவலில் தெரிவித்துள்ளார். 1980ஆம் ஆண்டு பிறந்த வி. வி. சுகி கணேசநந்தன், அமெரிக்க புனைக்கதை எழுத்தாளர், கட்டுரையாளராகத் திகழ்கிறார்.

கிராண்டா, தி அட்லாண்டிக் மந்த்லி மற்றும் தி வொசிங்டன் போஸ்ட் உள்ளிட்ட பல முன்னணி செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளில் இவரது படைப்புக்கள் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனையில் அஷ்ரப்...

விடுத்துள்ளார். எம்.எச்.எம். அஷ்ரபின் 24ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்க எம்.எச்.எம். அஷ்ரபின் பிறந்த ஊரான கல்முனையில் இந்த நினைவு அருங்காட்சியகம் நிர்மாணிக்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்காக 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி, அதற்கான நிர்மானப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

திறமையான சட்டத்தரணியும் சிறந்த சட்டமியற்றுபவருமான மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப், புகழ்பெற்ற அரசியல்வாதி.

மேலும் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்காக இவர், பெரும் பணியாற்றியவர்.

முன்மாதிரியான மற்றும் மனிதாபிமானம் நிறைந்த மக்கள் பிரதிநிதியான இவர் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே மிகவும் மதிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள்...

வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.நேற்றைய தினம் பரீட்சைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மூன்று கட்டங்களாக பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெறும் என தெரிவித்த அவர், முடிந்தளவு விரைவாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் இந்த மாதத்திற்குள் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிட முடியும் என தெரிவித்துள்ள அவர், இதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆட்கடத்தலில் ஈடுபடுவோரை...

பல தகவல்கள் கிடைத்துள்ளன. ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களைப் பயன்படுத்தியே இந்த ஆட்கடத்தல்கள் இடம்பெற்றிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். "ரஷ்யஉக்ரைன் போரில் தொடர்புபட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. கடந்த பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பாதுகாப்புப் பிரதானிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இவ்விவகாரம் தொடர்பாக சுமார் 288 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.இதில் தொடர்புபட்டதன் பேரில்,ஓய்வுபெற்ற சிரேஷ்ட இராணுவ அதிகாரி உட்பட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆட்கடத்தல் குறித்து சமூக வலைத்தளங்கள் மூலம் பிரச்சாரம் செய்யப்படுகிறது.அதிக சம்பளம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கப்படுவதாக போலி ஆசைகள் காட்டி இப்பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த ஏமாற்று முயற்சிகளில் பொதுமக்கள் சிக்கிக் கொள்ள வேண்டாம். இந்த ஆட்கடத்தல் தொடர்பில் மேலதிக தகவல்கள் தெரிந்தால் 0112 401 146 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு கோருகிறோம்.

சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றி முற்றாக அங்கவீனமடைந்த அல்லது யுத்தத்தில் உயிரிழந்த இராணுவத்தினருக்கு 55 வயது வரையில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

55 வயதின் பின்னர் அவர்களுக்கு சம்பளமோ அல்லது ஓய்வூதியமோ வழங்கப்படாதமை குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முப்படைகளுக்கு மட்டும் வழங்கப்பட்ட இந்த சலுகை சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். எனவே, இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அனுமதியைப் பெற எதிர்பார்க்கிறோம்.இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களுக்கு பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலம் இம்மாதம் 20 உடன் முடிவடைகிறது.

தற்போது பொது மன்னிப்புக்காக சுமார் 15,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் சட்டவிரோதமான முறையில் இராணுவத்தை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 357ஆக இருந்தது.

சேவையிலிருந்து விலகி மீண்டும் 799 ரே' பணிக்குத் திரும்பியுள்ளனர்.

## க.பொ.த விஞ்ஞான பாட வினாத்தாள்:...

விஞ்ஞான பாட வினாத்தாளில், கற்பித்தலுக்கு உட்படாத பிரத்தியேக கேள்விகள் வந்துள்ளமை பற்றி கவனம் செலுத்தப்பட்டன. இது தொடர்பில் கவனம்

செலுத்தியே இப்புள்ளிகள் வழங்கப்பட உள்ளன.பரீட்சைகள் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை கடந்த மே 06 இல், ஆரம்பமானது.இப்பரீட்சை

நேற்றுடன் (15 ) நிறைவு பெற்றது. இந்த வகையில் எந்த பரீட்சை வினாத்தாள்களும் ரத்துச் செய்யப்படாமல் வெற்றிகரமாக பரீட்சை நடவடிக்கைகள் நிறைவு பெற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் பரீட்சை முறைகேடுகள் சில இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. பரீட்சை தொடர்பான சட்டங்கள் இம்முறை கடுமையான விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதாலேயே, இவ்வாறான முறைகேடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

ஆங்கிலப் பரீட்சை வினாத்தாள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இப்பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் எந்த விதத்திலும் வினாத்தாள்கள் வெளியிடப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. பரீட்சைகள் இடம்பெறும் போது அவ்வாறான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுவது தொடர்பில் , கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


எவ்வாறெனினும் பரீட்சை இடம்பெறும் போது வினாத்தாள்களில் ஏதாவது சிக்கல்கள் காணப்படுமானால், பரீட்சாத்திகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் புள்ளிகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய பலன்கள்

(16.05.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)





**மேஷம் :** பழைய வாடிக்கையாளர்கள் மூலம் நல்ல திருப்பத்தை சந்திக்க நேரலாம். கூட்டு தொழிலில் கூட்டாளிகளின் தலையிட்டால் நிர்வாகத்தில் அசோகரிகம் ஏற்படலாம்.

**ரிஷபம் :** சிலருக்கு பதவியில் உயர்வும் பணியிட மாற்றமும் கிடைக்கும். சொந்த தொழில் நன்றாக நடைபெறும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள்.

**மிதுனம் :** சொந்த தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணப்புழக்கம் சரளமாக இருக்கும் என்றாலும் சிக்கனம் அவசியம்.

**கடகம் :** சொந்தத் தொழில் உற்சாகம் இருக்கும். புதிய வாடிக்கையாளர்கள் வரவினால் எதிர்பார்த்த வளர்ச்சியும் பண வரவும் வந்து மகிழ்ச்சி படுத்தும்.

**சிம்மம் :** பூர்வீக சொத்தில் இருந்து எதிர்பார்த்த லாபம் வந்து சேரும். உத்தியோகத்தர்கள் பணியை உயர் அதிகாரிகள் பாராட்டுவர்.

**கன்னி :** உயர் அதிகாரிகள் ஆதரவும் சக நண்பர்களின் ஒத்துழைப்பும் மனதிற்கு உற்சாகம் தரும். சொந்தத் தொழிலில் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**துலாம் :** பொறுப்புக்கள் கை மாறி போகும். சொந்தத் தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். வாடிக்கையாளர்களை கவர அதிக முயற்சிகள் தேவைப்படும்.

**விருச்சிகம் :** கூட்டாளிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் உண்டாக்க கூடும். குடும்பத்தில் எதிர்பாராத சிறு சிறு பிரச்சனைகள் தலை தூக்கினாலும் அவற்றை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள்.

**தனுசு :** உயர் அதிகாரிகளின் மூலம் சில சலுகைகளை பெறுவீர்கள். ஒரு சிலருக்கு சம்பள உயர்வு இடமாற்றம் வந்து சேரும்.

**மகரம் :** இதுவரையில் கைக்கு வராமல் இருந்த தொகை கிடைத்து நின்று போயிருந்த பணிகளை தொடர்வீர்கள். தொழில் ரீதியான முன்னேற்றத்திற்கு துணிச்சலான முடிவுகளை எடுப்பீர்கள்.

**கும்பம் :** கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களிடம் சுமூகமாக நடந்து கொள்வது பிரச்சினைகளை தவிர்க்கும். குடும்பம் நன்றாக நடந்து வந்தாலும் சிறு சிறு பிரச்சனைகளும் இருக்கு தான் கூடும்.

**மீனம் :** உயர் அதிகாரிகளின் அனுசரிப்பால் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

## அஸ்வெசும இரண்டாம் கட்டம்...

இப்பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அஸ்வெசும விண்ணப்பங்களை பரிசீலிப்பது, கணினி வலையமைப்பில் தரவேற்றுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள மூன்றாம் தரப்பினருக்கான கொடுப்பனவுகள் தொடர்பில், அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சீதா எலிய கும்பாபிஷேகத்தில்...

8 மணிமுதல் கர்மாரம்பம், தீர்த்தம், கிரகப் பிரதர்ஷணம், சாந்திகள், பூர்வாங்க கிரியைகள், கடகஸ்தாபனம், யாகபூஜை ஹோமம், ஸ்தூபி தீப யந்திர பிம்பஸ்தாபனம் என்பன நடைபெறவுள்ளன.மறுநாள் (18) எண்ணெய்க் காப்பும் நடைபெறவுள்ளது.

காலையில் பால்குட பவனியும், சுவாமி ஊர்வலமும் நுவரெலியா நகரிலிருந்து சீதையம்மன் கோயிலுக்கு புறப்படும்.

இந்நிலையில், கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, இந்தியாவின் திருப்பதி ஆலயத்தின் தமிழ்நாடு ஆலோசனைக் குழு தலைவர் ஏ.ஜே.சேகர் ஐயாயிரம் லட்டுக்களை வழங்குவதுடன், கும்பாபிஷேகத்திலும் கலந்துகொள்கிறார்.

## அஸ்ட்ராசெனிகா தடுப்பூசி...

என, தடுப்பூசியை உற்பத்தி செய்த நிறுவனம் ஏற்றுக்கொண்டது. இதையடுத்து, இந்நிறுவனம்

தயாரித்த அஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகள் மீளப்பெறப்பட்டன. இதன் பின்னணியில் பரவிய செய்தி குறித்தே அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

## துமிந்தவின் தடையுத்தரவை...

ஏற்கனவே தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

இதனால், இவ்வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியாதென அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆட்சேபனை வெளியிட்டுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் மனுதாரர் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சந்தன ஜயசுந்தர, கடுவலை மாவட்ட நீதிமன்றத்தின் உத்தரவு இந்நீதிமன்றத்தில் ஆதிக்கம் செலுத்தாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இருதரப்பினரதும் விடயங்களை கவனத்திற் கொண்ட கொழும்பு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சந்துன் விதான, கடுவலை நீதிமன்ற உத்தரவிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இவ்வழக்கின் முறைப்பாட்டாளரால் கோரப்பட்டுள்ள தடையுத்தரவை பரிசீலிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்கத் தூதுவர்...

சந்திக்கவுள்ளார். மக்கள் மற்றும் சமூக முன்னோடிகளின் கருத்துக்களை அறிந்துகொள்ள வடபகுதிக்கு விஜயம் செய்வதாக அவர் அறிவித்துள்ளார்.

தனது எக்ஸ் வலைத்தளத்தில் அமெரிக்கத் தூதுவர் இதைப் பதிவிட்டுள்ளார். சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் விவசாய மாணவர்களுடன் மறுசுழற்சி, பாதுகாப்பு மற்றும் மரங்களை நடுதல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சிறப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.

இதன்போது, அமெரிக்க தூதர் ஜூலி சங் மற்றும் அமெரிக்கன் கோனர் உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

## சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள்...

வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.நேற்றைய தினம் பரீட்சைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மூன்று கட்டங்களாக பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெறும் என தெரிவித்த அவர், முடிந்தளவு விரைவாக பெறுபேறுகளை வெளியிடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் இந்த மாதத்திற்குள் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிட முடியும் என தெரிவித்துள்ள அவர், இதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கந்தளாய், பேராறு விவசாயிகள் காட்டு யானைகளால் அச்சம்

**கிண்ணியா மத்திய நிருபர்**

திருகோணமலையின் கந்தளாய், பேராறு விவசாய இடங்களில் காட்டு யானைகளின் தொல்லை காரணமாக விவசாய நடவடிக்கையை சீராக மேற்கொள்ள முடியாத நிலைமை உள்ளதாக, அவ்விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், பேராறு விவசாய இடங்களில் மாலை 5.00 மணிக்கு பின்னர் கூட்டம் கூட்டமாக வரும் காட்டு யானைகளால் தினமும் தாம் அச்சத்துடன் இருப்பதாகவும் காட்டு யானைகள் தமது வேளாண்மையை சேதப்படுத்துவதாகவும், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக நீர் தேடி கிராமங்களுக்குள் வரும் காட்டு யானைகளே விவசாய நிலங்களையும் மக்களின் வீடுகளையும் இவ்வாறு சேதப்படுத்துகின்றன.

சிறுபோக நெற்செய்கை தற்போது ஆரம்பித்து மூன்று வாரங்களாகும் நிலையில் அப்பயிர்களை காட்டு யானைகள் துவம்சம் செய்துள்ளது. இதனால் தாம் நட்டத்தை எதிர்நோக்குவதாகவும், விவசாயிகள் கூறுகின்றனர்.

எனவே காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்தி, தமது வேளாண்மை செய்கையை சீராக முன்னெடுப்பதற்கு யானை தடுப்பு வேலிகளை அமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# திடீர் மரண விசாரணை அதிகாரி நியமனம்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**



இறக்காமம் பிரதேச வரலாற்றில் முதலாவது திடீர் மரண விசாரணை அதிகாரியாக இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உமர் கத்தா ஜபிர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டது.

இவருக்கான நியமனக் கடிதத்தை நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ வழங்கி வைத்துள்ளார்.

# தோப்பூர் சந்தையில் பாவனைக்குதவாத பெரிய வெங்காயம்

**தோப்பூர் குறூப் நிருபர்**

திருகோணமலையின் மூதூர் பிரதேச சபைக்குட்பட்ட தோப்பூர் வாராந்த சந்தையில் பாவனைக்கு உதவாத 170 கிலோ கிராம் பெரிய வெங்காயங்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றி அழித்துள்ளனர்.



தோப்பூர் வாராந்த சந்தையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திடீர் சோதனை நடத்தினர்.

இதன்போது மனித பாவனைக்கு உதவாத பெரிய வெங்காயங்களை தாம் கைப்பற்றி அழித்ததாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# காரைதீவு கண்ணகை அம்மன் கோயிலில் பச்சை கட்டல் விழா





**காரைதீவு குறூப் நிருபர்**

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயிலின் வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு விழாவின் பச்சை கட்டல் விழா பகல் வேளை பூஜையுடன் நேற்று புதன்கிழமை மிகச் சிறப்பாக ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில் தொடர்ந்து ஐந்து தினங்கள் பகல் வேளை பூஜையுடன் பச்சை கட்டல் விழா மிகச் சிறப்பாக நடைபெறுமென, காரைதீவு கண்ணகை கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

நேற்று புதன்கிழமை ஆரம்பமாகியுள்ள பச்சை கட்டல் திருவிழாவில் கண்ணகை அம்மன் அடியார்கள் பலர் கலந்து கொண்டு பச்சை கட்டல் விழாவை சிறப்பித்துள்ளதுடன், வழிபாட்டிலும் அவர்கள் ஈடுபட்டனர்.

காரைதீவு கண்ணகை அம்மன் கோயிலில் கடந்த 13ஆம் திகதி (திங்கட்கிழமை) திருக்குளிர்த்தி சடங்கு மிகச் சிறப்பாக ஆரம்பாகியது.

இதனைத் தொடர்ந்து எட்டு தினங்கள் திருக்குளிர்த்தி சடங்கு விழா நடைபெற்று வரும் வகையில் திருக்குளிர்த்தி சடங்கு விழா சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் எதிர்வரும் 21ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) அதிகாலை நான்கு முப்பது மணிக்கு திருக்குளிர்த்தி பாடல் இசைக்கப்பட்டு, திருக்குளிர்த்தி சடங்கு விழா இனிதே நிறைவடையுமென, மேற்படி கோயில் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

திருக்குளிர்த்தி சடங்கு விழாவில் கண்ணகை அம்மன் பக்தர்கள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறும், மேற்படி கோயில் நிர்வாகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# சர்வதேச தாதியர் தின நிகழ்வு

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



சர்வதேச தாதியர் தினத்தை முன்னிட்டு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் தாதியர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஐ.என்.பீ.எஸ். கெம்பஸ் ஏற்பாட்டில் சர்வதேச தாதியர் தின நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் விசேட வளவாளராக சிரேஷ்ட உளவளத்துறை ஆலோசகரும் விரிவுரையாளருமான மனூஸ் அபூபக்கர் உட்பட அதிதிகள் மற்றும் தாதி உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சேவைநலன் பாராட்டி கௌரவிப்பு விழா

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் கடந்த 24 வருடங்களாக காவலாளியாக கடமையாற்றிய எஸ்.எல்.ஏ.அப்துல் மஜீத் கடந்த திங்கட்கிழமை தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றதையிட்டு பாடசாலை நிர்வாகத்தினரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். இவர் இப்பாடசாலைக்கு ஆற்றிய சிறந்த சேவையை பாராட்டி பாடசாலை நலன்புரி சங்கத்தினரால் பிரியாவிடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. அவருக்கு கல்லூரி அதிபர் ஏ.எச்.பௌஸ் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கி கௌரவித்தார்.

இதேவேளை பிரியாவிடை பெற்றுச் செல்லும் எஸ்.எல்.ஏ.அப்துல் மஜீத், பாடசாலை அதிபரின் சேவையை பாராட்டி அதிபருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# மாற்றுத்திறனாளிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்வு

**தம்பலகாமம் குறூப் நிருபர்**



திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்தால் மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நிகழ்வு திருகோணமலை நகர சபையின் பொது நூலக மண்டபத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

விசேட தேவையுடையோருக்கான சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கௌரிசாந் தலைமையில் இந்த விழிப்புணர்வு நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை நகர சபையின் செயலாளர் வெ.இராஜசேகர், மாவட்ட சமூக சேவை இணைப்பாளர் த.பிரணவன், நகர சபை பொது நூலகத்தின் பிரதம நூலகர் ந.யோகேஸ்வரன், நூலகர் றிம்சானா, நூலக உதவியாளர்களான அ.அச்சுதன், உ.ரஜனிக்காந் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய வெசாக் தினம் இம்முறை மாத்தளை மாவட்டத்தில் அனுஷ்டிப்பு

## இந்து, முஸ்லிம், கத்தோலிக்க திணைக்களங்களும் பங்கேற்பு

**கொழும்பு தினகரன் நிருபர்**

இவ்வருட தேசிய வெசாக் தினம் அரசாங்கத்தின் ஏற்பாட்டில் மாத்தளை மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் வழி நடத்தலில் குறித்த தேசிய நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கத்தோலிக் சமய கலாசார திணைக்களம் என்பவும் பங்கேற்கவுள்ளன.

குறித்த நிகழ்வை முன்னிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மாத்தளை கொங்காவெல ஜும்ஆப் பள்ளிவாசலில் எதிர்வரும் 22ஆம் திகதி காலையில் இரத்ததான நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளது. அத்துடன் நிகழ்வில் பங்குபற்றும் அஹதிய்யா மற்றும் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு திணைக்களத்தினால் உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்படவுள்ளன. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மாத்ளை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சமய நிகழ்வுகளையும் அன்னதான நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்துள்ளதுடன் ஆலயத்தினால் நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை, காலாசார நிகழ்வுகளும் பெரஹராவில் இடம்பெறவுள்ளது.

# வாகன விபத்தில் இளம் பெண் பலி

## கல்கமுவ பகுதியில் சம்பவம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கல்கமுவ பொலிஸ் பகுதிக்குட்பட்ட பாதெனிய அநுராதபுரம் வீதியில் குருந்தன் குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் (15) தெரிவித்தனர்.

கல்கமுவ பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளவராவர்.

பாதெனிய பகுதியில் இருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்த கார் ஒன்று எதிர் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்து.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற பெண் ஒருவர் காயமடைந்து கல்கமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய கார் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பில் கல்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.






## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/6589(EL) | 180M of 4 Pair X 2.5 SQMM Festoon Cable for Cranes at JCT | 50,000.00 | 1,000.00 | 2024.06.27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/24/PT/6588(MP) | 08 Nos. Rotary Actuator for RAM Spreaders at JCT | 160,000.00 | 3,500.00 | 2024.06.27 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/24/PT/17/004 | 01 No. Hydraulic Hand Pump | 20,000.00 | 1,000.00 | 2024.06.06 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/23/011 | 01 No. Non-Linear Video Editing System Solution & Adobe SW | 30,000.00 | 1,000.00 | 2024.06.06 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/17/014 | 40 Nos. Network Layer-2 Switches | 100,000.00 | 3,500.00 | 2024.06.06 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/01/05 | Fuel Injectors for Caterpillar C – 15 Engine of RTG Cranes | 120,000.00 | 3,500.00 | 2024.06.07 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/17/053 | Spares for Cummins NtA 855 Engines of RTG Cranes | 250,000.00 | 3,500.00 | 2024.06.07 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/24/PT/03/052 | 04 Nos. Cast Steel Gate Valve – 10K 125 – 02 Nos. – Cast Steel Gate Valve – 10K200 | 50,000.00 | 1,000.00 | 2024.06.07 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்துசாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்படவிரும்பினால்,பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவுசெய்து உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுசான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும் (பிசிஏ 03 படிவம்)
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பொருட்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2024 மே 17 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலைநாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணிவரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கிலமொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45,லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638.**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# கிழக்கின் குரல்



## கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம்; தீர்வு கிடைக்குமென உறுதி

### ஜனாதிபதி சாதகமான பதில் வழங்கியதாக முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன் தெரிவிப்பு

**வாச்சிக்குடா விசேட நிருபர்**

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு கணக்காளர் நியமிக்கப்பட்டு, கணக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு தீர்வு வழங்கப்பட வேண்டுமென்று தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ஜனாதிபதி சாதகமான பதில் வழங்கியுள்ளதாக, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

இதற்கான தீர்வு காணப்படுமெனவும் பிரதமருடன் கலந்துரையாடி தீர்வை பெற்றுத் தருவதாகவும் ஜனாதிபதி சாதகமான பதில் வழங்கியுள்ளதாகவும், அவர் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. க.கோடீஸ்வரன், மன்னார் மாவட்ட எம்.பி. சார்ள்ஸ் நிர்மலநாதன், மனித உரிமை செயற்பாட்டாளரும் மாணவர் மீட்பு பேரவைத் தலைவருமான செ.கணேசானந்தம், கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் க.சிவலிங்கம், தமிழரசுக் கட்சியின் ஆலையடிவேம்பு பிரதேச கிளைத் தலைவர் ஆர்.ஜெகநாதன் உள்ளிட்டோருக்கும் இடையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மாளிகையில் சந்திப்பு நடைபெற்றுள்ளது. இதன்போது பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் ஜனாதிபதியிடம் முன்னாள் எம்.பி. கோடீஸ்வரன் கையளித்துள்ளார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் மீதான அதிகார துஷ்பிரயோகம், அப்பிரதேச செயலகத்துக்கு கணக்காளர் நியமனம், புதிய கணக்கு ஆரம்பித்தல், காணி விடயம் தொடர்பாக அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொத்துவில் வடக்கையும் சம்மாந்துறை மேற்கையும் மையப்படுத்தி இரு புதிய பிரதேச சபைகளை உருவாக்குதல், கல்முனை வடக்கு, நாவிதன்வெளி, சம்மாந்துறை, காரைதீவு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளை ஒன்றிணைந்து புதிய கல்வி வலயத்தை உருவாக்குதல் ஆகியவை தொடர்பாகவும் கோரப்பட்டுள்ளன. கல்வி, சுகாதாரம் உட்பட ஏனைய விடயங்களில் வளப்பங்கீடு, குறிப்பாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டாலும் அதற்குரிய வளங்கள் முறையாக இதுவரை



வழங்கப்படவில்லை. 25க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் கடமையாற்ற வேண்டிய இடத்தில் 05 வைத்தியர்கள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆகவே முழுவளவிலான வளப்பங்கீடு உடனடியாக வழங்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. ஆலையடிவேம்பு, திருக்கோவில், பொத்துவில் போன்ற கரையோரப்பகுதிகளில் இல்மனைட் அகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், இதனால் அப்பகுதிகளில் வாழும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிப்பை எதிர்நோக்க நேரிடுமெனவும் இச்செயற்பாட்டை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அக்கரைப்பற்று சின்னமுகத்துவாரம், திருக்கோவில் பெரியமுகத்துவாரத்தினூடாக முறையற்ற விதத்தில் வெளியேற்றப்படும் களப்புநீரை சேமித்து உரிய குளங்களுக்கு விடவும் முகத்துவாரத்தினூடாக நீர் செல்லும் இடங்களில் நிலையான அணைகளை அமைக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதியிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அனர்த்த முன்னெச்சரிக்கை விபரம்; Google படிவமூடாக தகவல் திரட்டல்

**ஒலுவில் விசேட நிருபர்**



அனர்த்த முன்னெச்சரிக்கை தொடர்பான விபரங்கள் துரிதகதியில் பொதுமக்களை சென்றடைவதற்கான பொறிமுறையை வலுப்படுத்தும் நோக்கில் Google படிவமூடாக தகவல் திரட்டப்பட்டு வருவதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தெரிவித்தார்.

இந்நிலையில் அனர்த்த முன்னெச்சரிக்கை தகவல்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள Google படிவத்தை இம்மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்துமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் தேசிய மட்டத்தில் அனர்த்த அபாய குறைப்பு செயற்றிட்டத்தை முன்னெடுக்கும் ஓரங்கமாக முன்னெச்சரிக்கை பொறிமுறையை வலுப்படுத்த வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தால் உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுவரும் தாக்கம் மற்றும் அனர்த்த பாதிப்பிலிருந்து மக்களை பாதுகாப்பது இதன் நோக்கமாகும்.

அத்துடன் நிலையான அபிவிருத்தியுடன் அனர்த்த குறைப்பு செயற்றிட்டத்தை முன்கொண்டு செல்ல கிராமங்கள் தோறும் அனர்த்த முகாமைத்துவ தொண்டர் குழுக்களை வழிப்படுத்துவதற்கான செயற்றிடங்களும் முன்னெடுக்கப்படுவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## முதியோர்களுக்கு உலர் உணவுகள் விநியோகம்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேசத்தில் மிகவும் கஷ்டத்துடன் வாழ்ந்து வரும் 40 முதியோர்களின் குடும்பங்களுக்கு மூதூர் சமூக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிலையத்தால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. மூதூர் முதியோர் சங்கத்தில் பெருமளவான முதியோர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளனர். இவர்களுள் பலர் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றமை தொடர்பாக மூதூர் சமூக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிலையத்துக்கு மூதூர் முதியோர் சங்க நிர்வாகத்தினர் தெரியப்படுத்தியிருந்தனர். இந்நிலையில் தெரிவு செய்யப்பட்ட முதியோர் குடும்பங்களுக்கு அன்றாட உணவுத் தேவைக்கான உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வரோதய நகரிலுள்ள

## இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் பௌதீகவள அபிவிருத்தி



**தோப்பூர் குறூப், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**

திருகோணமலையின் வரோதய நகரில் இயங்கி வருகின்ற இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் பௌதீகவள அபிவிருத்தி மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அதாஉத செனவிரத்னவை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் நேரில் சந்தித்து கலந்துரையாடிய போதே, மேற்படி விடயம் கவனத்தில் கொள்ளப்பட்டது.

திருகோணமலைக்கு கள விஜயம் செய்து திருகோணமலை வளாகத்திலுள்ள பிரச்சினைகளை பார்வையிடுமாறு இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு இம்ரான் மஹ்ரூப் எம்.பி. வேண்டுகோள் விடுத்தார். இதனை செவிமடுத்த நிறைவேற்றுப் பணிப்பாளர், விரைவில் திருகோணமலை வளாகத்தை பார்வையிட வருவதாக உறுதியளித்துள்ளார்.

## காட்டு யானை தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு

**கிண்ணியா மத்திய, கந்தளாய் தினகரன் நிருபர்கள்**

திருகோணமலையின் கந்தளாய், சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிங்கவெவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை காட்டு யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். கந்தளாய், சூரியபுரவைச் சேர்ந்த 74 வயதுடைய எச்.ஆர். பொடி மாத்தையா எனும் விவசாயியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு வரும் இவர், தனது வயலுக்கு சென்றுகொண்டிருந்த போதே இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியதாக, பொலிஸார் தெரிவித்தனர். கந்தளாய் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை சூரியபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டு. கமக்கார அமைப்புகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்

### அமைச்சர் மஹிந்த அமரவீர

**மணல்சேனை நிருபர்**



மட்டக்களப்பு கமக்கார அமைப்புகளின் மாவட்ட அதிகார சபையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் மஹிந்த அமரவீரவை கொழும்பு விவசாய அமைச்சில் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு கமக்கார அமைப்புகளின் மாவட்ட அதிகார சபைத் தலைவர் ச.சந்திரமோகன் தலைமையிலான குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர். பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனிடம் கமக்கார அமைப்புகளின் மாவட்ட அதிகார சபையினர் விடுத்த கோரிக்கைக்கமைய இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

2023/2024 பெரும்போக காப்புறுதி நட்டஈடு உரிய முறையில் வழங்க ஏற்பாடு, உரத்துக்கான மானிய பண வைப்பை துரிதப்படுத்தல், நெல்லுக்கான நிர்ணய விலை, நெல் சந்தைப்படுத்தல் சபை மூலம் நெல் கொள்வனவு, நவீனமுறை விவசாயம், மட்டக்களப்பில் நிலவும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பற்றாக்குறை, கமநல அபிவிருத்தி திணைக்களத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் ஆகியவை தொடர்பாக இதன்போது கலந்துரையாடியதாக, கமக்கார அமைப்புகளின் மாவட்ட அதிகார சபையினர் தெரிவித்தனர்.

## ஒலுவிலில் வாலிப முன்னணி ஸ்தாபகர் தினம்



**பாலமுனை தினகரன் நிருபர்**

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் ஸ்தாபகர் தினம் அம்முன்னணியின் அம்பாறை மாவட்ட சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஒலுவில் கிறீன்வாசல் ஹோட்டலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட நிறைவேற்றுப் பணிப்பாளரும் முன்னாள் தேசிய தலைவருமான எம்.ஐ.உதுமாலெவ்வையின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு அமைப்பின் மாவட்ட ஆலோசகர்கள், முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்களாகிய பலர் கலந்து கொண்டனர்.

கடந்த காலத்தில் அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியில் பல்வேறு பணிகளாற்றிய சமூக சேவையாளர்கள் நினைவுச்சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## கிண்ணியாவில் புதிய கணினி தொழில்நுட்ப நிலையம் திறப்பு



**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பூவரசன்தீவு கிராம அலுவலர் பிரிவிலுள்ள தி/கிண்ணியா அல்மினா மஹா வித்தியாலயத்தில் கணினி தொழில்நுட்பப்பிரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அல்ஹிக்மா பவுண்டேஷனின் அனுசரணையுடனும் பிரித்தானியாவை தளமாக கொண்டியங்கும் Benefid Mankind நிறுவனத்தின் நிதி உதவியுடனும் இந்நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி, லண்டனிலிருந்து வருகை தந்த நிதி உதவியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்.

## மூதூர் வைத்தியசாலையில் இரத்ததான முகாம்



**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் தள வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 2005ஆம் ஆண்டு மூதூர் மத்திய கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரத்தில் பயின்ற மாணவர் குழுவினரின் ஏற்பாட்டிலும் இவ் வைத்தியசாலையின் அனுசரணையுடனும் இரத்ததான முகாம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது.

மூதூர் தள வைத்தியசாலை வைத்தியர்களின் ஆலோசனைக்கமைய இதன் ஏற்பாடுகளை 'உயிருக்காக உதிரம் கொடுத்து, உயிர் காப்போம்' எனும் கருப்பொருளின் கீழ் இம்மாணவர்கள் மூதூர் தள வைத்தியசாலையில் மேற்கொண்டனர்.

இரத்ததானம் வழங்கும் நிகழ்வில் இளைஞர்கள், அரச ஊழியர்கள் உட்பட பெருமளவானோர் மிக ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

## சவூதியின் இலங்கை தூதுவருக்கு பிரியாவிடை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**



சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் பி.எம்.எம். அம்சாவுக்கு பிரியாவிடை நிகழ்வு மற்றும் சவூதி வாழ் காத்தான்குடி சமூகத்தின் நான்காவது ஒன்றுகூடல் நிகழ்வும் சவூதி வாழ் காத்தான்குடி சமூகத்தின் (KCSA) ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை கல்விச் சேவை உட்பட 40 வருடகால வெளிநாட்டு இராஜதந்திர சேவையை பாராட்டி சவூதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் அம்சா பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். மிகவும் விமர்சையாக நடைபெற்ற இந்நிகழ்வில் றியாத் மற்றும் அதனை அண்டிய பிரதேசத்தில் வசிக்கும் சவூதி வாழ் காத்தான்குடி சமூகத்தின் நூற்றுக்கும் அதிகமான உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## மாவடிப்பள்ளி அந்நூர் பாலர் பாடசாலைக்கு புதிய கட்டடம்

**அட்டாளைச்சேனை விசேட நிருபர்**

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து மாவடிப்பள்ளி அந்நூர் பாலர் பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

முஷாரப் எம்.பி.யின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி அஸாம் அப்துல் அஸீஸின் வேண்டுகோளுக்கமைய இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்காக பத்து இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர், ஜும்மா பள்ளிவாசல் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



"கல்விக்கு கைகொடுப்போம்"

# ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் வறிய மாணவர்களுக்கு மடிக் கணினி



"கல்விக்குக் கைகொடுப்போம்" என்ற வேலைத்திட்டத்தின் கீழ் ஹாஷிம் உமர் பௌண்டேசன் வறிய மாணவர்களுக்கு மடிக் கணினி வழங்கும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமரின் சிந்தனையில் உதித்த "கல்விக்கு கைகொடுப்போம்"என்ற சிந்தனைக்கு அமைவாகவே மேற்குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஹாஷிம் உமர் பௌண்டேசன் பல்வேறு சமூக சமய நலத்திட்டங்களை பலவருட காலமாக முன்னெடுத்து வருகின்ற நிலையிலேயே குறித்த திட்டத்தையும் முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் மாணவர்கள் மேற்படி திட்டத்துக்குள் உள்ளீர்க்கப்படவுள்ளனர். இந்நிலையில் ஹாஷிம் உமர் பௌண்டேசனுக்கு கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் ஐவரடங்கிய நடுவர்கள் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு அவர்களின் சிபார்சுக்கு அமைவாக விநியோகிக்கப்படும் என புரவலர் ஹாஷிம் உமர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் நியமன போட்டிப்பரீட்சை முறையை

# நாட்டில் அன்று அறிமுகப்படுத்தியவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே

## பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன புகழாரம்

**வெலிகம தினகரன் நிருபர்**

அன்று கல்வி அமைச்சராக இருந்த இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் கடும் எதிர்ப்பையும் மீறி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை முறைமையை அறிமுகப்படுத்தினார். இந்த திட்டம் இன்று ஆசிரியர்களாக கடமை புரியும் அனைவருக்கும் பயனளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன குறிப்பிட்டார்.

வெலிகமயில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில்; ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்படும் போது பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். பல சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. இவ்வாறான நிகழ்வுகள் வளர்ந்த நாடுகளிலும் இடம்பெறுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இடைவெளி ஏற்பட்ட பாடசாலைகளில் விண்ணப்பங்கள் மூலம் இடைவெளி நிரப்பப்படுகின்றன. இதே நடைமுறைகளைத் தான் நாமும் பின்பற்ற வேண்டும்.

இருப்பினும் 1977இல் நாம் ஆட்சிக்கு வந்ததும் அரசியல் வாதிகளினால் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

எனினும் அதனை போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனம் வழங்கும் முறைமையை ரணில் விக்கிரமசிங்கவே அன்று ஏற்படுத்தினார்.

சமூக நீதிக்காக நின்ற ஒரு தலைவருக்கு மக்கள் எப்படி நன்றி செலுத்துகிறார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆசிரியர்களாகிய அனைவரும் இளம் மாணவர்களுக்கு நன்றியின் மதிப்பை கற்பிப்பது ஆசிரியர்களது பொறுப்பு. பிரிவினையானது நாட்டின் அழிவுக்கு வழிவகுக்கும் என்பதை குடிமக்கள் அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

எவ்வாறாயினும் நாடு அழிந்து போன போது நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்ற திறமையான தலைவர் கிடைத்தமை நாம் அனைவரும் பெற்ற அதிர்ஷ்டம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# நீங்கள் தாய்மை அடைவதற்கான முதற்படி இதுவே

டொக்டர் கீதா ஹரிப்ரியா



வெள்ளவத்தை, ரோயல் மருத்துவமனை ஏற்பாடு செய்திருக்கும் மகப்பேற்றுக் குறைபாடுகளுக்கான இலவச மருத்துவ ஆலோசனை முகாம் நாளை மறுதினம் 18ஆம் திகதியும், 19ஆம் திகதியும் மட்டக்களப்பிலும் கண்டியிலும் நடைபெறவிருக்கிறது. இதில், பிரதம அழைப்பாளராகக் கலந்துகொள்ளவிருக்கும் உலகப் புகழ்பெற்ற செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சை நிபுணர் டொக்டர் கீதா ஹரிப்ரியா, தினகரன் பத்திரிகைக்காக அளித்த விசேட தகவல் இது.

கொவிட் முடக்கத்துக்குப் பிறகு, முதன்முறையாக, அதாவது, ஏறக்குறைய, 5 வருடங்களுக்குப் பிறகு, மட்டக்களப்புக்கும் கண்டிக்கும் விஜயம் செய்யவிருப்பது பற்றி எனக்கே சற்று ஆர்வமாக இருக்கிறது. இதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கும் ரோயல் மருத்துவமனைக்கு எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழந்தைப் பேற்றுக் குறைபாடுகளும் ஏனைய குறைபாடுகள் போன்றதே! அதற்காக சிகிச்சை எடுத்துக்கொள்வது எவ்விதத்திலும் இயற்கைக்கு மாறானதோ அல்லது தவறானதோ அல்ல. இயற்கையாக, ஒரு பெண்ணின் உடலுக்குள் நடக்கவேண்டிய கருத்தரிப்பை மட்டும் வெளியே, மருத்துவ உதவியுடன் செய்கிறோம். அவ்வளவுதான் வித்தியாசம். அது தவிர, குழந்தை வளரப்போவது முழுக்க முழுக்க குறிப்பிட்ட பெண்ணின் கருப்பையின் உள்ளேதான். எனவே, இது பற்றிய தவறான அபிப்பிராயங்களைக் களைந்துவிட்டால், உங்களது வாழ்க்கையிலும் மகிழ்ச்சி பெருகும்.

இந்நாட்களில், குழந்தையின்மையால் பாதிக்கப்படும் தம்பதியரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது. காரணம், அவர்களது வாழ்க்கை முறை மாற்றம்தான். பணிச்சுமை, ஆடை, உணவு, பெருகிவரும் புகை மற்றும் மதுபானப் பாவனை, தூக்கமின்மை மற்றும் இவற்றால் ஏற்படும் மன அழுத்தம், அதிக வயதில் திருமணம் என்பனவே இதற்குக் காரணம். எனவே, 'எனக்கு மட்டும் ஏன் இப்படி?' என்று கூனிக் குறுக வேண்டிய அவசியம் இல்லை.

"ஒருவருக்குக் காது கேட்காது என்றால், அதற்கான சிகிச்சையைச் செய்துகொண்டால் அந்தக் குறை தீர்ந்தது. இதுபோன்றே ஏனைய குறைபாடுகளும். அதற்கு எந்தவிதத்திலும் வேறுபட்டதல்ல இந்த செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சை."

"முன்னைய காலங்களில் முப்பத்தைந்து வயதுக்குள்ளான பெண்களுக்கு மகப்பேறுக்கான அறிகுறிகள் எதுவும் இல்லாதவிடத்து பரிசோதனைகள் செய்துகொள்ள வேண்டும் என்று கூறப்பட்டது. ஆனால், இன்று எந்த வயதில் இருந்தாலும் சரி, திருமணமாகி ஒரு வருடத்துக்குள் குழந்தைப் பேற்றுக்கான அறிகுறி இல்லாதவிடத்து பொருத்தமான பரிசோதனைகளைச் செய்வதுடன், தகுந்த மருத்துவர் ஒருவரது ஆலோசனையையும் பெற்றுக்கொள்வது அவசியமாகிவிட்டது.

"ஒருவேளை, இயற்கையாகத் தாய்மை அடையும் வாய்ப்பு இல்லாமல் போகும் சந்தர்ப்பத்தில், 'நிச்சயம் எனக்கு ஒரு குழந்தை வேண்டும்' என்று நீங்கள் நினைப்பீர்கள் என்றால், உடனடியாக செயன்முறைக் கருத்தரிப்பு சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள நீங்கள் முன்வர வேண்டும். ஏனென்றால், முப்பது வயதுக்குப் பிறகு, பெண்களின் கருமுட்டையின் தரம் குறைய ஆரம்பிக்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, நாட்கள் செல்லச் செல்ல, குழந்தைக் கனவை நனவாக்கிக் கொள்ள அதிக காலத்தையும் பொருளாதாரத்தையும் செலவிட வேண்டி வரலாம்.

"2015ஆம் ஆண்டு வரை, என்னிடம் சிகிச்சை பெற விரும்பிய இலங்கைத் தம்பதியர், எனது சென்னை மருத்துவமனைக்கே அழைப்பை ஏற்படுத்தி, சிகிச்சைகள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இன்றோ, இலங்கையில் அமைந்துள்ள எமது அலுவலகத்திலேயே நீங்கள் சகல விபரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே நான் சொன்னவற்றையெல்லாம் தொகுத்துப் பார்த்தீர்கள் என்றால், குழந்தைப் பேற்றுக்காகக் காத்திருக்கும் தம்பதியினர், இந்த முகாம்களில் கலந்துகொள்வது சாலச் சிறந்தது என்பதை உணர்ந்துகொள்வீர்கள்.

ஒருவேளை, நீங்களும் குழந்தையின்மையால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவர் என்றால், இந்த வாய்ப்பைத் தவறவிடாமல், எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமையன்று மட்டக்களப்போ கோல்டன் ரிவர் மண்டபத்திலோ, அல்லது மறுதினம் 19ஆம் திகதி ஞாயிறன்று கண்டி சங்கராஜ மாவத்தையில் டெவோன் ஹோட்டலுக்கு அருகிலேயே அமைந்துள்ள சிங்கள வெலந்த பெரமுன மண்டபத்தில் என்னைச் சந்திக்கலாம்.


## தேர்தல் ஆணைக்குழு

### Fire Wall கொள்வனவுக்கான பெறுகை

01. மேற்குறிப்பிடப்பட்ட பெறுகை தொடர்பாக 2024.05.19 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட செய்திப் பத்திரிகை அறிவித்தலுடன் தொடர்புடையதாகும்.

02. அதற்கிணங்க மேற்குறிப்பிட்ட Fire Wall துணைப் பாகங்களை கொள்வனவு செய்தலுடன் தொடர்புடைய பெறுகைக்குரிய விலைமனுக்களை திறக்கும் திகதியை 2024.05.30 ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்தோடு விலைமனுதாரர்களுக்கு கேள்விப் பத்திர ஆவணங்கள் தொகுதியை 2024 மே மாதம் 29 ஆம் திகதி வரை வாரத்தில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளல் முடியும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேர்தல் ஆணைக்குழு,**
**இல. 02 சரண மாவத்தை,**
**இராஜகிரிய,**
**தொ.பே : 011-2868441**
**2024.05.15**



## பெறுகை அறிவித்தல்

**நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்**

DNCWS

### கேள்வி மனுக்கோரல்

திணைக்கள குழுவின கொள்முதல் தலைவரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| பெயர் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர் | தகமைகள் | மீளளிக்கப்படாத கட்டணம் LKR | மனு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுப் பாதுகாப்பு LKR | மனுப் பாதுகாப்பு செல்லுபடியாகும் (நாட்கள்) | மனுக்கள் மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| Civil Works at Kurunegala DistrictBamunakotuwa Henegedara, Henegedara CBO **Contract No: DNCWS/ PRO/2024/ CV/KN/01** | CIDA Grade C7/C6/C5 | 3,000 | 77 | 110,000 | 12.09.2024 | 2024.05.30 மு.ப.10.00 |
| Civil Works at Trincomalee District, Gomarankadawala, Kivulakadawala, Kuttikulam CBOs **Contract No: DNCWS/PRO/2024/CV/TR/01** | CIDA Grade C7/C6/C5 | 3,000 | 77 | 105,000 | 12.09.2024 | |
| Civil Works at Trincomalee District, Gomarankadawala, Kandamalawa, Kandamalawa CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/TR/02** | CIDA Grade C7/C6/C5 | 3,000 | 77 | 105,000 | 12.09.2024 | |
| Civil Works at Anuradhapura District, Rajanganaya Yaya 03, Dunhida CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/AN/01** | CIDA Grade C7/C6/C5 | 2,500 | 77 | 75,000 | 12.09.2024 | |
| Civil Works at Hambantota District,Sooriyawewa ,mahagalwawa, Suhada CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/HT/02** | CIDA Grade C6/C5/C4 | 3,500 | 77 | 150,000 | 12.09.2024 | |
| Civil Works at Batticaloa District, Koralaipattu North Kayankerny 211 A, Valluvar Water User Association **Contract No: DNCWS/PRO/2024/CV/BT/02** | CIDA Grade C6/C5/C4 | 3,500 | 77 | 140,000 | 12.09.2024 | |
| Civil Works at Batticaloa District,Eravurpattu ,Marapalam 185 C ,Thakam Theertha Thanayan Water User Association **Contract No: DNCWS/PRO/2024/CV/BT/03** | CIDA Grade C6/C5/C4 | 3,500 | 77 | 150,000 | 12.09.2024 | |
| Civil Works at Kegalle District, Ruwanwella , Raththagala , Udathenna Samagi CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/KG/03** | CIDA Grade C7/C6/C5 | 3,500 | 77 | 105,000 | 12.09.2024 | |
| Civil Works at Polonnaruwa District, Lankapura, Kegalugama Ulpathgagula CBOs **Contract No: DNCWS/PRO/2024/CV/PO/03** | CIDA Grade C7/C6/C5 | 3,500 | 77 | 120,000 | 12.09.2024 | |
| Civil Works at Jaffna District,Valikamam South West , Marisankoodal J/154 , Marisankoodal Water User Association (Recall) **Contract No: DNCWS/PRO/2024/CV/JF/01** | CIDA Grade C8/C7/C6 | 3,000 | 77 | 105,000 | 12.09.2024 | |
| Civil Works at Kegalle District Warakapola Manikkadawara Sisilasa CBO **DNCWS/PRO/2024/CV/KG/04** | CIDA Grade C4/C3 | 12,000 | 91 | 650,000 | 26.09.2024 | 2024.06.06 மு.ப.10.00 |
| Civil Works at Nuwaraeliya District,Walapane Harasbedda Medhavi CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/NE/02** | CIDA Grade C4/C3 | 7,000 | 91 | 410,000 | 26.09.2024 | |
| Civil Works at Ampara District Pathiyathalawa galloda (Madupotha Lindagala ) Thiyareliya CBO **DNCWS/PRO/2024/CV/AM/01** | CIDA Grade C4/C5/C6 | 4,000 | 91 | 175,000 | 26.09.2024 | |
| Civil Works at Matale District, Ambangaga Korale ,Aluthwela ,Shakthi CBO **Contract No: DNCWS/PRO/2024/CV/ML/02** | CIDA Grade C4/C3 | 6,500 | 91 | 375,000 | 26.09.2024 | |
| நீர் வழங்கல் மற்றும் கழிவுநீருக்கான CIDA பதிவு கட்டாயமாகும் | | | | | | |

**மேல் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

01. கோள்விப்பத்திரங்களை **கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட கோரிக்கை மற்றும் மீள்ச்செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டினை** தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2 வது மாடியில் உள்ள கொள்முதல் பிரிவில் சமர்ப்பித்து மனு ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம் (மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள கொள்முதல் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்).

02. மனு ஆவணங்கள் **2024.05.29 ஆம் திகதி மற்றும் 2024.06.05 ஆம் திகதி வரை** வழங்கப்படும். (**மு.ப.09.00 மணி முதல் பி.ப. 3.00 வரை**)

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் **சாதாரண வேலை நாட்களில் (மு.ப.09.00 மணி முதல் பி.ப. 3.00 வரை)** ஆவணங்களை வழங்கும் இடத்தில் **மனு ஆவணங்களை** இலவசமாகப் பரிசீலனை செய்யலாம்

04. கேள்வி மனுக்களை திணைக்களத்தின் 2வது மாடியில் **(கொள்முதல் பிரிவில்)** வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியினுள் இடல் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு **பதிவுதபால் மூலமாக அல்லது விரைதூதர் மூலமாக** அனுப்பிவைக்க வேண்டும்.

05. மேலதிக தகவலுக்கு, பணிப்பாளரை **(கொள்முதல்)** தொடர்பு கொள்ளவும் - **தொலைபேசி 011 2 774927.**

06. கேள்வி மனுக்கள் கேள்வி மனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதே முகவரியில் **2024.05.30** ஆம் திகதி **மு.ப.10.15** மணி மற்றும் **2024.06.06** ஆம் திகதி **மு.ப.10.15** மணிக்கு மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கும் மனுதாரரின் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான ஏலங்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

07. **மனுப் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடைக்கு** முகவரியிடப்படல் வேண்டும்.

08. மனுத்தொடர்பான முன்மனுக் கூட்டம் **2024.05.28** ஆம் திகதி **மு.ப.10.00** மணிக்கு **தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தில் இடம்பெறும்.**

09. மேலே உள்ள அனைத்து ஒப்பந்தங்களுக்கான மனு ஆவணத்துடன் PCA 03 படிவம் இணைக்கப்பட வேண்டும்.

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகை குழு,
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொட.
**2024.05.16**

SELACINE





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலின் கீழ் வெள்ளாங்குளம் மன்னார் பாலியாறு நீர்த்திட்டம் மற்றும் மல்லாவி முல்லைத்தீவு, நீர்வழங்கல் திட்டங்களின் சம்பிரதாயபூர்வ ஆரம்ப நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு இத்திட்டத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். மேலும் இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ல்ஸ், பாராளுமன்ற உறுப்பினரும், கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான கே.காதர் மஸ்தான், அமைச்சின் செயலாளர் நபீல், பொது முகாமையாளர் பாரதிதாசன், நீர்வழங்கல் அதிகாரசபையின் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மக்களைச் சந்திக்க திராணியற்றவர்களே பொது வேட்பாளர் தொடர்பில் அங்கலாய்க்கின்றனர்

**(பருத்தித்துறை விசேட நிருபர்)**

ஜனநாயகத்தில் மக்களை தனித்தனியாக சந்திக்க திராணியற்றவர்களே பொது வேட்பாளர் தொடர்பில் அங்கலாய்க்கின்றனர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவசரப்பட வேண்டாம் எனவும் தென்னிலங்கையை சார்ந்த பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவரே ஜனாதிபதியாக வருவார் எனவும் கூறியுள்ளார்.



அது மட்டுமின்றி ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது கருத்துக்கள், நிலைப்பாடுகள் என தமது விஞ்ஞாபனங்களை வெளியிட்ட பின்னரே இதுதொடர்பில் சிந்திக்கலாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான சூழலில் பொது வேட்பாளர் தொடர்பில் ஒரு நிலையான முடிவை அக்கட்சி முன்னெடுக்கவில்லை என்பது புலனாகின்றது.

முன்பதாக சரத் பொன்சேகா, மைத்திரி, சஜித் என எவ்வித நிலைப்பாடும் இல்லாது தத்தமது சுயநலன்களுக்காக ஆதரவளித்தவர்கள் எல்லாம் இப்பொழுது சஜித் பிரேமதாசவின் தூண்டுதலிலே இவ்வாறு பொது வேட்பாளர் தொடர்பில் பேசப்படுவதாக கூறப்படுகின்றது.

எனவே மக்களை ஜனநாயகத்தில் தனித்தனியே சந்திக்க திராணியற்றவர்கள் இவ்வாறான சந்தர்ப்பவாத கூட்டுக்களை உருவாக்குவதும் தென்னிலங்கை அரசியல் சில தலைமைகளுக்காக வாக்குகளை சிதறடிக்கும் நோக்குடன் செயற்படுவதும் தரகு வேலைகளில் ஈடுபடுவதும் வாடிக்கையாகவே உள்ளது.

உண்மையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனது அரசியல் நிலைப்பாட்டை மக்களிடையே வெளிப்படையாக முன்வைத்தே பயணிக்கின்றது. தேர்தலையும் தனியாகவே நின்று எதிர்கொள்கின்றது.

ஆனால் சந்தர்ப்பவாத சரணாகதி கூட்டில் இருப்பவர்களால் அடுத்து வரும் பொதுத் தேர்தலில் மக்களை தனித்தனியே சந்தித்து தமது செல்வாக்குகளை நிருபித்து கட்டுவார்களா? எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

# வடக்கின் உதயம்



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜுலி சங் யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்தார். இதன்போது சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் விவசாய மாணவர்களின் மீள்சுழற்சி, பாதுகாப்பு மற்றும் மரங்களை நடுதல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்விலும் கலந்துகொண்டார். இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படங்கள்: யாழ் விசேட நிருபர்)

## தீக்காயங்களுக்கு இலக்கான குடும்பப் பெண் உயிரிழப்பு

**(சாவகச்சேரி விசேட நிருபர்)**

கொடிகாமம் மந்துவில் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த சில நாட்களுக்கு முன்பாக தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக பெண் தற்கொலைக்கு முயற்சித்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

மந்துவிலைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான 36 வயதுப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னாருக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி நியமனம்

**(தலைமன்னார் விசேட நிருபர்)**

மன்னார் மாவட்டத்தில் முதல் பெண்மணியாக திடீர் மரண விசாரணை அதிகாரியாக திருமதி ஜூடிற் ஷியாமினி தயாளராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி அமைச்சு காரியாலயத்தில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவினால் இவருக்கான நியமனக்கடிதம் வழங்கப்பட்டது.

மன்னார் பெரியகமத்தைச் சேர்ந்த இவர் மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையின் பழைய மாணவியாவார். மன்னாரில் ஆரம்பிக்கப்பட்ட திறந்த பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி மூலம் சமூக விஞ்ஞான பிரிவில் இளமானிப் பட்டம் பெற்ற முதல் பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது.



அத்துடன் கடந்த ஆறுவருடங்களாக நீதி அமைச்சின் கீழ் இயங்கி வரும் மத்தியஸ்த சபை மத்தியஸ்தராகவும் இவர் பணியாற்றி வருகின்றார்.

## கிராம உத்தியோகத்தர் நியமனம்

முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த ரமீம் முஹம்மது ராசித் (நளீமி) கிராம உத்தியோகத்தராக நியமனம் பெற்றுள்ளார்.

2100 புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு பிரதமர் தலைமையில் அலரிமாளிகையில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போதே முல்லைத்தீவு தண்ணீரூற்றைச் சேர்ந்த ரமீம் முஹம்மது ராசித் (நளீமி) கிராம உத்தியோகத்தருக்கான நியமனக் கடிதத்தை பெற்றுக்கொண்டார்.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கி வைத்தார்.



கற்பிட்டி நுரைச்சோலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் முதலாம் தரம் முதல் 10 ஆம் தரம் வரை கல்வி கற்ற இவர், முல்லைத்தீவு தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் சாதாரண தரம் வரை பயின்றார்.


2014 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற இவர், 2015 ஆம் ஆண்டு பேருவளை ஜாஆமியா நளீமிய்யா கலைப் பீடத்திற்கு தெரிவாகி ஏழு வருடங்கள் இஸ்லாமிய ஷரீஆ கல்வியை கற்று 2022 இல் நிறைவு செய்தார்.

மேலும், இவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கலைமானி பட்டப்படிப்பையும் தொடர்கிறார்.

முல்லைத்தீவு தண்ணீரூற்று ஜும்ஆ மஸ்ஜித் முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரான இவர் விளையாட்டு, சமூக சேவைகளில் அதிக ஆர்வத்தோடு ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு

**(வவுனியா விசேட நிருபர்)**



முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா, திருநாவற்குளத்தில் நேற்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

திருநாவற்குளம் பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் பலர் இணைந்து திருநாவற்குளம் பிரதான வீதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கினர்.

2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியை உணவாக உட்கொண்டே உயிர்பிழைத்தனர்.அதை நினைவு கூரும் முகமாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## விடுதியில் வைத்து சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்

### முகாமையாளர் கைது

**(வவுனியா விசேட நிருபர்)**

வவுனியா, தேக்கவத்தை பகுதியிலுள்ள விடுதியொன்றில் 15 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்ட சம்பவத்தில் விடுதி முகாமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா, பண்டாரிக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் 15 வயது சிறுமியொருவரே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

வவுனியா நகரை அண்டிய தேக்கவத்தை பகுதியிலுள்ள விடுதியொன்றுக்கு சிறுமியை அழைத்து சென்று போதை மருந்து கொடுத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியதாக தெரியவருகின்றது.

அதற்கு உடந்தையாக செயற்பட்ட பெண் ஒருவர் உட்பட நால்வர் அண்மையில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் தேக்கவத்தைப் பகுதியிலுள்ள விடுதி முகாமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஏ 9 வீதி ஓமந்தை இராணுவ சோதனை சாவடி அகற்றல்

**(வவுனியா விசேட நிருபர்)**

கொரோனா காலப்பகுதியில் ஏ 9 வீதியில் வவுனியா ஓமந்தை பகுதியில் அமைக்கப்பட்ட இராணுவ சோதனை சாவடி அகற்றப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் கொரோனா பரவல் தீவிரமடைந்ததையடுத்து நாடளாவிய ரீதியில் ஊரடங்குச்சட்டம் மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

அந்தவகையில், வவுனியா மாவட்டத்தின் ஓமந்தை உட்பட பல்வேறு பகுதிகளில் தற்காலிக இராணுவ சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு, பாதுகாப்பு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அவற்றில் பல சோதனை சாவடிகள் அகற்றப்பட்ட நிலையில் ஓமந்தை சோதனை சாவடி மாத்திரம் நான்கு வருடங்களாக அகற்றப்படாமல் நிரந்தர இராணுவ சோதனை சாவடியாக இயங்கியது. இந்நிலையில் குறித்த இராணுவ சோதனைச் சாவடி நேற்றுமுன்தினம் முதல் அகற்றப்பட்டுள்ளது.

## யாழ். வைத்தியசாலையில் குழந்தையை விட்டு சென்ற மாணவி கண்டுபிடிப்பு

### 25 வயது இளைஞன் கைது

**(யாழ். விசேட நிருபர்)**

யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தையை பிரசவித்த பின்னர் அதனை அங்கேயே கைவிட்டு சென்ற 15 வயது பாடசாலை மாணவியை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதுமட்டுமின்றி மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய 25 வயதான இளைஞனையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் 15 வயதான பாடசாலை மாணவியொருவர் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருடன் தாயும் உதவிக்கு நின்றுள்ளார். மாணவிக்கு குழந்தை பிறந்ததும் மறுநாள், தாயும் மாணவியும் குழந்தையை வைத்தியசாலையில் கைவிட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதற்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போதே சிறுமி நெல்லியடி பகுதியை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதன்படி குழந்தையை பிரசவித்த மாணவியையும், அவரது தாயாரையும் கண்டறிந்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில், மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய மல்லாவி பகுதியை சேர்ந்த 25 வயதான இளைஞனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அன்னையர் சிறப்பு நிகழ்வு






அன்னையர் தினத்தைச் சிறப்பிக்கும் வகையில் நேற்று கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் சிறப்பு ஒன்றுகூடலொன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினராக மூத்த எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் கலந்துகொண்டார்.

உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி விமல்ராஜ் உஷாநந்தினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மூத்த எழுத்தாளரும் உளவளத் துணையாளருமாகிய கோகிலா மகேந்திரன் கலந்து கொண்டு 'அன்னையாக ஆசிரியர்' என்ற பொருளில் உரையாற்றினார்.

இந்நிகழ்வில் அன்னையர் தினம் குறித்து ஆசிரிய மாணவர் உரையை றோமன் கத்தோலிக்க பாடநெறியைச் சேர்ந்த கமலினி சுதாகர் ஆற்றினார். அதிதி அறிமுகவுரையை விரிவுரையாளர் வே. சேந்தன் நிகழ்த்தினார்.

கலாசாலையின் றோமன் கத்தோலிக்கம், உடற்கல்வி, விசேடகல்வி, ஆங்கிலம் ஆகிய நெறிகளைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் இணைந்து உருவாக்கிய அன்னையர் தினம் பற்றிய ஆவணப்படமும் இதன்போது திரையிடப்பட்டது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் நிறைவுரையாற்றினார். கலாசாலையின் முகாமைத்துவக் குழுவினரால் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்ட கோகிலா மகேந்திரன் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவிக்கப்பட்டார்.

# புத்தாக்கமான தீர்வுகள் மூலம் குடும்பங்களின் சிறந்த எதிர்காலத்திற்காக வலுவூட்டும் Hemas Consumer Brands

சவாலான பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் 2023/24 நிதியாண்டில் Hemas Consumer Brands (HCB) சிறந்த வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ள அதே நேரத்தில், அதன் உற்பத்திகள் அதன் சமூகப் பொறுப்புகளை தவறாமல் நிறைவேற்றியுள்ளது. 60 வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் வீடு மற்றும் தனிநபர் பராமரிப்புத் துறையில் முன்னணியில் திகழும், புத்தாக்கமான தீர்வுகளை வழங்குவதன் மூலம், குடும்பங்களை சிறந்த நாளைய தினத்தை நோக்கி வலுவூட்டுவதில் கவனம் செலுத்துகின்றது. இதன் காரணமாக, நோக்கத்தை கொண்ட அதன் வர்த்தக நாமங்களை இலங்கையில் நம்பகமான வீட்டுப் பெயர்களாக நிலைநிறுத்த உதவியுள்ளது.

HCB இன் ஒவ்வொரு வர்த்தகநாமமும் அதன் நோக்கம் சார்ந்த திட்டங்கள் மூலம் நாடு முழுவதும் உள்ள அதன் நுகர்வோர் மற்றும் சமூகங்களின் வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்துகிறது மற்றும் அதன் மூலம் நூற்றுக்கணக்கான குடும்பங்களை வலுவூட்டுகிறது என்பதில் அதன் பயணம் அமைகிறது. நாட்டின் நம்பர் 1 குழந்தை பராமரிப்பு வர்த்தகநாமமான பேபி செரமி, குழந்தைகளுக்கான பாதுகாப்பான உலகத்தை உருவாக்குவதற்கான பயணத்தில் ஈடுபட்டுள்ளதோடு, பெற்றோரை இலக்காகக் கொண்டு விழிப்புணர்வுத் திட்டங்கள் மற்றும் உள்ளீர்க்கப்பட்ட பெற்றோருக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான அறிவூட்டல்கள் மூலம் 6,980 பெற்றோர்களை நேரடியாகவும், 20,000 பேரை மறைமுகமாகவும் வெற்றிகரமாகச் சென்றடைந்துள்ளது. குழந்தை தனது வாழ்க்கையில் பயணத்தைத் ஆரம்பிக்கும்போது பாதுகாப்பான தனிநபர் பராமரிப்பு மற்றும் தனிநபர் கழுவும் உற்பத்திகளைப் பெறுவதை உறுதி செய்வதற்காக, நாடு முழுவதும் உள்ள புதிதாக தாய்மை அடைந்தவர்களின், பிறந்த குழந்தைகளுக்காக பேபி செரமியின் 11,313 பரிசுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன. மிகவும் விரும்பப்படும் இந்த வர்த்தக நாமமானது, இலங்கை சமூக மருத்துவர் கல்லூரி மற்றும் இலங்கை சிறுவர் நல மருத்துவக் கல்லூரியுடன் கைகோர்த்து, குழந்தைகளுக்கான பாதுகாப்பான உலகத்தை உருவாக்குவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பை மேலும் முன்னெடுத்துச் செல்வதன் மூலம், 'சிறுவர்களுக்கு வீட்டில் ஏற்படும் விபத்துகளைத் தடுப்பது தொடர்பான, கைநூலை கூட்டாக உருவாக்கி விநியோகித்ததோடு, இலவசமாக பதிவிறக்கம் செய்ய பேபி செரமி இணைய தளத்திலும் வெளியிடப்பட்டது. அது ஏற்கனவே 1,680 பெற்றோர்களை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதன் குழந்தைப் பாதுகாப்பு திட்டத்தின் சிறந்த தாக்கத்தை விரிவுபடுத்தும் வகையில், முன்பிள்ளை பராய பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு (ECCD) அதிகாரிகள் 50 பேர் உள்ளிட்ட 1,000 அதிகாரிகள் பயிற்சி பெற்றனர். அது மாத்திரமன்றி பேபி செரமி Safety Institute CoCreation Centre உடன் இணைந்து, 'Safety Institute Expert Live' எனும் ஒன்லைன் மூலமான பெற்றோர் விழிப்புணர்வுத் திட்டத்தையும் ஆரம்பித்தது.

# சூரிய மின்சக்தியை அனைவருக்கும் வழங்க ஒன்றிணைந்த பீப்பள்ஸ் லீசிங் – ஹேலீஸ் சோலார்

நிலைபேணத்தகு எரிசக்தி தீர்வுகளைப் பொறுத்தவரையில் மிகவும் தைரியமான ஒரு முயற்சியில் காலடியெடுத்து வைத்து, பீப்பள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி (People's Leasing & Finance PLC PLC) மற்றும் ஹேலீஸ் ஃபென்டன்ஸ் லிமிட்டெட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அங்கமான ஹேலீஸ் சோலார் (Hayleys Solar) ஆகியன, மேற்கூரை சூரிய மின்னுற்பத்தியில், வீடுகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலகுவான மற்றும் கட்டுபடியான கடன் திட்டத்தை வழங்குவதற்காக, புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றினூடாக புதுமையான கூட்டிணைவொன்றை உத்தியோகபூர்வமாக ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

பசுமையான எதிர்காலத்தை ஊக்குவித்து, இலங்கை மக்கள் தமது அன்றாட பாவனைக்கும் மற்றும் வணிக நோக்கங்களுக்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உள்வாங்கிக் கொள்வதற்கு இத்திட்டம் அவர்களுக்கு வலுவூட்டும். நாட்டில் வீடுகளிலும், சிறு தொழில் முயற்சிகளிலும் சூரிய மின்வலுவைப் பயன்படுத்துவதில் இலகுவான மற்றும் கட்டுபடியான கடன் வசதிகள் போதுமான அளவில் கிடைக்காமை பாரியதொரு முட்டுக்கட்டையாக காணப்படுகின்றது.

இச்சவாலுக்கு தீர்வுகாணும் வகையில், இத்தகைய வாடிக்கையாளர்களுக்கு எவ்விதமான பிணைகளுமின்றி, மிகவும் கவர்ச்சியான வட்டி வீதத்துடன் சூரிய மின்வலுவைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குவதற்கு தனித்துவமான சூரிய மின்னுற்பத்தி கடன் தீர்வை வடிவமைப்பதில் ஹேலீஸ் சோலார் மற்றும் PLC ஆகியன கைகோர்த்துள்ளன.




சௌகரியம் மற்றும் இலகுவில் இதனைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறையை மேம்படுத்துவதற்காக, விரைவான அனுமதி மற்றும் வழங்கல் செயல்முறையையும் இத்திட்டம் வழங்குகின்றது. தேசிய மின் விநியோகத்துடன் இணைக்கப்படாத, இணைக்கப்பட்ட மற்றும் கலப்பு இணைப்புக்கள், சூரிய மின்வலு நீர் சூடாக்கிகள் மற்றும் சூரிய மின்வலு நீர்ப்பம்புகள் போன்ற ஏனைய சூரிய மின்வலு தீர்வுகளுக்காக, PLC வாடிக்கையாளர்களுக்கு இக்கடன் திட்டம் பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றது.

மூலோபாய முக்கியத்துவம் மிக்க இக்கூட்டாண்மையின் கீழ், PLC இன் பிரத்தியேகமயமாக்கப்பட்ட குத்தகைத் திட்டத்தினூடாக, தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் புத்தாக்கமான கடன் தீர்வுகளை நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு வழங்குவதன் மூலமாக சூரிய மின்வலுவை அவை உள்வாங்கிக் கொள்வதை PLC மற்றும் ஹேலீஸ் சோலார் இடையிலான மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இக்கூட்டாண்மை ஊக்குவிக்கும்.

## தினகரன் வர்த்தக உலா

shumsfahim@gmail.com | சம்ஸ் பாஹிம்

# DFCC Remittances இத்தாலியில் 'புத்தாண்டு உற்சவத்தை' கொண்டாடியுள்ளது




2024 ஏப்ரல் 14 அன்று தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டைக் கொண்டாடும் புத்தாண்டு உற்சவ நிகழ்வொன்றை இத்தாலியில் நடாத்துவதற்காக DFCC Remittances ஆனது Mondial Boney Services உடன் கைகோர்த்துள்ளதுடன், மிகவும் விமரிசையாக இடம்பெற்ற பாரம்பரியமான நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளில் அங்கு வசிக்கும் பெரும் எண்ணிக்கையான இலங்கையர்கள் கலந்து கொண்டனர். இத்தாலியின் நேபிள்ஸ் இலுள்ள இலங்கையின் கௌரவ தூதர் ஏவீவீ கார்மைன் கபாசோ அவர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளதுடன், இத்தாலிய ஒழுங்குமுறை அதிகாரிகள், வணிகர்கள் மற்றும் DFCC Remittances இன் பணப் பரிவர்த்தனை கூட்டாளர்களும் பங்குபற்றினர். DFCC வங்கியின் கடல்கடந்த வங்கிச்சேவை, பணம் அனுப்பும் சேவை மற்றும் வணிக மேம்பாட்டுக்கான சிரேஷ்ட உப தலைவர் அன்டன் ஆறுமுகம் அவர்கள் இந்நிகழ்வின் கௌர அதிதியாக கலந்து சிறப்பித்துள்ளார்.

அன்டன் ஆறுமுகம் அவர்கள் கருத்து வெளியிடுகையில், "நேபிள்ஸ் இல் வசிக்கும் கடும் உழைப்பாளிகளான இலங்கை மக்களுடன் இணைந்து தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டைக் கொண்டாடியமை உண்மையில் ஒரு பெரும் பாக்கியமாகும். எமது வாடிக்கையாளர்கள் பணப் பரிவர்த்தனை கூட்டாளர்கள் மற்றும் இத்தாலிய ஒழுங்குமுறை அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து, தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான மிகச் சிறந்த வாய்ப்பினை இந்நிகழ்வு எமக்கு வழங்கியுள்ளது," என்று குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்கள், இலங்கையில் வசிக்கும் அவர்களுடைய குடும்பங்கள் ஆகியோருக்கு ஒப்பற்ற வசதிக்கு இடமளித்து, நன்மதிப்புடைய பணப் பரிவர்த்தனை நிறுவனங்களைக் கொண்ட உலகளாவில் வளர்ந்து வரும் வலையமைப்பொன்றை DFCC Remittances பேணி வருகின்றது. அந்த வகையில், DFCC வங்கியின் விசாலமான வலையமைப்பு மற்றும் டிஜிட்டல் வங்கிச்சேவைகள் ஊடாக, இலங்கை எங்கிலும் நிதியை தங்குதடையின்றி, விரைவாக, சிக்கனமாக மற்றும் சௌகரியமாக DFCC வங்கியின் வாடிக்கையாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும். வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்கள் மற்றும் இலங்கையிலுள்ள அவர்களுடைய பயனாளிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் விசேடமாக வடிவமைக்கப்பட்ட கடன் வசதிகள் மற்றும் ஏனைய நிதித் தீர்வுகள் மற்றும் சேவைகளையும் அது வழங்கி வருகின்றது.

To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adz Auto Focus




THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!




- Auto Focus



- Vehicle Rent / Wanted



- Photo Classifieds

Sunday Observer adz Magazine Issued with Sunday Observer

Hot Line - 011 2 429 369/ 011 2 429 368
E-mail - adzsuo@gmail.com

The Trusted Market place for Buying & Selling



adz.lk it's what you want

It's Simple & Fast
POST YOUR AD
1. Visit www.adz.lk
2. Log In/ Register
3. Select Category
4. Enter Details
5. Upload Photos
6. Pay
7. Publish



Visit www.adz.lk

WE ACCEPT VISA MasterCard American Express

Contact Us:-
- 011 2 429 369 | - 077 7 270 067
- 077 7 270 845 | - adzsuo@lakehouse.lk

போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி

## பெறுகை அறிவித்தல்

### கட்டிட நிர்மாணம் மற்றும் பழுதுபார்த்தல்

### திருத்தம்

மேற்படி விடயத்துடன் சம்பந்தப்பட்ட 2024.05.15ம் திகதிய தினமின, டெய்லிநியூஸ், தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரமான அறிவித்தலின் அட்டவணையில் குறைந்த பட்ச (CIDA) தகைமை கீழ்க்காணுமாறு உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை தயவுடன் கவனியுங்கள்.

| உருப்படி இலக்கம் | குறைந்தபட்ச CIDA தகைமைகள் |
|---|---|
| 01 | C7 |
| 02 | C7 |
| 03 | C8 |
| 04 | C7 |
| 05 | C7 |

ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே செல்லுபடியாகும்.
மேலதிக விபரங்களுக்கு இல. 045 - 2222261 மூலம் கணக்காளரை அழையுங்கள்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை**
**இரத்தினபுரி**

**2024.05.16**

# இலங்கை வங்கி

### ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)

### ஏலவிலைகூறலை மூடுவதற்கான திகதியை நீடித்தல்

### கேள்விப்பத்திர இல: P/PROC/2024/79

2024 ஏப்ரல் 19 ஆம் திகதியன்று "தினகரன்" பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை வங்கியின் பெருநிறுவன வாடிக்கையாளர்களின் காசு முகாமைத்துவத் தீர்வுகளைப் பேணல், வழங்கல், வடிவமைப்பு, அமுலாக்கம் மற்றும் ஆணையிடல் மற்றும் பராமரித்தல் என்பதற்கான ஏலங்களுக்கான அழைப்பிதழ் பற்றிய விளம்பரத்திற்கு மேலதிகமாக,

இவ் விலைகூறலை மூடும் திகதி **2024.05.31 1000** மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

விலைகூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயம் சொத்துக்கள் மற்றும் சேகரிப்புப் பகுதியில், **2024.05.30** ஆம் திகதி வரை கடமை தினங்களில் **0900** மணி முதல் **1400** மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏலவிலை பிணையானது **2024.09.27** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர்**
சொத்துகளும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி தலைமை அலுவலகம்,
"BOC சதுக்கம்", இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி: 094 112204270, 094 112204260, 094 112544310
மின்னஞ்சல்: procurement@boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## பெறுகை அறிவித்தல்

### அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம

### பிரதான கேட் அருகில் விற்பனைசாலைக்கான ஒப்பந்தக்காரர் ஒருவரை நியமித்துக்கொள்ளல் - 2024 / 2025

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிரதான கேட் அருகில் உள்ள விற்பனை சாலைக்காக 2024 / 2025ம் ஆண்டிற்கு ஒப்பந்தக்காரர் ஒருவரை நியமித்துக் கொள்வதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவத்தை 2024.05.16 முதல் 2024.06.06 வரை வாரத்தின் வேலை நாட்களில் மாத்திரம் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வைத்தியசாலையின் நிறுவனப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.


| தொடர் இல. | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா. |
|---|---|---|
| 01 | பிரதான கேட் அருகில் உள்ள விற்பனைசாலை | 3000.00 |

கேள்விப் படிவம் மூலப்பிரதி உட்பட 02 பிரதிகளுடன் 2024.06.07 மு.ப. 10.00 இற்கு முன்பு பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும். கையோடு கொண்டுவரும் பெறுகைப் படிவங்கள் கணக்காளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் 2024.06.07 மு.ப. 10.00 இற்கு முன்பு உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் 2024.06.07 மு.ப. 10.00 இற்கு திறக்கப்படும். அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். இதுபற்றிய மேலதிக விபரங்களை வைத்தியசாலையின் செயலாளர், அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம. தொ.பே. இல. 011-2840233 மூலம் விசாரிக்கலாம்.

பிரதேச பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம**







**மீட்கப்படாத தங்க நகைகளின் ஏலவிற்பனை**

**இல. 38, நீர்கொழும்பு வீதி, மினுவாங்கொடை** என்ற இடத்தில் அமைந்துள்ள **விக்ரமசிங்ஹ அடகு நிலையத்தில்** 2022.08.30 முதல் 2023.03.31 வரை அடகுவைக்கப்பட்டு, 01 வருடம் பூர்த்தியாகியுள்ள மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2024.06.11 மு.ப. 10.00 முதல் இவ் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**W.A.J.T. விக்ரமசிங்ஹ,**
**முகாமைத்துவ உரிமையாளர்**

**மீட்கப்படாத தங்க நகைகளின் ஏலவிற்பனை**

**இல. 416, நீர்கொழும்பு வீதி, ஹெந்தளை, வத்தளை** என்ற இடத்தில் அமைந்துள்ள **விக்ரமசிங்ஹ அடகு நிலையத்தில்** 2022.08.23 முதல் 2023.03.31 வரை அடகுவைக்கப்பட்டு, 01 வருடம் பூர்த்தியாகியுள்ள மீட்கப்படாத அடகுத் தங்க நகைகள் 2024.06.11 மு.ப. 10.00 முதல் இவ் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**W.A.J.T. விக்ரமசிங்ஹ,**
**முகாமைத்துவ உரிமையாளர்**

Repeat Your ad For Better Offers



320

**வெற்றிடங்கள்**
**ஹோட்டல்கள், பேக்கரிகள்**

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ரெஸ்டூரன்ட் ஒன்றிற்கு சமையலாளர்கள், வெயிட்டர்கள் தேவை. (மாவனல்லைக்கு அருகில் இருப்போர் பொருத்தமானவர்கள்) 0770586859. 032699

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைத்தல்.

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| மஜீட் மாவத்தையின் சுற்றுவட்டச் சுவரின் மேம்படுத்தல் (3+000-4+000) வீதி |
| அம்பேபுஸ்ஸ குருநாகல் திருகோணமலை வீதியின் சுற்றுவட்டச் சுவரின் மேம்படுத்தல் (197+000-197+310)கிமீ (RHS) |
| அம்பேபுஸ்ஸ குருநாகல் திருகோணமலை வீதியில் கட்டமைக்கும் வடிகால் (191+000-192+000) RHS |
| அம்பேபுஸ்ஸ குருநாகல் திருகோணமலை வீதியில் கட்டமைக்கும் வடிகால் (174+000-174+500) RHS |
| அம்பேபுஸ்ஸ குருநாகல் திருகோணமலை வீதியில் கட்டமைக்கும் வடிகால் (170+000-171+000) LHS |
| சைகைப் பலகையை பழுதுபார்த்தல் |
| அம்பேபுஸ்ஸ மட்டக்களப்பு-ரிக்கொண்டமடு- திருகோணமலை வீதியில் கட்டமைக்கும் வடிகால் (121+000-122+000) கிமீ LHS |
| அல்லை கந்தளாய் வீதியில் கட்டமைக்கும் வடிகால் (10+000-10+500) கிமீ LHS |
| பாலைதோப்பூர் சேருவில வீதியில் கட்டமைக்கும் வடிகால் (0+000-0+300) கிமீ |
| மட்டக்களப்பு-ரிக்கொண்டமடு- திருகோணமலை வீதியில் கட்டமைக்கும் வடிகால் (108+000-110+000) கிமீ (LHS) |
| போகஹவெவ-புல்மோட்டை வீதியில் மணல்-தார் கலவை பதித்தல் (12+090-27+670) கிமீ |
| திருகோணமலை-புல்மோட்டை வீதியில் மணல்-தார் கலவை பதித்தல் (13+000-40+000)கிமீ |
| பேர்கர் வீதியில் மணல்-தார் கலவை பதித்தல் (0+000-2+420) கிமீ |
| சேருவில சோமாவதி வீதியில் மணல்-தார் கலவை பதித்தல் (2+000-5+740) கிமீ |
| மட்டக்களப்பு-திருக்கொண்டிமடு-திருகோணமலை வீதியில் 129/1 இலக்க பாலத்தின் மேற்பரப்பின் மீள்நிர்மாணம் மற்றும் வலுவூட்டல் |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.05.16 ஆம் திகதியிலிருந்து 2024.05.30 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையபக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை, திருகோணமலை.**

# பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

### 60/70 தரத்தில் தார் வழங்குதல்

இவ் அதிகார சபையில் கீழ்க்காணும் எஸ்போல்ட் உற்பத்தியகத்தின் தேவைப்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் கேள்விச் சுருக்கத்தில் தரப்பட்டுள்ளவாறு படிவத் தொகுதியை கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்விச் சுருக்கம்**

| எஸ்போல்ட் உற்பத்தியகம் | வழங்கல் அளவு | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) | கேள்விப் பிணையின் பெறுமதி ரூ. | |
|---|---|---|---|---|
| | | | காசாக | வங்கிப் பிணை முறி |
| PRDA/WP/PRO/2024/29<br>01. வகவத்த உற்பத்தியகம் - 60/70 தரத்தில் தார் | 150,000 | 2000.00 + SSCL + 18% வெட் வரி | 115,500.00 | 223,000.00 |
| PRDA/WP/PRO/2024/30<br>01. பன்னல உற்பத்தியகம் - 60/70 தரத்தில் தார் | 150,000 | | 115,500.00 | 223,000.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2024.05.16 முதல் 2024.05.30ம் வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி கேள்விப் படிவக் கட்டணங்களுக்கு உட்பட்டு இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணை முறியை காசாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூ. 50 மி. இற்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் குறித்த 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்..

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.05.31 பி.ப. 2.30 ஆவதுடன் கேள்விகள் திறத்தல் அவ்வேளையிலேயே இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் வழங்குநர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா.),**
**இல. 59, சென். செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ.பே. இல .: 011-2321980**

### விலைமனுக்களுக்கான அழைப்பு – IFB

**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)**

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

### பாதுகாப்பான மிளகாய் செயற்றிட்டத்திற்கு 616 எண்ணிக்கையான தெளிப்பான்கள் (நிறுவல்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் உட்பட), 1848 எண்ணிக்கையான பூச்சிகள் நுழையமுடியாத வலைகள் மற்றும் 36, 344 எண்ணிக்கையான நாற்றுமேடைத் தட்டுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

### (Supply and delivery of 616 Nos. of Sprinklers (Including Installation & Commissioning), 1848 Nos. of Insect proof nets, and 36,344 Nos. of Nursery trays for Safe Chili Project)

**விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்: SAPP/PRO/GDS/2024/13**

இலங்கை அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திலிருந்து (IFAD) சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) செலவுக்காக நிதியுதவியைப் பெற்றுள்ளது மற்றும் கலப்பின சோள விதைகளை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவியின் ஒரு பகுதியை மேற்கூறிய பொருட்களின் வழங்கல் நிதியிடலுக்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

எந்தவொரு IFAD நிதியுதவியின் பயன்பாடும் IFAD இன் ஒப்புதலுக்கு உட்பட்டது, நிதி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் IFAD இன் விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க வேண்டும். IFAD மற்றும் அதன் அதிகாரிகள், முகவர்கள் மற்றும் பணியாளர்கள் SAPP தொடர்பாக எந்தவொரு தரப்பினராலும் கொண்டு வரப்படும் அனைத்து வழக்குகள், நடவடிக்கைகள், உரிமைகோரல்கள், கோரிக்கைகள், இழப்புகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றிலிருந்து பாதிப்பில்லாதவர்களாக இருக்க வேண்டும்.

1. 616 எண்ணிக்கையான தெளிப்பான்கள் (நிறுவல்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் உட்பட), 1848 எண்ணிக்கையான பூச்சிகள் நுழையமுடியாத வலைகள் மற்றும் 36,344 எண்ணிக்கையான நாற்றுமேடைத் தட்டுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் மற்றும் பாதுகாப்பான மிளகாய் செயற்றிட்ட விவசாயிகளுக்கு விநியோகித்தல் என்பன இந்த SAPP பெறுகையில் அடங்குகின்றன. 2024 செப்டெம்பர் மாத நடுப்பகுதிக்கு முன் இந்த விநியோகம் எதிர்பார்க்கப்படுகின்றது.
2. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளதன் பிரகாரம் பொருட்களை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து (''விலைமனுதாரர்கள்'') முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொள்வனவாளர் இப்போது அழைக்கின்றார்.

| லொட் இல. | பொருட்களின் பெயர் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | தெளிப்பான்கள் | 616 | 20,000.00 | 1,400,000.00 |
| 2 | பூச்சிகள் நுழையமுடியாத வலைகள் | 1848 | | 570,000.00 |
| 3 | நாற்றுமேடைத் தட்டுகள் | 36,344 | | 30,000.00 |

இந்த விலைக்கோரல் ஆவணத்தில் உள்ள தேவைப்பாடுகளின் அட்டவணையில் இந்த பொருட்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் பற்றிய மேலதிக விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. பதிலளிக்க விரும்பும் அனைத்து தகுதியான ஏலதாரர்களுக்கும் இந்த விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB) திறக்கப்பட்டுள்ளது. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, தகுதிவாய்ந்த நிறுவனங்கள் பொருட்களையும் தொடர்புடைய சேவைகளையும் வெற்றிகரமாக வழங்குவதற்கான திறனை அதிகரிக்க ஏனைய விலைமனுதாரர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.
4. இந்தப் பெறுகையில் 616 எண்ணிக்கையான தெளிப்பான்கள் (நிறுவல்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் உட்பட), 1848 எண்ணிக்கையான பூச்சிகள் நுழையமுடியாத வலைகள் மற்றும் 36,344 எண்ணிக்கையான நாற்றுமேடைத் தட்டுகளை வழங்குதல் மற்றும் விநியோக அட்டவணையின் பிரகாரம் நகரங்களில் அமைந்துள்ள இடங்களுக்கு பல்வகை லொட்களாக விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
5. www.ifad.org/project எனும் IFAD இணையத்தில் வழங்கப்பட்டுள்ள IFAD பெறுகை வழிகாட்டியின் பிரகாரம், இந்த விலைமனு ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு நடைமுறையின் ஊடாக தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் (NCB) முறையைப் பயன்படுத்தி விலைக்கோரல் நடத்தப்படும். NCB செயன்முறையானது விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் முன் ஒரு குறிப்பு சோதனை உட்பட தகுதிகள் மற்றும் கடந்தகால செயல்திறன் ஆகியவற்றின் மதிப்பாய்வு மற்றும் சரிபார்ப்பை உள்ளடக்கும்.
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகத்தில் 2024-05-27ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
7. ஆர்வமும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்கள் சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்டத்தின் (SAPP) 011-2448031 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெறுகை நிபுணரிடமிருந்து அல்லது procurement@sapp.lk என்ற முகவரியில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களை 2024-05-17ஆம் திகதி முதல் 2024-06-04ஆம் திகதி வரையில் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் மற்றும் 2024-05-17ஆம் திகதி முதல் 2024-06-04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை இலங்கை, ராஜகிரிய, இல. 212/A, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், செயற்றிட்ட பணிப்பாளருக்குச் சமர்ப்பித்து மேற்கூறப்பட்ட பெறுகைக்கான ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். செலுத்தும் முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும். கொடுப்பனவுகளை SAPP நிதிப் பிரிவிற்குச் செலுத்துதல் வேண்டும்.
9. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட ஒரு உறையில் இட்டு 2024-06-05ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பெறுகைப் பிரிவு, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நாள் வரையில் அல்லது வாங்குபவரால் நிர்ணயிக்கப்பட்ட நீடிக்கப்பட்ட நாள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல் முடிந்தவுடன், விலைமனுதாரர்கள் அல்லது கலந்துகொள்ளத் தெரிவுசெய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.

| லொட் இல. | பொருட்களின் பெயர் | விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் உட்பட) |
|---|---|---|
| 1 | தெளிப்பான்கள் | 120 நாட்கள் |
| 2 | பூச்சிகள் நுழையமுடியாத வலைகள் | 120 நாட்கள் |
| 3 | நாற்றுமேடைத் தட்டுகள் | 64 நாட்கள் |

10. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் விலைக்கோரல் இலக்கம் என்பன கடித உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களுடனும் 02ஆம் பந்தியில் (அட்டவணை) குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரிகள்

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம்,**
**இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய**
**கமத்தொழில் அமைச்சு,**
**தொலைபேசி இலக்கம்: + 94 11 2448031**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக சேவை வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) களுத்துறை பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிட்டம்புவ நிர்வாக பொறியியலாளர் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள்

   I. **RDA/KT/EE/SU/2024/04** - களுத்துறை நிரைவேற்று பொறியியலாளர் பிரிவில் களுத்துறை வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல்.

   II. **RDA/KT/EE/SU/2024/05** - களுத்துறை நிரைவேற்று பொறியியலாளர் பிரிவில் பானதுறை வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல்.

   III. **RDA/KT/EE/SU/2024/06** - களுத்துறை நிரைவேற்று பொறியியலாளர் பிரிவில் பண்டாரகம வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல்.

   IV. **RDA/KT/EE/SU/2024/07** - களுத்துறை நிரைவேற்று பொறியியலாளர் பிரிவில் நேபட வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை பெற்றுக்கொள்ளல்.

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

   போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

   வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - களுத்துறை**
**தொ.பே : 034-2229135**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

**எனது இல. :KN/DS/PNY/AQ/WPP/PH-01,02/01-45**

**காணி அமைச்சின் இல. : 4-3/11/2022/RE/276-319**

**1964ம் ஆண்டின் 28ம் இல : காணி எடுத்தற் (திருத்தச்) சட்டம் (அத்தியாயம் 460) 7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை ஒரு பகிரங்க தேவைக்கு அரசாங்கம் எடுக்க உத்தேசித்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2024ம் ஆண்டு சித்திரை மாதம் 26ம் திகதிய 2381/50 இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகை (அதிவிசேசமானது) பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : வடக்கு |
| மாவட்டம் | : கிளிநொச்சி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : பூநகரி |
| கிராம சேவகர் பிரிவு | : மட்டுவில்நாடு மேற்கு (KN/66)<br>பரமன்கிராய் (KN/67)<br>கௌதாரிமுனை (KN/68) |
| வரைபட இல. | : CM920082<br>CM920083<br>CM920084 |

**பிரதேச செயலகம்,**
**பூநகரி**

**த.அகிலன்,**
**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலகம்,**
**பூநகரி**

### கேள்வி திறக்கப்படும் தினத்தை திருத்துதல்

**சுகாதார அமைச்சு**

**பொது வைத்தியசாலை (போதனா), பேராதனை**

2024.04.26 பத்திரிகை அறிவித்தல் மூலம் வைத்தியசாலையில் உள்ள கதொலைபேசி அமைப்பை நாளதுவரைக்கு உற்படுத்தல் சார்பாக கேள்விகோரல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கேள்வி திறப்பதற்கு உத்தேசித்துள்ள திகதியான 2024.05.21 அன்று 2024.05.28 மு.ப. 10.30 வரை நீடிக்கப்பட்டுள்ளதென அறிவித்துக்கொள்கிறேன.

**மருத்துவர். எச்.எம்.ஏ. திலகரத்ன,**
**பணிப்பாளர்,**
**பொது வைத்தியசாலை (போதனா),**
**பேராதனை.**

Repeat Your Ad For Better Offers

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 01. | EOM&M பிரிவின் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் (CE-II) மீரிகமவிலிருந்து குருநாகல் யக்காபிட்டிய வரையும் சுகாதார சுத்திகரிப்பு சேவைகளை வழங்கல் (காவலாளிகளுக்கு மாத்திரம்).<br>கேள்வி இல.: RDA/EOM&M/CLS/CE/2024/16 |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024.05.16 ஆம் திகதியிலிருந்து 2024.06.07 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் இணைய பக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர், EOM&M பிரிவு பெறுகைக் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல் (IFB)

**சிறு உரிமையாளர் விவசாய பங்குடமை நிகழ்ச்சித்திட்டம் (SAPP)**
**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு**
**ஏராளமான உணவு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் செயற்றிட்டத்திற்காக 2603 எண்ணிக்கையுடைய பன்முக பிரஷ் வெட்டும் இயந்திரங்களை வழங்கல், விநியோகம் செய்தல் மற்றும் ஒப்படைத்தல்**
**Ref. No. SAPP/PRO/GDS/2024/09**

இலங்கையானது சிறு உரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்டத்தின் விவசாய அபிவிருத்தி ஆகுசெலவிற்காக சர்வதேச நிதியத்திடமிருந்து (IFAD) நிதியிடலைப் பெற்றுள்ளதுடன் இந்த நிதியிடலின் பாகமொன்றை பன்முக பிரஷ் வெட்டும் இயந்திரங்களின் ஆகுசெலவிற்காக செலவிட உத்தேசித்துள்ளது. எந்தவொரு IFAD நிதியுதவியின் பயன்பாடும் நிதி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் IFAD இன் விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க IFAD இன் ஒப்புதலுக்கு உட்பட்டது. IFAD மற்றும் அதன் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் ஊழியர்கள் SAPP தொடர்பாக எந்தவொரு தரப்பினராலும் கொண்டு வரப்படும்

அனைத்து வழக்குகள், நடவடிக்கைகள், கோரிக்கைகள், கட்டாய கோரிக்கைகள், இழப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் ஆகியவற்றிற்கு பாதிப்பில்லாதவர்களாக இருத்தல் வேண்டும்.

1. SAPP ஆனது 2603 எண்ணிக்கையான பிரஷ் வெட்டும் இயந்திரங்களின் வெட்டல் மற்றும் நிலைபேறான தன்மையிலுள்ள விதை உற்பத்தி மற்றும் வர்த்தக ரீதியிலான தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் பயிர்ச்செய்கை திட்டத்தின் பயிர்ச்செய்கையாளர்களுக்கு அவைகளை விநியோகம் செய்வதை அடக்குகின்றது. பொருட்களின் ஒப்படைத்தலானது செப்டெம்பர் இறுதிக்கு முன்னராக எதிர்பார்க்கப்படுகின்றது.
2. கொள்வனவுகாரரானவர் ('கொள்வனவுக்காரர்' என அழைக்கப்படுபவர்கள்) தகுதியுள்ள அமைப்புகளிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள விபரங்களுக்கேற்றவாறு வழங்குமாறு இப்போது அழைக்கப்படுகின்றனர்.

| பொருளின் பெயர் | தொகுதிகள் | அளவு (எண்ணிக்கை) | விநியோ கத்திற்கான காலப்பகுதி | விநியோகம் செய்யும் அமைவிடங்கள் (மாவட்டங்கள்) | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|
| பன்முக பிரஷ் வெட்டும் இயந்திரங்கள் | தொகுதி 1 | 2603 | 2024 செப்டெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னராக | அனுராதபுரம் | 2,000,000.00 |

இவ்வாறான பொருட்களின் மேலதிக விபரங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் தேவைப்படுத்தல்கள் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

3. இந்த விலைமனுக்கோரலுக்கான அழைப்பிதழில் பதிலிறுக்க ஆர்வமுள்ள தகுதியுள்ள அனைவரும் பங்குபற்றலாம். விலைமனுக்கோரல் ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாக தகுதியுள்ள அமைப்புக்கள் பொருட்கள் மற்றும் தொடர்புள்ள சேவைகளை திருப்திகரமாக விநியோகம் செய்வதற்காக அவர்களின் ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்காக ஏனைய விலைமனுதாரர்களுடன் இணைந்து செயற்படலாம்.
4. பன்முக பிரஷ் வெட்டும் இயந்திரங்களின் பெறுகை மற்றும் அமைவிடங்களுக்கான ஒப்படைத்தல் ஆகியன விநியோக அட்டவணையின் பிரகாரம் நகரங்களில் அமைந்துள்ளவை தனியொரு ஒப்பந்தமாக வழங்கப்படும்.
5. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறையை பாவித்து நடத்தப்படுவதுடன் இந்த விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறும் மதிப்பீட்டு நடைமுறையானது **www.ifad.org/project-procurement** என்ற IFAD இணையதளத்தில் வழங்கப்பட்டவாறும் IFAD பெறுகை கைநூலுக்கு இசைவாகவும் நடத்தப்படும். ஏற்கனவே விபரிக்கப்பட்டவாறான தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) செயற்பாடானது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக குறிப்பிட்ட பரீட்சித்தலையும் மீளபார்வையொன்றும் தகைமைகள் மற்றும் கடந்த கால பணிச்செயற்பாடும் சரிபார்க்கப்படும்.
6. 2024.05.22 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு இராஜகிரிய, நாவல வீதி, 212/ ஏ என்ற இலக்கத்திலுள்ள சிறு உரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்ட அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
7. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை . 011-2448031 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது procurement@sapp.lk என்ற மின்னஞ்சலூடாக சிறு உரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்ட பெறுகை விஷேடத்துனரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை 2024.05.15 ஆம் திகதியிலிருந்து 2024.06.03 ஆம் திகதி வரையும் இராஜகிரிய, நாவல வீதி, 212/ ஏ சிறு உரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் அலுவலகத்தில் இலவசமாக பரீட்சிக்காலம்.
8. 2024.05.17 ஆம் திகதியிலிருந்து 2024.06.04 ஆம் திகதியன்று வரையும் 20,000 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வேலை நாட்களில் இராஜகிரிய, நாவல வீதி 212/ஏ நாவல வீதி, SAPP அலுவலகத்தில் சிறு உரிமையாளர் விவசாய-வர்த்தக பங்குடமை திட்டப் பணிப்பாளரின் அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும். பணக்கொடுப்பனவானது SAPP இன் நிதிப்பிரிவில் செலுத்தப்படல் வேண்டும்.
9. 2024.06.05 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு முத்திரையிடப்பட்டு கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது இராஜகிரிய, நாவல வீதி, 212/ ஏ என்ற இலக்கத்திலுள்ள சிறு உரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்ட அலுவலக பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுவானது கொள்வனவுக்காரரினால் விலைமனுவை சமர்ப்பிப்பதற்காக நிருணயிக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர் அல்லது சமுகமளித்திருக்கும் அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
10. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த மற்றும் IFB இலக்கம் (விலைமனு குறிப்பீட்டு இலக்கம் - SAPP/PRO/GDS/2024/09) ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு உரிமமுள்ளதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள விலைமனுப் பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. இலத்திரனியலினால் உருவாக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்பதை தயவு செய்து கவனிக்கவும்.

    மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**திட்டப் பணிப்பாளர்,**
**சிறு உரிமையாளர் விவசாய-வர்த்தக கூட்டாண்மைகள் திட்டம்,**
**இல. 212/ ஏ, நாவல வீதி, இராஜகிரிய.**
**தொலைபேசி இலக்கம்: + 94 11 2 431 426**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மாவட்டச் செயலகம் கொழும்பு**

### மாவட்டச் செயலகத்திற்கு கணனிகள், ஸ்கேனர்கள் மற்றும் புகைப்படப் பிரதி இயந்திரங்களை வழங்குதல்

1. கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொழும்பு - மாவட்டச் செயலகத்தின் சார்பாக மாவட்ட பெறுகைக் குழு அழைக்கின்றது.

   (அ) ''உருமய நிகழ்ச்சித்திட்டத்திற்கு'' கணனிகள் மற்றும் ஸ்கேனர்களை வழங்குதல் - 2024

   (ஆ) மாவட்டச் செயலகத்திற்கு பல்வகைச் செயற்பாட்டு புகைப்படப் பிரதி இயந்திரங்களை வழங்குதல் - 2024

பின்வரும் அட்டவணையில் தேவைப்பாடுகளின் சுருக்கம் தரப்பட்டுள்ளது.

| பெறுகையின் தலைப்பு மற்றும் ஒப்பந்த இலக்கம் | (அ) ''உருமய நிகழ்ச்சித்திட்டத்திற்கு'' கணனிகள் மற்றும் ஸ்கேனர்களை வழங்குதல் - 2024 (DIST.CMB/ACC12/PRO/03/2024) | | (ஆ) மாவட்டச் செயலகத்திற்கு பல்வகைச் செயற்பாட்டு புகைப்படப் பிரதி இயந்திரங்களை வழங்குதல் - 2024 (DIST.CMB/ACC12/PRO/01/2024) | |
|---|---|---|---|---|
| தேவைப்பாடுகள் | விபரங்கள் | எண்ணிக்கை | விபரங்கள் | எண்ணிக்கை |
| | மேசைக் கணனிகள் - 13 | 13 | பல்வகைச் செயற்பாட்டு புகைப்படப் பிரதி இயந்திரங்கள் | 16 |
| | ஸ்கேனர்கள் | 13 | | |
| விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் | 2024 ஜுன் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் | | 2024 ஜுன் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் | |
| விலைக்கோரல் பிணை முறித் தொகை | ரூபா 80,000.00 | | ரூபா 50,000.00 | |
| விலைமனுக்களின் செல்லுபடிக் காலம் (91 நாட்கள்) | 2024 செப்டெம்பர் 09ஆம் திகதி வரை | | 2024 செப்டெம்பர் 09ஆம் திகதி வரை | |
| விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | 2024 ஒக்டோபர் 08ஆம் திகதி வரை | | 2024 ஒக்டோபர் 08ஆம் திகதி வரை | |
| முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு மற்றும் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டியது | ''உருமய நிகழ்ச்சித்திட்டத்திற்கு'' கணனிகள் மற்றும் ஸ்கேனர்களை வழங்குதல் - 2024 (ஒப்பந்த இலக்கம்: DIST.CMB/ACC12/PRO/03/2024) | | மாவட்டச் செயலகத்திற்கு பல்வகைப் செயற்பாட்டு புகைப்படப் பிரதி இயந்திரங்களை வழங்குதல் - 2024 (ஒப்பந்த இலக்கம்: DIST.CMB/ACC12/PRO/01/2024) | |
| மீளளிக்கப்படாத கட்டணம் | ரூபா 1,000.00 | | ரூபா 1,000.00 | |

2. விலைமனுதாரர்கள் ஏதாவது ஒரு தொகுதிக்கு அல்லது ஏதாவது ஒன்றிணைக்கப்பட்ட தொகுதிகளுக்கு அல்லது சகல தொகுதிகளுக்கும் தங்களின் விருப்பத் தெரிவின் பிரகாரம் விலைக்கோரலாம். ஒவ்வொரு தொகுதியும் தனித்தனியாக மதிப்பிடப்படும். விலைமனுதாரர்கள் ஒரு தொகுதியிலுள்ள சகல உருப்படிகளுக்கும் மற்றும் ஒரு உருப்படியின் மொத்த எண்ணிக்கைக்கும் விலை கோருமாறு வேண்டப்படுகின்றனர். பகுதியளவிலான விலைக்கோரல்கள் பதிலளிக்காதவை எனக் கருதப்பட்டும் மற்றும் நிராகரிக்கப்படும். தேவைப்பாடுகளின் முழுமையான விபரங்கள் மற்றும் விபரக்குறிப்புகள் என்பன விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளன.

3. இலங்கை அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டியினால் நிர்வகிக்கப்படும் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் விலைமனு ஆவணத்தின் தரப்பட்டுள்ள தகுதித் தன்மை மற்றும் தகைமைத் தேவைப்பாடுகளைக் கொண்டுள்ள சகல தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களுக்கும் இது திறக்கப்பட்டுள்ளது.

4. தகுதி வாய்ந்த ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-05, எல்விட்டிகல மாவத்தை, மாவட்டச் செயலகக் கட்டிடத்தொகுதி, 9ஆம் தளம், பெறுகை அதிகாரி, திருமதி நதீகா பீரிஸ் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112-368153 மின்னஞ்சல்: coldisacc255@gmail.com) மற்றும் 2024 ஜுன் 09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மேற்கூறிய முகவரியில் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி மற்றும் 2024 ஜுன் 09ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி சகிதம் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

6. சகல விலைமனுக்களும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்குச் (2024 செப்டெம்பர் 09ஆம் திகதி வரை) செல்லுபடியாகும். விலைமனுக்களை 2024 ஜுன் 09ஆம் திகதி ந.ப. 12.00 மணி அல்லது அதற்கு முன் நிதிப் பிரிவு, 9ஆம் மாடி, மாவட்டச் செயலகக் கட்டிடத்தொகுதி, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-05 எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். (கேள்விப் பெட்டி நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளது)

   பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய முகவரியில் விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் சமுகம்தந்துள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.

7. சகல விலைமனுக்களும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தில் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து கொழும்பு-05, மாவட்டச் செயலகக் கட்டிடத்தொகுதி, மாவட்டச் செயலாளரின் பெயரிலான நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாக விலைக்கோரல் பிணை முறியொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் இது 2024 ஒக்டோபர் 08ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

8. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் மற்றும் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் முன் எந்தவொரு வேளையிலும் எவ்வித காரணமும் காட்டாமல் அல்லது எந்தவொரு விலைமனுதாரருக்கும் ஏற்படும் நட்டத்திற்கு பொறுப்பு கூறுவதற்கான கடப்பாடு அல்லது விலைமனுதாரருக்கு காரணம் காட்டும் பொறுப்பின்றி மாவட்டப் பெறுகைக் குழுவின் தீர்மானம் தொடர்பில் காரணம் காட்டுவதைத் தவிர்க்கும் அதிகாரத்தை மாவட்ட பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

9. மேற்கூறிய முகவரியானது:

**தலைவர்,**
**மாவட்டப் பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்டி, கொழும்பு 05.**
**தொலைபேசி: 0112369134**
**தொலைநகல்: 0112369019**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**
**நலன்புரி நன்மைகள் சபை**
**சமூக பாதுகாப்புத் திட்டம்**

# பொருட்களுக்கான பெறுகை

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)

**பெறுகையின் தலைப்பு** : மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள அஸ்வெசும பிரிவு மற்றும் நலன்புரி நன்மைகள் சபைக்கான கணனிகள் மற்றும் அச்சுப்பொறிகளுக்கான பெறுகை

**கடன் இல.** : 7363-LK

**பெறுகை நிறுவனத்தின் பெயர்** : நலன்புரி நன்மைகள் சபையின் சமூகப் பாதுகாப்புத் திட்டம் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

**செயற்றிட்டத்தின் பெயர்** : சமூகப் பாதுகாப்புத் திட்டம் (SSP)

**செயற்றிட்ட அடையாளம்** : P178973

**கடன் இல.** : 7363-LK

**விலைக்கோரல் இல. LK-WBB-410357-G0-RFB**

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, ஏழை மற்றும் நலிந்தோருக்கு சிறந்த இலக்கு வருமானம் மற்றும் வாழ்வாதார வாய்ப்புக்களை வழங்குவதற்கும் சமூகப் பாதுகாப்பு அமைப்பின் வினைத்திறனை மேம்படுத்துவதற்குமான திட்டத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்க உலக வங்கியிடமிருந்து நிதியுதவியைப் பெற்றுள்ளது என்பதுடன் இந்த நிதியுதவியின் ஒரு பகுதியை மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் சபையின் அஸ்வெசும அலகிற்கு மேசைக் கணணி மடிக் கணணி UPS மற்றும் லேசர் அச்சுப்பொறிகளின் பெறுகைக்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

2. நலன்புரி நன்மைகள் சபையின் ஒருங்கிணைந்த நலன்புரி முகாமை முறைமையை (IWMS) நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மட்டத்தில் இயங்கும் நலன்புரி நன்மைகள் தகவல் பிரிவுக்கு 390 எண்ணிக்கையான மேசைக் கணனிகள், 390 எண்ணிக்கையான இணையங்கள் தடையில்லா மின்சாரம் வழங்கும் அலகுகள் (UPS), 376 எண்ணிக்கையான லேசர் அச்சுப்பொறிகள் மற்றும் 61 மடிக்கணனிகளை வழங்குதல், நிறுவுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பரீட்சிப்பதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் சார்பாக செயற்றிட்டப் பெறுகைக் குழுவின் (PPC) சார்பாக இப்பெறுகைக்கோரலுக்கான அழைப்பு விடப்படுகிறது.

| உருப்படி இல. | பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறித் தொகை ரூபா | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | ஆகக் குறைந்த மூலதன வேலைக் கொள்ளளவு அல்லது கடன் வசதிகள் ரூபா மில். | ஆகக் குறைந்த சராசரி வருடாந்த புரள்விற்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| **லொட் A** | | | | 2024 செப்டெம்பர் 26ஆம் திகதி வரை | | |
| 1 | மேசைக் கணனிகள் | 390 | 1,500,000.00 | | 75 | 375 |
| 2 | UPSs | 390 | | | | |
| **லொட் B** | | | | | | |
| 3 | லேசர் அச்சுப் பொறிகள் (கறுப்பு / வெள்ளை) | 376 | 250,000.00 | | 10 | 50 |
| **லொட் C** | | | | | | |
| 4 | மடிக்கணனி | 61 | 250,000.00 | | 10 | 50 |

3. விலைக்கோரல்கள் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரலின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

4. பல்வகை விருப்பத்தெரிவு / மாற்றுவழி விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (விலைமனுதாரர்கள் கொள்வனவாளரின் விபரக்குறிப்பிற்கு மட்டுமே இணங்குதல் வேண்டும்)

5. விலைமனுதாரர்கள் செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு சகிதம் கடந்த மூன்று வருடங்களுக்குள் குறைந்தபட்சம் 150 எண்ணிக்கையான மடிக்கணனிகள், 150 எண்ணிக்கையான தடையற்ற மின்சாரம் வழங்கும் அலகுகள் (UPS), 150 எண்ணிக்கையான லேசர் அச்சுப்பொறிகள் மற்றும் 25 எண்ணிக்கையான மடிக்கணனிகளை வழங்கிய அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மாற்றுவழியாக விலைமனுதாரர்கள் கடந்த மூன்று வருடங்களில் பின்வருவனவற்றை வழங்கியமைக்கான சான்றுகளை முன்வைக்கலாம்.

   (அ) ஒரு ஒற்றை ஒப்பந்தமாக மேசைக் கணனிகள் 50 அலகு

   (ஆ) ஒரு ஒற்றை ஒப்பந்தமாக தடையற்ற மின்சாரம் வழங்கும் அலகுகள் 50 அலகு

   (இ) ஒரு ஒற்றை ஒப்பந்தமாக லேசர் அச்சுப்பொறிகள் 50 அலகு

   (ஈ) ஒரு ஒற்றை ஒப்பந்தமாக மடிக்கணனிகள் 25 அலகு

   இந்த வழங்கல்கள் ஒரே வர்த்தக நாமத்தில் இருத்தல் வேண்டும். மேலதிகமாக விலைமனுதாரர்கள் நிறுவனத்தின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தொடர்புகொள்ளும் நபர் என்பவை உட்பட வாடிக்கையாளரின் குறிப்புக்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். ஆகக் குறைந்த சராசரி வருடாந்த புரள்வு பெறுமதி மற்றும் ஆகக் குறைந்த மூலதன வேலைகள் அல்லது கடன் வசதித் தேவைப்பாடுகள் மேற்கூறிய அட்டவணையில் தரப்பட்டுள்ளன. ஏனைய மேலதிக தகைமைகள் மற்றும் அனுபவம் என்பன விலைக்கோரல் ஆவணத்தின் உள்ளடக்கப்பட்டுள்ளன.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் பெறுகை நிபுணரிடமிருந்து 0773614120 எனும் தொலைபேசியின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024 ஜூன் 07ஆம் திகதி வரையான அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை உள்ளூர் நேரம்) கொழும்பு 07, இல. 191, தர்மபால மாவத்தை, ஜே.ஆர். ஜயவர்தன நிலையம், சமூகப் பாதுகாப்புத் திட்டத்தில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆவணத்திற்கான மீளளிக்கப்படாத 20,000.00 ரூபா (இருபதாயிரம் ரூபா) கட்டணத்தை செலுத்தியதன் பின் 2024 மே 16ஆம் திகதி முதல் 2024 ஜூன் 07ஆம் திகதி வரையில் வேலை நேரங்களில் (மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி) சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் செயற்றிட்டப் பணிப்பாளருக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை: சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் காசாளருக்கு இருபதாயிரம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

8. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 மே 07ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கொழும்பு 07, இல. 191, தர்மபால மாவத்தை, ஜே.ஆர். ஜயவர்தன நிலையம், 4ஆம் மாடியில் இடம்பெறும்.

9. விலைமனுக்களை 2024 ஜூன் 06ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2024 ஜூன் 31ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு பின்வரும் முகவரியில் விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடன் திறக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களிலுள்ள அஸ்வெசும பிரிவு மற்றும் நலன்புரி நன்மைகள் சபைக்கான கணனிகள் மற்றும் அச்சுப்பொறிகளுக்கான பெறுகை" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

10. சகல விலைமனுக்களுடன் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி மற்றும் செல்லுபடிக் காலம் என்பன மேற்கூறிய அட்டவணையில் தரப்பட்டுள்ள என்பதுடன் இது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பெயருக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்பட்டிராத எந்தவொரு விலைமனுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

11. மேற்கூறிய விடயம் முகவரியானது: தலைவர், செயற்றிட்டப் பெறுகைக் குழு, சமூகப் பாதுகாப்புத் திட்டம், ஜே.ஆர். ஜயவர்தன நிலையம், இல. 191, தர்மபால மாவத்தை, கொழும்பு-07.

**கருத்திட்ட பணிப்பளார்,**
**சமூகப் பாதுகாப்புத் திட்டம்,**
**ஜே.ஆர். ஜயவர்தன நிலையம்,**
**இல. 191, தர்மபால மாவத்தை,**
**கொழும்பு 07,**
**இலங்கை.**

---

## மக்கள் வங்கி
## கொழும்பு மேற்கு பிராந்தியம்

## மீட்கப்படாத அடகு நகைகளை ஏலத்தில் விற்றல்

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் என்பவற்றில் 2023.02.28ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 2024.05.31ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத, தங்க நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடத்தப்படும் திகதி 2024.06.01 மற்றும் 2024.06.02**

| ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஹோமாகம 049 | தெஹிவளை 019 | பிலியந்தல 103 |
|---|---|---|---|
| கிளை | ஹோமாகம, அவிசாவளை, ஹங்வெல்ல | தெஹிவளை, தெஹிவளை காலி வீதி, கல்கிசை, இரத்மலான | மொறட்டுவ, மொறட்டுமுல்ல, கட்டுபெத்த, கெஸ்பேவ, பொரலஸ்கமுவ பிலியந்தல, பிலியந்தல நகரம் |
| சேவை நிலையம் | ஹோமாகம நகரம், பாதுக்க, மீகொட, கொடகம, இராணுவ ரெ.த. பனாகொட, கொஸ்கம, தல்துவ, ஹங்வெல்ல நகரம், கஹஹேன. | அத்திடிய, நெதிமால, களுபோவில, இரத்மலான பொருளாதார மையம். | இராவதாவத்த, கட்டுகுறுந்த, புவக் அரம்ப, சொய்சாபுர, கஹதுடுவ, பிலியந்தல நகரம். |

மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீண்டும் அறிவித்தல் வழங்காமல் வங்கியின் தற்றுணிபின் படி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், இலக்கம் 71, மொறட்டுவ வீதி, பிலியந்தல.

தொலைபேசி இலக்கம் : 0112180408, 0112180432, 0112180478

PEOPLE'S BANK
Pride of the Nation

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | சேவையின் பெயர் | விலைமனுதாரரின் தகுதித் தன்மை | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|
| 1 | மாநகர வட்டாரம் -1இற்கு திண்மக் கழிவு முகாமைத்துவ சேவைகளை வழங்குதல் ME/SWM/55/2022 | தேவையான தகுதி, நிரூபிக்கப்பட்ட அனுபவம், திறன் மற்றும் இந்த வகையான சேவைகளை வழங்குவதற்கான திறன் ஆகியவற்றைக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள் | 20,000.00 + வெட் | 5,600,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | பொறியியல் பணிப்பாளர் (திண்மக் கழிவு முகாமைத்துவம்) தொலைபேசி: 0777314323 வட்டாரப் பணிப்பாளர் -1 (திண்மக் கழிவு முகாமைத்துவம்) தொலைபேசி: 0773353990 |

**விலைமனு ஆவணங்களை (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

   அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

   ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

   - சகல கொழும்பு மாநகர சபை வட்டார அலுவலகங்கள்
   - வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,

     மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை **dirproj@ccolombo.mc.gov.lk** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

   1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
   2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் 2024-06-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2024.06.05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது / இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 220 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2025.01.12ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2024.12.13ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. விலைமனுப் பிணை முறியானது ஒன்றில் ரொக்கப் பணமாக அல்லது கொழும்பு மாநகர சபை ஏற்றுக்கொள்ளக்கூடிய வங்கியொன்றின் உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். முன்னைய உரிமைக்கோரல்களைத் திருப்பிச் செலுத்தாதவர்களால் வழங்கப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஈ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-06-06ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

உ. 2024-06-06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

ஊ. விலைக்கோரல் அழைப்பிற்கான விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைக்கோரலுக்கான விலைமனுதாரர்கள் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்துகொண்டதன் பின் PCA3 சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

எ. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-05-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு போக்குவரத்து வடிவமைப்பு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவில் இடம்பெறும்.

**ஏனைய நிபந்தனைகள்:**

(அ) இந்த நோக்கத்திற்காக உள்ள படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

(ஆ) கேள்விப் படிவக் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

(இ) மாநகர பொறியியல் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவில் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

(ஈ) விலைமனு பிணை முறியானது நிலையான வடிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (நிலையான படிவத்தை விலைமனு ஆவணங்களுடன் பெற்றுக்கொள்ளலாம்) மற்றும் கொழும்பு மாநகர சபை, மாநகர ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) விலைமனுப் பிணை முறியானது ஒன்றில் ரொக்கப் பணமாக அல்லது கொழும்பு மாநகர சபை செயலாளருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வங்கியொன்றின் உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். முன்னைய உரிமைக்கோரல்களைத் திருப்பிச் செலுத்தாதவர்களால் வழங்கப்படும் பிணை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) தேவையான விலைமனுப் பிணை முறி இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

(எ) விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் இறுதி நேரத்தின் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

(ஏ) விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

(ஐ) எக்காரணத்தையும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் மற்றும் எந்தவொரு குறைவான விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# விலைமனு கோரல்

## தள வைத்தியசாலை கந்தளாய்

கந்தளாய் தள வைத்தியசாலையின் கீழ்தரப்பட்ட நிர்மாணப்பணிகளுக்கான தகுதியுடைய ஒப்பந்தக்காரர்களின் (கொந்தராத்துக்காரர்களின்) முத்திரை பதிக்கப்பட்ட விலைமனுக்களை கோருவதற்கு வைத்தியசாலையின் பெறுகை குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் நிர்மாண பணிகளுக்கான முழுமையான ஒப்பந்தப்பத்திரம் (விலைமனுக்கள்) 2 பிரதிகளுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இலக்கம் | பணியின் பெயர் | கேள்விக்காரர்களின் தகுதி | மீள்வழங்கப்படாத அனுமதிப்பத்திரக் கட்டணம் | "லங்சு" பிணைக்காரரின் பெறுமதி | மதிப்பிடப்பட்ட மூலச்செலவு மில்லியனில் |
|---|---|---|---|---|---|
| 2024 - 01 | Extension of Ward - 06 (Phase -III) | C-6, C-7 & C-8 | 2000.00 | 88,000.00 | 8.75 |

1. இதற்காக காரியாலயத்தினால் வெளியிடப்பட்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விப்பத்திரம் முன் வைக்கப்படல் வேண்டும்.
2. ஒப்பந்த (விலைமனுக்கள்) பத்திரம் மீள்வழங்கப்படாத அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்தி வார நாட்களில் 2024.05.16ம் திகதியிலிருந்து மு.ப 9.00 இல் இருந்து பி.ப 2.30 வரை வைத்தியசாலை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
3. 2024.05.29ம் திகதி பி.ப 2.00 க்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதோடு அதற்கு முதல் பெறும் வகையில் விலைமனுக்கள் " தலைவர், மீள்நிர்மானபணிக்குழு, தளவைத்தியசாலை, கந்தளாய்" என்ற விலாசத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பமுடியும். இல்லையெனில் கந்தளாய் தள வைத்தியசாலையின் காரியாலயத்திற்கு கொண்டு வந்து தரமுடியும். குறித்த நேரத்திற்கு பின் கிடைக்கும் (டெண்டர்) ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒப்பந்த பத்திரம் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தக்காரர் or அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.
4. கேள்விமனுக்களைக் கொண்ட கடித உறையின் மேல் இடது மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் குறித்த பணி தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
5. நிர்மாணப்பணி சம்பந்தமான கலந்துரையாடல் (Pre-bid meeting) 2024.05.27ம் திகதி 2.00 மணிக்கு இடம்பெறும்.

**எந்தவொரு கேள்விமனுவையும் ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஏற்றுக்கொள்ளாதிருக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக் குழுவிற்கு உண்டு.**

மேலதிக விபரம்:- 026-2234261, 0752526072

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தள வைத்தியசாலை,**
**கந்தளாய்**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பெல்வத்தை சீனி தொழிற்சாலைக்கு 02 New Mill Rollers Delivery Rollers Complete with New Shaft வழங்குவதற்கான தேசிய போட்டிமுறையிலான விலைமனுக்கோரல் (PR - 12952)

பெல்வத்தை சீனி தொழிற்சாலைக்கு **02 New Mill Rollers - Delivery Rollers Complete with New Shaft** வழங்குவதற்காக ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. கீழ்க் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பணம் அனுப்பும் வழி மூலம் **US$ 26 அல்லது LKR 8,000.00** மீளளிக்கப்படாத கட்டணத்தை பணமாக செலுத்தி 2024.06.26 ஆம் திகதி வரை வேலை நாட்களில் நேரப்படி 9.00 **மணி முதல்** 15.00 மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும். விலைமனு ஆவணங்களை லங்கா சீனி இணையத்தளத்தில் **(www.lankasugar.lk)** அல்லது முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் இணையத்தளத்தில் **(www.mip.gov.lk)** அல்லது (வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு **www.mfa.gov.lk)** தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். மேலும் விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.

| விபரம் | LKR வங்கி கணக்கு |
|---|---|
| வங்கியின் பெயர் | இலங்கை வங்கி |
| கிளை | மிலாகிரிய |
| கணக்கின் பெயர் | வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் |
| கணக்கு இலக்கம் | 73927950 |
| Swift Code | BCEYLKLX |

2. **தேவையான உருப்படிகள்:**

   **02 New Mill Rollers - Delivery Rollers Complete with New Shaft**

3. விலைமனுக்களை 2024.06.27 ஆம் திகதி 14.00 மணிக்கு **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04, இலங்கை** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பதிவுசெய்யப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பெல்வத்தை சீனி தொழிற்சாலைக்கு 02 New Mill Rollers - Delivery Rollers Complete with New Shaft வழங்குவதற்காக கேள்விமனு"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
4. அனைத்து விலைமனுக்களும் மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையின்றி பணமாக்கக்கூடிய **மனுப் பாதுகாப்பு தொகையுடன் US$1,475.00 அல்லது LKR 450,000.00** இணைத்திருத்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : **+94 011 2 584 184** கைத்தொலைபேசி : **+ 94 77 010 3359,** தொலைநகல் : **+94 11 2500674,** மின்னஞ்சல்**: sapumal@lscl.lk).**

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04,
இலங்கை.

SELACINE

Trusted Marketplace of Classified Advertisers

Sunday Observer adz it's what you want Classified

Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted

For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-

077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

---

# பெறுகை அறிவித்தல்

சுகாதார அமைச்சு

## ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனம் மாளிகாவத்தை, கொழும்பு –10.

**Design, Supply, Installation and Commissioning of VRF Type Air Conditioning System**

**Nephrology Dialysis & Transplantation**

மாளிகாவத்தை, ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக இதில் தகைமை வாய்ந்த இலங்கையில் விற்பனை செய்வதற்கான வியாபாரப் பதிவைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்து 2024-05-31ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| தொடர் இல. | உருப்படிகள் | அளவு | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|
| 01 | VRF Type Air Conditioning System | 03 | ரூ. 2,500.00 |

01. விலைமனு ஆவணங்களை 2024-05-17ஆம் திகதி முதல் 2024-05-31ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் இதற்காக பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

    (அ) பெறுகைக் குழுவின் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்தல்.

    (ஆ) ஒவ்வொரு விலைமனுவிற்கும் 2500.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை குறித்த ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனத்தின் சிறாப்பர் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

    (இ) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட புகைப்படப் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல்.

02. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (Pre-Bid Meeting) 2024-05-22ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இந்த நிறுவனத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

03. விலைமனு ஆவணங்களை இந்த அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என வெவ்வேறாக 2024-05-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது இந்த நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைகள் உள்ளிடும் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

05. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து அதாவது 2024-05-31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஊடுபகுப்பு மற்றும் சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான தேசிய நிறுவனம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**
**தொ.பே. 011-2422335 / 011-2422336 பெக்ஸ் : 011-2422334**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

## முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பெல்வத்தை சீனி தொழிற்சாலைக்கு Side/Top Roller Bearing வழங்குவதற்கான தேசிய போட்டிமுறையிலான விலைமனுக்கோரல் (PR - 12532)

புத்தலயில் உள்ள பெல்வத்தை சீனி தொழிற்சாலைக்கு **Side/Top Roller Bearing** வழங்குவதற்காக ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களிடமிருந்து வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. கீழ்க் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்கிற்கு நேரடியாக பணம் அனுப்பும் வழி மூலம் **US$ 26 அல்லது LKR 8,000.00** மீளளிக்கப்படாத கட்டணத்தை பணமாக செலுத்தி 2024.06.26 ஆம் திகதி வரை வேலை நாட்களில் நேரப்படி 9.00 **மணி முதல்** 15.00 மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுததரினால் கொள்வனவு செய்ய முடியும். விலைமனு ஆவணங்களை லங்கா சீனி இணையத்தளத்தில் **(www.lankasugar.lk)** அல்லது முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் இணையத்தளத்தில் **(www.mip.gov.lk)** அல்லது (வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு **www.mfa.gov.lk)** தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். மேலும் விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.

| விபரம் | LKR வங்கி கணக்கு |
|---|---|
| வங்கியின் பெயர் | இலங்கை வங்கி |
| கிளை | மிலாகிரிய |
| கணக்கின் பெயர் | வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் |
| கணக்கு இலக்கம் | 73927950 |
| Swift Code | BCEYLKLX |

2. **தேவையான உருப்படிகள்:**

   **Side Roller Bearing (DN MH 423) - 06** (ஆறு)
   **Top Roller Bearing (DN– 170** மற்றும் **171) (Top Half & Bottom) Completed Bearing - 02**

3. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.
4. விலைமனுக்களை 2024.06.27 ஆம் திகதி 14.00 மணிக்கு **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04, இலங்கை** என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பதிவுசெய்யப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பெல்வத்தை சீனி தொழிற்சாலைக்கு Side/Top Roller Bearing வழங்குவதற்காக கேள்விமனு"** எனத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
5. அனைத்து விலைமனுக்களும் மீளப்பெற முடியாத மற்றும் நிபந்தனையின்றி பணமாக்கக்கூடிய **மனுப் பாதுகாப்பு தொகையுடன் US$1,230.00 அல்லது LKR 375,000.00** இணைத்திருத்தல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி : **+94 011 2 584 184** கைத்தொலைபேசி : **+ 94 77 010 3359,** தொலைநகல் : **+94 11 2500674,** மின்னஞ்சல்**: sapumal@lscl.lk).**

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,
இல-27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04,
இலங்கை.

SELACINE

# எல்.பி.எல்.: கோல் மார்வல்ஸில் முன்னணி வீரர்கள் ஒப்பந்தம்





இந்த ஆண்டு நடைபெறவுள்ள லங்கா பிரீமியர் லீக் தொடரில் பங்கேற்கும் கோல் மார்வல்ஸ் அணி உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வீரர்களை ஒப்பந்தம் செய்துள்ளது.

இதில் இலங்கை வீரர்களான பானுக்க ராஜபக்ஷ, லசித் குரூஸ்புள்ளே, மஹீஷ் தீக்ஷன மற்றும் நிரோஷன் திக்வெல்ல ஆகிய வீரர்கள் கோல் அணியில் இடம்பெற்றுள்ளனர். வெளிநாட்டு வீரர்களில் இங்கிலாந்து அணியின் ஆரம்ப வரிசை அதிரடி துடுப்பாட்ட வீரரான அலெக்ஸ் ஹேல்ஸ், நியூசிலாந்து விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் டிம் செய்பேர்ட் அந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை கோல் மார்வல்ஸ் அணி தங்களுடைய பயிற்றுவிப்பு குழாத்தையும் அறிவித்துள்ளது. அதன்படி இலங்கை, அயர்லாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகளின் முன்னாள் தலைமை பயிற்சியாளரான கிரஹம் போர்ட் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய 2024 எல்.பி.எல். தொடரில் கோல் மார்வல்ஸ் அணியில் ஆலோசகராக செயற்படவுள்ளார். லங்கா பிரீமியர் லீக் தொடரின் வீரர் ஏலம் எதிர்வரும் மே 21 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதோடு இந்தத் தொடர் எதிர்வரும் ஜூலை 01 தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## தேசிய பரா மெய்வல்லுனர் போட்டி: காலாட்படை, வெல்லஸ்ஸ சம்பியன்



டயலொக் அனுசரணையில் நடைபெற்ற தேசிய பரா மெய்வல்லுனர் வெற்றிக் கிண்ணத்தில் இலங்கை இராணுவத்தின் இலகு காலாட்படை விளையாட்டுக் கழகம் சிரேஷ்ட ஆடவர் பிரிவில் வெற்றியீட்டியதுடன் மொனராகலை வெல்லஸ்ஸ விளையாட்டுக் கழகம் சிரேஷ்ட மகளிர் பிரிவில் வெற்றிவாகை சூடியது.

வெற்றியீட்டிய அணித்தலைவர்கள் வெற்றிக்கிண்ணத்தை நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட Dialog Television இன் சிரேஷ்ட பொது முகாமையாளர்/ வர்த்தகத் தலைவர் புபுது அளுத்கெதரவிடமிருந்து பெற்றுக் கொண்டனர். இதில் இலங்கை தேசிய பராலிம்பிக் குழுவின் தலைவர் லெப்டினன்ட் கேணல் தீபால் ஹேரத்தும் கலந்து கொண்டார்.

தேசிய பரா மெய்வல்லுனர் போட்டியின் பிரதான போட்டி நிகழ்ச்சிகள் கடந்த மே 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் இடம்பெற்றன.




## சாஹிரா ரக்பி அணி வெற்றி

ருஸைக் பாரூக்



கொழும்பு சாஹிரா கல்லூரி பழைய மாணவர் ரக்பி சங்கம் ஏற்பாடு செய்த சொப்ரா கிண்ண ரக்பி போட்டியில் கல்லூரி ரக்பி அணி வெற்றியீட்டியது.

கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பழைய மாணவர் ரக்பி அணியுடன் கல்லூரி ரக்பி அணி மோதியது.

இதில் கல்லூரி அணியின் மொஹமட் பஹத் தனது சிறப்பான ஆட்டத்திற்காக ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். பரிசளிப்பு விழாவின்போது இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய முன்னாள் சாஹிரா கல்லூரி ரக்பி வீரர்கள் பாராட்டப்பட்டனர்.

# லங்கா கால்பந்து இறுதியில் கண்டி–காலி அணிகள்

பிரின்ஸ் குணசேகர



ஸ்ரீலங்கா ஸ்போட்ஸ் குருப் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள லங்கா கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு கண்டி அணியுடன் ஆடுவதற்கு காலி அணி தகுதி பெற்றுள்ளது. இந்தத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி சிட்டி லீக் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டுகளில் கழகங்களுக்கு இடையிலான கால்பந்து தொடர்களில் அடுத்தடுத்து சம்பியன் கிண்ணங்களை வென்ற கொழும்பு கால்பந்துக் கழகம் இந்தத் தொடரின் அரையிறுதியுடன் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு அணியில் மூன்று நைஜீரிய வீரர்கள் மற்றும் பல தேசிய அணி வீரர்களும் இடம்பெற்றிருந்தனர்.

பெத்தகான கால்பந்து வளாகத்தில் கொழும்பை எதிர்கொண்ட காலி அணிக்கு 43 வயது ஈ.பி. சன்ன அபாரமாக செயற்பட்டு அந்த அணியின் வெற்றியை உறுதி செய்தார். இதன் போது காலி அணி சார்பில் டபிள்யு. எம். சமீர மற்றும் வி. யோகேஷ் கோல் புகுத்தினர்.

முன்னதான யாழ்ப்பாண அணியுடன் இடம்பெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் கண்டி அணி 5–0 என இலகு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

## கோல்ட் ஸ்டார் அணி வெற்றி

புத்தளம் தினகரன் நிருபர்



கற்பிட்டி அம்மாதோட்டம் நிவ் சிக்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் சம்பியன் கிண்ணத்தை சம்மாட்டிவாடி கோல்ட் ஸ்டார் கழகம் பெற்றுகொண்டது.

16 அணிகள் கலந்து கொண்ட இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் அம்மாதோட்டம் நிவ் சிக்ஸ் அணியை கோல்ட் ஸ்டார் 5–3 என வீழ்த்தியது.

## சர்வதேச செய்திகள்



# இஸ்ரேல்–ஹமாஸ் போராளிகள் இடையே வடக்கு, தெற்கு காசாவில் உக்கிர மோதல்

### ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்

இஸ்ரேலின் தரைவழி படை நடவடிக்கை பற்றிய அச்சத்துக்கு மத்தியில் தெற்கு காசா நகரான ரபாவில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வரும் நிலையில் பலஸ்தீனர்கள் நேற்று 1948 இன் 'நக்பா' அல்லது 'பேரழிவு' தினத்தை அனுஷ்டித்தனர்.

இஸ்ரேல் உருவாக்கப்பட்ட போது சுமார் 760,000 பலஸ்தீனர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்ட நிகழ்வை நினைகூறும் வகையிலேயே நக்பா தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வாறு வெளியேற்றப்பட்ட பெரும்பாலான மக்கள் காசா மற்றும் மேற்குக் கரையில் அடைக்கலம் பெற்றனர்.

இந்நிலையில் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் ஹமாஸ் போராளிகள் இடையே காசாவின் பல இடங்களிலும் உக்கிரம் மோதல் நீடித்து ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்டு வரும் சூழலிலேயே நக்பா தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கடந்த மே 6ஆம் திகதி தொடக்கம் ரபாவில் இருந்து சுமார் 450,000 பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்டிருப்பதோடு வடக்கு காசாவில் இருந்து சுமார் 100,000 பேர் வெளியேறி இருப்பதாக ஐ.நா. நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதன்படி 2.4 மில்லியன் காசா மக்கள் தொகையில் சுமார் கால் பங்கினர் ஒரு வாரத்துக்குள் மீண்டும் ஒருமுறை வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஐ.நா. தலைவர் அன்டோனியோ குட்டரஸ், முற்றுகை பகுதியில் உள்ள மக்களுக்கு மேலும் உதவிகள் செல்லும் வகையில் மனிதாபிமான போர் நிறுத்தம் ஒன்றுக்கு மீண்டும் ஒருமுறை வலியுறுத்தியுள்ளார்.

'காசாவில் உடனடி மனிதாபிமான போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்ற எனது வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்துகிறேன். ரபா கடவை உடனடியாக மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்றும், காசா முழுவதும் மனிதாபிமான உதவிகள் தடையின்றி செல்ல வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்' என்று அவர் நேற்று முன்தினம் (14) எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

போர் மற்றும் முற்றுகை காரணமாக காசாவில் பாரிய மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டிருப்பதோடு



உதவிகள் செல்வதில் இருக்கும் கட்டுப்பாடு வடக்கு காசாவில் பஞ்சத்தை ஏற்படுத்தி இருப்பதாக ஐ.நா தொடர்ந்து கூறி வருகிறது.

இஸ்ரேலிய துருப்புகள் கிழக்கு ரபாவை நோக்கி முன்னேறியது தொடக்கம் உதவிகள் வரும் எகிப்துடனான காசா எல்லை மூடப்பட்டிருப்பதோடு மற்றொரு எல்லைக் கடவையான கெரெம் ஷலோமும் போதிய பாதுகாப்பு இன்றி ஏற்பாட்டியல் ரீதியில் அணுகுவதற்கு சாத்தியமான சூழல் இல்லாதிருப்பதாக கடந்த திங்களன்று வெளியான ஐ.நா. அறிக்கை ஒன்று குறிப்பிட்டுள்ளது. காசா மக்கள் கடந்த மே 9 தொடக்கம் எந்த உதவியையும் பெறவில்லை என்று போர் நிறுத்த பேச்சுவார்த்தைகளில் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டிருக்கும் கட்டார் தெரிவித்துள்ளது.

#### உக்கிர மோதல்

இந்நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ், இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் சிறு பலஸ்தீன போராட்டக் குழுக்கள் இடையே துப்பாக்கிச் சண்டை நேற்று உக்கிரமைந்திருந்தது. வடக்கு மற்றும் தெற்கு காசாவிலேயே மோதல் தீவிரம் அடைந்துள்ளது.

வடக்கு காசாவில் போராளிகள் பலம் பெற்றிருக்கு ஜபலியா நகரின் சனநெரிசல் மிக்க சுற்றுப்புறங்கள் மற்றும் குறுகிய சந்துகளை இஸ்ரேலிய டாங்கிகள் அடைந்திருப்பதோடு அங்கு கடும் மோதல் வெடித்திருப்பதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இஸ்ரேலிய இராணுவம் அங்குள்ள வீடுகளை தகர்த்து வருவதாக அங்கிருக்கும் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

1948இல் இஸ்ரேலின் உருவாக்கத்தை அடுத்து அமைக்கப்பட்ட எட்டு அகதி முகாம்களில் மிகப் பெரியதான கிழக்கு ஜபலியாவில் இடம்பெற்ற கடும் மோதலின் போது இஸ்ரேலிய காலாட்படை வீரர்களை கொன்றதாக இஸ்லாமிய ஜிஹாத் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

'ஆக்கிரமிப்பாளர்கள் முகாமை அழிக்க முயன்றனர். குடியிருப்பாளர்கள் இருக்கும்போதே அவர்கள் வீடுகள் மீது குண்டுகளை வீசுகின்றனர். பல குடும்பங்களும் தமது வீடுகளுக்குள்ளேயே சிக்கி உள்ளனர்' என்று அந்த முகாமின் குடியிருப்பாளர் ஒருவரான அபூ ஜெஹால் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இதில் போராளிகள் கடுமையாக சண்டையிட்டு வருவதாகவும் அபூ ஜெஹால் தெரிவித்துள்ளார்.

'எமது போராளிகள் வேதனை மிக்க பாடத்தை கற்றுக்கொடுத்து வருகிறார்கள். நாம் வெடிப்புச் சத்தங்களை கேட்கிறோம். அவர்களிடம் விமானங்கள் மற்றும் டாங்கிகள் இருப்பது எமக்குத் தெரியும், ஆனால் எமது போராளிகள் புரட்சியின் தொட்டில் என அறியப்படும் ஜபலியாவை காத்து வருகிறார்கள்' என்று அவர் கூறினார்.

மறுபுறம் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பலஸ்தீனர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ரபாவிலும் உக்கிர மோதல் நீடிக்கிறது. இஸ்ரேலிய துருப்புகள் கிழக்கில் அல் சலாம் மற்றும் ஜினெய்னா பகுதிகளிலும் தென்கிழக்கு குடியிருப்பு பகுதிகளிலும் தமது படை நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றன.

இஸ்ரேல் துருப்புகள் மற்றும் டாங்கிகள் மத்திய ரபாவை நோக்கி முன்னேற முயல்வதாகவும் ஆனால் ஹமாஸ் போராளிகளின் கடும் எதிர்ப்பை சந்தித்து வருவதாகவும் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் கிழக்கு ரபாவில் வீரர் ஒருவர் கொல்லப்பட்டதை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது. கடந்த வாரம் ரபாவில் தரைவழி படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் கொல்லப்பட்ட முதல் படை வீரர் இவர் என்று இஸ்ரேலிய அரச ஒலிபரப்பு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

காசா நகரின் சப்ரா பகுதியில் உள்ள ஐ.நா. மருத்துவ மையம் ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய செல் தாக்குதலில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறான மருத்துவ மையங்கள் மீது இஸ்ரேல் இந்தப் போரில் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாகவும் அவ்வாறான 171 மையங்கள் சேதமடைந்திருப்பதாகவும் அதனை நடத்தும் ஐக்கிய நாடுகள் நிவாரண மற்றும் பணிகள் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய காசாவின் புரைஜ் அகதி முகாமில் புரஷ் குடும்பத்தின் வீட்டின் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டதாக அங்குள்ள அல் ஜசீரா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

ஜபலியா நகரில் அபூ அல் ஹசனி குடும்பத்திற்கு சொந்தமான வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் போர் விமானம் நேற்று அதிகாலை வீசிய குண்டில் நால்வர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செய்தி நிறுவனமாக வபா கூறியது.

கடந்த எட்டு மாதங்களாக நீடிக்கும் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 35 ஆயிரத்தை தாண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலுக்கு ஆயுதங்களை வழங்க அமெரிக்கா திட்டம்



இஸ்ரேலின் ரபா தக்குதலுக்கு எதிர்ப்பு வெளியிட்டு வரும் நிலையில் அமெரிக்கா ஒரு பில்லியன் டொலருக்கு மேல் ஆயுதங்களை இஸ்ரேலுக்கு வழங்க விருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இந்த ஆயுதங்களில் டாங்கி குண்டுகள், மோட்டார்கள் மற்றும் மூலோபாய கவச வாகனங்கள் அடங்குவதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தத் திட்டத்தை அமெரிக்க பாராளுமன்றம் உறுதி செய்ததாக சி.பி.எஸ். செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் அதற்கு அமெரிக்க பாராளுமன்றம் முதலில் ஒப்புதல் அளிக்க வேண்டும். காசாவின் ரபா நகர் மீது இஸ்ரேல் படையெடுத்தால் அதற்கான ஆயுதங்களை நிறுத்தி வைப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தார். முன்னதாக 900 கிலோ குண்டுகளை இஸ்ரேலுக்கு வழங்குவதை நிறுத்தி வைத்திருப்பதாக பைடன் நிர்வாகம் உறுதி செய்தது.

இஸ்ரேலுக்கு வழங்கிய சில அமெரிக்க தயாரிப்பு ஆயுதங்கள் சர்வதேச சட்டத்தை மீறுவதற்கு பயன்படுத்தி இருக்கலாம் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கடந்த வெள்ளிக்கிழமை (10) வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மே மாதம் 16ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.